Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් நவ. 10-16, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 485

## சமாதானப் பேச்சுக்கு மத்தியில் பிரபாவுக்குச் சிறைத் தண்டனை!



## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள்



சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## கடவுள் சோதிக்கிறானா...?

சோதனைகள் என்பது கடவுள் மூலம் வருவதில்லை. கடவுள் போல் உயர்ந்தவர் யாரும் இல்லை. யாரையும் அவர் சோதிப்பது கிடையாது. நல்லவனா, கெட்டவனா என்று எல்லாமே இறைவனுக்குத் தெரியும். நம்முடைய இந்து மதத்தைப் பொறுத்தவரை கர்மா கோட்பாட்டை வைத்துக் கொண்டிருக்கின்றோம். சோதனை வந்தால், நாம் முன்பு ஏதோ தவறு செய்திருக்கிறோம். அதனால் தான் இப்போது சோதனை வருகிறது என்று அர்த்தம். நம்முடைய வினைகள் எல்லாம் தீர, கஷ்டங்களும் சோதனைகளும் வருகின்றன. அந்த நேரத்தில் இறைவன் எமக்குக் கை கொடுத்துக் காப்பாற்றுகிறாரே தவிர, அவர் சோதனை தருவதில்லை.

தி.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

# ஆன்மீகம்

## மனச் சோர்வடைந்தோருக்கு ஆறுதல்



மனித வாழ்க்கையில் நீண்ட காலக் கவலை, பயம், வருத்தம், அல்லது இத்தகைய மற்ற எதிர்மறையான உணர்ச்சிகளை மக்கள் அனுபவிக்கையில் அவர்கள் அடிக்கடி மனச்சோர்வடைகின்றனர். மனச்சோர்வு மிதமிஞ்சிய வருத்தத்திற்கு காரணம் ஒருவேளை அன்பானவரின் மரணம், மணவிலக்கு, வேலையிழப்பு அல்லது தீராத வியாதியாக இருக்கலாம். ஒரு துயரமான சூழ்நிலையில் அலைக்கழிக்கப் படலாம்.

"மனச் சோர்வடைந்த ஆத்மாக்களிடம் ஆறுதலாகப் பேசுங்கள்"- தெசலோனிக்கேயர் 5:14; என்ற அதிகாரத்தில் கூறப்படுகிறது. ஆகவே "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் உங்களை நான் இளைப்பாற்றுவேன்" என்று எமை இரு கரம் நீட்டி அழைக்கும் இயேசுவின் பாதத்தில் எம் துயரங்களை ஒப்படைத்து அவரின் வழியில் நாமும் சென்று மனச்சோர்வடைந்தோருக்கு ஆறுதல் சொல்லும் இயேசு கிறிஸ்துவாக நாமும் மாறுவோம்.

ஆர். பிரம்மியா-கொழும்பு-04.

## ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று குர்ஆனை அதிகமாக ஓத வேண்டும்!

பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள், "ஒரு மனிதன் ரமழான் மாதத்தில் நோற்கும் நோன்பும் அவன் ஓதும் குர் ஆனும் மறுமை நாளில் அவனுக்காகச்சிபாரிசு செய்யும். நோன்பு தனது இறைவனிடத்தில் "இறைவா! இந்த மனிதன் ரமழான் மாதத்தில் பகலெல்லாம் உண்ணாமலும், குடிக்காமலும் சுகம் அனுபவிக்காமலும் தனது உடம்பைத் தடுத்தான். ஆகவே அவனுக்காக நான் சிபாரிசு செய்கிறேன்" என்று சொல்லும். அதுபோல் குர் ஆன் தனது இறைவனிடத்தில் "இறைவா! இந்த மனிதன் ரமழான் மாதத்தில் இரவுகளில் நின்று வணங்கி, என்னை ஓதி மகிழ்ந்தான். ஆகவே அவனுக்காக நான் சிபாரிசு செய்கிறேன்." என்று சொல்லும்.

முஹம்மது ஹஸனி-கல்முனை-07.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## கவிதைப் போட்டி இல.482

பரிசுக்குரிய கவிதை

### இன்று

படர்ந்து கொண்ட யுத்த கீறல்களால்
பட்டுப் போன வாழ்வின்
வயோதிபத்தில்
கைவிட்டுப் போன சொந்தங்களின்றி
கால்தொட்டு போகுது சமாதான பூமி.

தெ.லோஜனா, கொழும்பு-06.

### கவிதை

குடையால்!
முகத்தை மறைக்கும்
மனிதா!
உனக்குமென்ன
கடன்
தொல்லையா?

முஹமட்மதிஸ், மீராவோடை.

### தாக்கம்

கடும்'ம் வெயிலால்
சுடு'ம் மணலில்
படு' கிழவரின்
மடு' தேடியலைகின்றாரோ
வடு' மாறாத மனதுடன்?

ஐ. நதர்சன், கம்பளை.



### தவிப்பு

காலத்தீயில் கருகி
இழந்துவிட்ட இளமையினை
தேடித் தேடி அலுத்தவர்கள்
அறிவதில்லை
அமைதி தரும்
மருந்து
மரணம் என்பதை

ச.றெஜினாமேரி, ஹட்டன்.

### அடிமேல் அடி

கதறியழுத கண்கள் வற்றி விட்டன,
நடந்து நடந்து கால்கள் மரத்து விட்டன,
கம்பூன்றும் வயது வந்தும்,
மகனைக் காணவில்லை.
உடல் பலம் குறைந்து,
உணர்வற்று கிடந்தும் கவலையில்லை.
ஆனால் மகனே!
கண்பார்வை மறைவதற்கு முன்
ஒரு முறையேனும் உன்னைக் காண
பாலைவனத்தையும் கடக்கத் தயங்க மாட்டேன்.

எஸ்.எம்.ரிஸாய், நாவலப்பிட்டி.

### கவலையுடன்..

குடை நிழலில்
கலங்கிய மனமொன்று
கால் நடையாய் செல்கின்றது
காலஞ் சென்ற காதலியின்
காரியத்தை முடித்து விட்டு

ஆர்.சிறீதரன், அராலி.

### முள்ளாய்...

தள்ளாடி நடக்கும் போது
நடைபாதையில்
முள்ளாய்க் குத்துகின்றது
நன்றி கெட்ட மகனின்
நாலு வார்த்தைச் சொற்கள்.

யோ.ஜோதினி, திருமலை.

### புறப்படுகிறாயோ?

பட்டும் போன நிலத்தில்
வற்றிப்போன உடலைக் கொண்டு
வைராக்கியத்தோடு நீ நடப்பது
இனியும் இந்த ஈழத்து வாழ்க்கை
வேண்டாம் என்றெண்ணி-சாவு
நெருங்கும் முன்னே சமாதிக்கு
புறப்படுகிறாயோ?

இ.தேவேந்திரன், ஹாலி-எல.

## கவிதைப் போட்டி இல.485



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.11.2002

கவிதைப் போட்டி இல.485
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### காட்டுங்கள்!

"வெட்ட வெளிதனில்
சுட்டெரிக்கும் வெயில்தனில்!
குட்டைக் குடைபிடித்து-தடியுடன்
சட்டையில்லாமல் நடைபோடும்
சட்ட மனிதரே!... எங்கே உங்கள்
வட்ட முகத்தைப் பார்ப்போம்!"

ரட்ணசபாபதி ரமேஷ், இம்பல்பிட்டியூர்.

### பதில் சொல்லுங்களே!

கொட்டும் மழையிலும்!
கோலூன்றி ஒரு ஜீவன்!
தட்டுத் தடுமாறி...!
தலைக்கு கிழிந்த குடைபிடித்து!
தரையில் தேடுவது!
தரைமட்டமாகிப் போன...!
தன் வீட்டின் அடிச்சுவட்டையா?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### மறைமுகம்

வறுமையை விளக்கும் உடை
முதுமையைக் காட்டும் நடை
சொந்த ஊருக்குபோக இல்லை தடை
தமிழன் என தெரியாதிருக்க
முகத்தை மறைக்குதோ குடை

சு.ரஜனி, பெயாவல் எஸ்டேட்.

### எங்கே?

தள்ளாத வயதிலும்
தன்னந் தனியனாய்
தகிக்கும் வெய்யிலில்
தளர் நடையிட்டுத்
தள்ளாடித் தள்ளாடி வருவதேனோ?

ஷர்மிலா காதர், திக்குவல்லை.

# உங்கள் பக்கம்

## வாக்குறுதியைத் தந்து ஏமாற்றிவிடாதீர்கள்

முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் மற்றொரு அங்கம் மாளிகாவத்தைப் பகுதியில் கடந்த வாரம் அரங்கேற்றப்பட்டது. இந்தச் சம்பவத்திற்கான காரணங்கள் அவற்றின் மூலவேர்கள் பற்றி இங்கு குறிப்பிடவில்லை.

இந்த வன்முறையின் போது முஸ்லிம்களுக்குச் சொந்தமான பெருவாரியான சொத்துக்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. வாகனங்கள், வீடுகள், சொத்துகள் எனப் பலதும் எரிக்கப்பட்டன.

இவற்றுக்கு நட்டஈடு பெற்றுத் தருவதாகச் சம்பவ இடத்திற்கு வந்த முஸ்லிம் அமைச்சர்கள் உத்தரவாதம் வழங்கினார்கள்.

பிரதமரும் இத்தகையதொரு வாக்குறுதி அளித்ததாகப் பத்திரிகைகளில் காணமுடிந்தது. கடந்த காலங்களில் முஸ்லிம் பகுதிகள் பலவற்றில் வேண்டுமென்றே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுத் தொகைகள் சரியாகவும், உரிய நேரத்திலும் வழங்கப்படவில்லை என்ற குறை தொடர்கிறது.

மாவனெல்லை, வாழைச்சேனை போன்ற இடங்களில் நடந்த சம்பவங்களில் தமது சொத்துக்களை இழந்த பலர் இன்னமும் நட்டஈடு பெற முடியாமல் தவிக்கிறார்கள். இதே நிலை மாளிகாவத்தையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தமது உடைமைகளை இழந்த ஏழை மக்கள் மத்தியில் காணப்படுகிறது. வழமைபோலவே வாக்குறுதிகளை வழங்கிப் பதற்றத்தைத் தணித்துவிட்டுப் பின்னர் மறந்துவிடும் போக்கை இம்முறையும் கடைப்பிடித்துவிடாதீர்கள் எனக் கொழும்பு மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வினயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

எம்.ஆர்.எம். இர்பான், கிராண்ட்பாஸ்.

# வாசக[ர்] சாலை

தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,

தினமுரசு வாரமலரில் சவூதி அரேபியாவிலுள்ள ஜித்தா தூதரகத்தில் இலங்கைப் பணிப்பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மறுத்து அங்குள்ள தூதரக அதிகாரிகளினால் அனுப்பப்பட்ட கடிதம் பிரசுரமாகியிருந்தது.

அந்தத், தூதரக அதிகாரிகள் எத்தகைய விளக்கங்களை அளித்துத் தங்களை நியாயப்படுத்த முயற்சித்தாலும் உண்மையில் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தூதரகங்களில் தஞ்சம் புகும் இலங்கைப் பணிப்பெண்கள் தவறாக நடத்தப்படுகிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏராளமான அனுபவங்களை இங்கிருக்கும் நாம் நேரில் சந்தித்திருக்கிறோம்.

ஆர்.எஸ். சஹீரா, தம்மாம்.

தினமுரசில் பிரசுரமாகும் சிறப்புக் கவிதைப் பகுதி இளைய கவிஞர்களுக்கு கவிதை என்றால் என்ன என்பதைச் சரியாக அடையாளப்படுத்தும் ஒரு வரவேற்கத் தக்க முயற்சி.

2 கவிதைகள் எழுதிவிட்டு தங்கள் பேருக்கு முன்னால் கவிஞர் எனப் பட்டம் சூட்டிக் கொள்பவர்கள் உலகக் கவிஞர்களின் படைப்புகளை வாசிக்க இது மிகச் சிறந்த சந்தர்ப்பம். அதே வேளை இலங்கை மற்றும் இந்திய கவிஞர்களோடு பெரும்பாலும் சிறப்புக் கவிதை சுருங்கிப் போகிறது.

அதையும் தாண்டி சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற கவிஞர்களின் படைப்புக்களை முரசின் சிறப்புக் கவிதையில் எதிர்பார்க்கிறோம்.

என். பார்த்திபன், கோட்டைக்கல்லாறு.

முரசு பல மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டது போன்றே இலங்கையின் அரசியல் நிலைவரம் ஸ்திரமற்றதாக நாளுக்குநாள் மாறிக்கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறுகிறது என்று சம்பந்தப்பட்டவர்கள் அறிக்கை விடுகிறார்கள்.

ஆனால், அந்த சுமூகம் என்பதன் அர்த்தம் என்ன என்று யாருக்கும் தெரியாது.

எதிர்வரும் டிசம்பருக்குப் பின்னர் இலங்கையின் அரசியல் எந்தத் திசையில் போகப்போகிறது? முரசு சரியாகக் கட்டியங்கூறுமா?

எஸ். அருண், முல்லைத்தீவு.



ஐரோப்பாவிலுள்ள புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கு இங்குள்ள ஊடகங்களால் இலங்கை அரசியல் குறித்து ஒரு வித்தியாசமான பாடம்தான் எப்பொழுதும் போதிக்கப்படும். யதார்த்தம் தலைகீழாக இருந்தாலும் ஈழதேசத்தில் தமிழ் மக்களின் விடுதலை நெருங்கி வருவதாக அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்குக் கடந்த நாட்களில் ஊட்டப்பட்டது. இபோது எமது போராட்டம் இத்தனை தூரம், இத்தனை தியாகங்களைக் கடந்து வந்தது. கூட்டு செயலணிக் குழுவைப் பெறுவதற்காகவும் இடைக்கால நிர வாகத்தை அடைவதற்காகவுமே எனப் போதிக்கப்படுகிறது.

நாம் நம்பியிருந்த ஒரே தலைமை விலைபேசப்பட்டு விட்டதா? என்று எண்ணத் தோன்றுகிறது.

எஸ்.குணசீலன், பரிஸ்-பிரான்ஸ்

முரசின் தீபாவளி மலர் சிறப்பாக அமைந்திருந்தது. அதிக அலட்டல் இல்லாமல் தீபாவளிக்கெனத் தத்துவங்களைக் கூறி அரைத்த மாவையே அரைக்காமல் அழகாகவும், சுருக்கமாகவும் அமைந்திருந்தது முரசு தந்த தீபாவளி இதழ்.

பி.புருனி, மாளிகாவத்தை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங் கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்கள் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# "வடக்கு-கிழக்கில் தமிழ் கட்சிகள் அரசியலில் ஈடுபட பாலசிங்கம் அனுமதி வழங்கவேண்டியதில்லை"

## —இரா.சம்பந்தன்—

வடக்கு-கிழக்கில் சகல அரசியல் கட்சிகளும் சுதந்திரமான முறையில் அரசியலில் ஈடுபட பாலசிங்கம் அனுமதி வழங்க வேண்டிய அவசியமில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் வடக்கு-கிழக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்படும் என்று புலிகளின் தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடந்த வாரம் தாய்லாந்துப் பேச்சுக்களின் முடிவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அன்ரன் பாலசிங்கத்தின் இந்தக் கருத்துத் தொடர்பில் பி.பி.சி, சிங்கள சேவைக்குக் கருத்துத் தெரிவித்த சம்பந்தன் ஜனநாயக அமைப்பொன்றின் கீழ் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டு அதிகாரங்கள் பகிரப்படும் போது வடக்கு-கிழக்கில் அரசியலில் ஈடுபட பாலசிங்கமோ வேறு எவரோ அனுமதி அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்தார். தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு அதிகார அலகும் ஜனநாயக ரீதியிலான கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் சம்பந்தன் கூறினார்.

இதேவேளை கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ் கூட்டமைப்பை மதிக்காத விதத்திலும் இனிமேல் எல்லாம் புலிகளே என்ற கருத்துப் படவும் கடந்த தாய்லாந்துப் பேச்சுக்களின் முடிவில் தெரிவித்த கருத்துக்களுக்கு இம்முறை வருத்தம் தெரிவிக்கும் தொனியில் பதிலளித்தார். தான் கூறியதை தமிழ் கட்சிகள் பிழையாக கருதக் கூடாது என்றும் தமிழ் கட்சிகளும் தீர்வைத் தேடும் முயற்சியில் ஒரு அங்கமாக தங்களுடன் இணைந்து செயற்படுவதாகவும் அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

இவ்வாறு அவர் கூறியது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியிடம் பி.பி.சி. தமிழோசை கருத்துக் கேட்ட போது

"பாலசிங்கம் அப்படிச் சொல்லியிருந்தால் வரவேற்கத் தக்கது. பாலசிங்கம் சமாதானத்தைக் குழப்பக் கூடாது என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன்" என அவர் பதிலளித்தார். ■

## ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளின் போது பாதுகாப்புத்தரப்பினர் உரிய நேரத்தில் செயற்பட்டிருந்தால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை பாரிய அளவில் தவிர்த்திருக்கலாம் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான றவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பிய றவூப் ஹக்கீம் செவ்வாய்கிழமை மாளிகாவத்தைப் பகுதிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து உரையாடினார்.

## புலிகளின் தாக்குதலால் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி பி.ச. எதிர்க்கட்சித் தலைவர்

சகல தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்குவதாக விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்தில் தெரிவித்திருக்கும் அதேவேளை சாவச்சேரி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சாள்ஸ் புலி உறுப்பினர்களால் கடந்த வாரம் கடுமையாகத் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் ஈ.பி.டி.பி உறுப்பினரான சாள்ஸை வழிமறித்து கடுமையாக தாக்கி காயப்படுத்தியுள்ளனர். வெட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் ஆபத்தான நிலையில் உள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி புலிகள் இயக்கத்தின் பிரதேச பொறுப்பாளர்கள் இருவர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

## மு.கா. எம்.பிக்கள் பிரதமருடன் சந்திப்பு

முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழு பாராளுமன்ற உறுப்பினர்கள் புதன்கிழமை மீண்டுமொரு முறை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதா? இல்லையா? என்பது குறித்து இந்தச் சந்திப்பின் பின்னரே முடிவு செய்ய இருப்பதாக அதிருப்திக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ■

## ஐ.தே.க. எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் இரகசிய சந்திப்பு!

கடந்த வாரம் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் தங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரைச் சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் ஜனாதிபதியைச் சந்தித்தால் அது உடனடியாகப் பிரதமருக்குத் தெரிய வந்து விடும் என்று கருதும் பல ஐ.தே.க எம்.பிக்கள் ஜனாதிபதியைச் சந்திக்கக் கொழும்புக்கு வெளியில் ஓரிடத்தில் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டிருந்தனர். அதனடிப்படையில் திருமதி குமாரதுங்க கடந்த வாரம் கண்டியில் தங்கியிருந்து இந்த எம்.பிக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது புதிய அரசாங்கமொன்றை நிறுவது குறித்துப் பேச்சுக்கள் இடம்பெற்றதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பிரபாகரன் மீதான தீர்ப்பு குறித்து தேரர்களுக்கு விளக்கம்

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் 200 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டதையடுத்து, புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் மீது சட்ட நடவடிக்கைகளைத் தொடர கொழும்பிலுள்ள சில அமைப்புக்கள் தயாராகி வருகின்றன. புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் தலைநகரைத் தாண்டிச் செல்லும் போது அவர்களைக் கைது செய்யுமாறு கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் கடந்த திங்களன்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கண்டி, தலதாமாளிகைக்குச் சென்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரைச் சந்தித்த போது அவர் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட 200 ஆண்டுகால சிறைத் தண்டனைக்கு என்ன நடக்கும் என்று அமைச்சர் பீரிஸிடம் வினவியுள்ளார்.

பதிலளித்த ஜீ.எல். பீரிஸ் அது ஒரு பிரச்சனையல்ல என்று குறிப் பிட்டதுடன் உலகின் பலநாடுகளிலும் நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களின் தலைவர்களுடன் அரசாங்கங்கள் கொடுக்கல் வாங்கல் செய்த முன்னுதாரணங்களைச் சுட்டிக் காட்டினர்.

## முஸ்லிம்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் காணிகளை திருப்பி ஒப்படைக்க உடன்பாடு

கிழக்கில் முஸ்லிம்கள் தற்போது பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் தமிழர்களுக்குச் சொந்தமான வயல் காணிகளை அடுத்த இரண்டு மாத காலத்திற்குள் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாய்லாந்தில் புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதி கருணாவுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம்கள் தற்போது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் வயல் நிலங்களை மீண்டும் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க அமைச்சர் றவூப் ஹக்கீம் சம்மதம் தெரிவித்துள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் பயிர்ச் செய்கையின் அறுவடையின் பின்னர் இந்தத் திட்டம் அமுலுக்கு வரும்.

இதன் பிரகாரம் முஸ்லிம்களின் வயல் நிலங்களில் விவசாயம் செய்யும் தமிழர்களும் அக் காணிகளைத் திருப்பி முஸ்லிம்களிடம் ஒப்படைக்க வேண்டும். ■

## "இலங்கை அரசுக்கு கடன் பெற்றுக் கொடுக்க புலிகள் நாடுநாடாக பயணம் செய்ய சம்மதித்திருக்கிறார்கள்"

### கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

தாய்லாந்துப் பேச்சுக்களில் தமிழ் மக்களுக்கு குறிப்பிடத்தக்க இலாபம் எதுவும் கிட்டவில்லை என்று புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். தாய்லாந்துப் பேச்சுக்கள் தொடர்பாக வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த கலாநிதி விக்கிரமபாகு, "இடைக்கால நிர்வாகம் கிடைக்குமாயிருப்பின் அது தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட ஓரளவு காத்திரமான தற்காலத் தீர்வு எனக் கருதலாம். ஆனால், இப்போது இடைக்கால நிர்வாக சபை கைவிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. வெளிநாடுகள் பணம் கொடுத்தால் அதனை எப்படிச் செலவழிப்பது என்பதற்குச் சில குழுக்கள் அமைக்கப்படுவதைத் தவிர தாய்லாந்தில் வேறெதுவும் முன்னேற்றகரமாக இடம்பெறவில்லை" என்று கூறினார்.

தமிழீழப் போராட்டத்திற்குத் தீவிரமாக ஆதரவு தெரிவித்ததுடன் தமிழ் மக்கள் நசுக்கப்படுகிறார்கள், அவர்களுக்கான உரிமைகளை தென்னிலங்கை அரசு வழங்க வேண்டும் என்ற தனது கருத்திலிருந்து விலகாது இன்றுவரையில் உறுதியாக இருக்கும் இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் கருத்து வெளியிடுகையில், அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்குமாறு ஆவணங்களை ஃபயில்களைச் சுமந்து கொண்டு நாடுநாடாகச் செல்ல புலிகள் ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்தனை தியாகங்களைச் செய்து நடத்திய விடுதலைப் போராட்டம் அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்குமாறு சிபாரிசு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றா என எதிர் காலத்தில் தமிழ் இளைஞர்கள் கேள்வி எழுப்புவார்கள் என்றும் அவர் கூறினார். ●

## மாவீரர் தின கொண்டாட்டங்களுக்காக புலிகள் விசேட ஏற்பாடு

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை திருகோணமலையில் அனுஷ்டிக்கப்படவிருக்கும் புலிகளின் மாவீரர் தினக் கொண்டாட்டங்களுக்காக திருமலையில் ஒவ்வொரு தமிழ் அரச ஊழியரும் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளதோடு ஆட்டோ வண்டி வைத்திருப்பவர்கள் 300 ரூபா செலுத்த வேண்டுமெனவும் உத்தரவிடப் பட்டுள்ளது. வியாபாரிகளுக்கு அவர்களது வியாபாரத்தின் தன்மை அளவு என்பவற்றைப் பொறுத்து வரிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. 27 ஆம் திகதி இரவு 7.26 க்கு ஒவ்வொரு வீட்டிலும் விளக்குகள் ஏற்றப்பட வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. ●

## வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2 வது வரவு செலவுத் திட்டம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. இம்முறை வரவு செலவுத் திட்டம் தனியார் மயமாக்கலை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புகள் குறித்த பிரேரணைகளும் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பாரிய நிதியுதவிகளை எதிர்பார்த்து இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். தேர்தல் ஒன்று விரைவில் நடைபெறலாம் என்ற சாத்தியம் காணப்படுகின்ற போதும் குறிப்பிடத் தக்க அளவில் மக்களின் பொருளாதார நெருக்கடியைக் குறைக்கும் யோசனைகள் எதுவும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை. ■

# முரசம்

## அதிகம் எதிர்பார்க்க முடியாத பட்ஜெட்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் விவாதங்கள் பாராளுமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளன. இலங்கையின் புதிய அரசாங்கத்தின் இப் பதினொரு மாத கால ஆட்சியில் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றங்களை இன்னும் ஈட்டிக் கொள்ளாத நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மட்டுமே மூலதனமாகப் பயன்படுத்தி, நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கைகளுடன் மட்டும் ஒரு சொப்பன சுகத்தில் நகர்ந்துகொண்டிருக்கிறது நாட்டு மக்களின் வாழ்க்கை. ஆனாலும், நாளுக்கு நாள் விலையேற்றங்கள் நிகழ்ந்தபடி வாழ்க்கையைப் பாரமாக்கிச் செல்லும் நிகழ்வுகளையே யதார்த்தத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. வெளிநாட்டு நிதியுதவி என்பதைவிட இன்றைய அரசாங்கத்தின் அடுத்த வழிமுறையானது தனியார் மயப்படுத்தலையே நம்பியுள்ளது. இத் தனியார் மயப்படுத்தல் தவிர்க்க முடியாத ஒரு மார்க்கமாக இன்று நிர்ப்பந்தமாகிவிட்டாலும், அதுவே அடுத்ததொரு அதள பாதாளமாகிவிடாதிருக்க என்ன உத்தரவாதங்கள் இருக்கின்றனவென்பது யாருக்கும் தெரியாது. தனியார் மயப்படுத்தலுக்கான களச் சூழலை ஏற்படுத்தும் நிபந்தனைகளை நிறைவேற்றும் பாங்கில் இந்நாட்டு மக்களின் தொழிலுரிமைகள், தொழிற் சங்க உரிமைகள், மற்றும் நாட்டின் பொது வளங்கள், பொதுச் சேவைகள் பற்றிய விடயங்களில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படப் போகின்றதென்பதும் புரியாதிருக்கிறது. எல்லாம் நன்மைக்கே என்று நடந்தேறும் விடயங்களை அதன் போக்கில் விடுத்திருந்தால் அது இறுதியில் எந்த சக்திகளின் நன்மைக்கு வடிகாலாகிவிடப்போகிறதென்பதும் கேள்விக்குரியதாகும். இந் நிலையில் இப்போது சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். வாழ்க்கைப் பளுக்களை மேலும் சுமத்தாதிருப்பதற்கான ஒரே விடயம் மட்டுமல்ல இங்கு அக்கறைக்குரியது. தனியார் மயப்படுத்தலுக்காக அகலத் திறந்துவிடப்படும் பொருளாதாரக் கதவுகள் மறுபுறம் பொதுமக்களின் வாசல்களை அடைத்துவிடாதிருப்பதை எவ்வாறு உத்தரவாதப்படுத்துகிறதென்பதையும் நாம் உற்று நோக்க வேண்டும். இதேவேளை நாட்டின் உற்பத்தித் துறையில் என்ன முன்னேற்றங்களுக்கான வாய்ப்புகள் தென்படுகின்றன, அவற்றில் பரந்து பட்ட மக்களின் பங்களிப்பு எவ்வாறு அமையப்போகிறது என்பதையும் நாம் ஆராய வேண்டும். நெருக்கடியான ஒரு பொருளாதார நிலையில், அரசியல் ஸ்திரமற்ற நிலையில் முன்வைக்கப்படும் இந்த பட்ஜெட்டில் நாம் அதிகம் எதிர்பார்த்திருக்கவும் முடியாதுதான்.

■■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சமாதானப் பேச்சுக்கு மத்தியில் பிரபாவுக்குச் சிறையா?

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளின் மத்தியில் யாவரையும் திகைக்க வைத்த செய்தி, புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கு இலங்கையின் உயர் நீதிமன்றம் வழங்கிய 200 ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனைத் தீர்ப்பு.

1996ம் ஆண்டு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் அனர்த்தங்கள் தொடர்பான வழக்கின் தீர்ப்பே இப்போது வெளியாகியுள்ளது.

இதில் புதுமை என்னவென்றால், இவ் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பித்த அதே தினத்தில் இத் தீர்ப்பை நீதிமன்றம் அறிவித்திருந்ததுதான்.

புதுமை என்பதைவிட இதை அறிவிக்க ஏன் இத் தினத்தைத்தான் நீதிமன்றம் தேர்ந்தெடுத்தது என்பது பலத்த சந்தேகங்களுக்கு இடமளிப்பதாக அமைந்திருந்தது.

தீர்ப்பு இதுவாகத்தான் இருக்குமென்பதை அரசாங்கத் தரப்பினர் அறியாமல் இருந்திருக்கிறார்கள் என்பது நம்பக் கடினமானதாக இருந்தாலும், இத் தினத்தில்தான் தீர்ப்பை வெளியிடவுள்ளார்கள் என்பதையுமா அறியாதிருந்திருப்பார்கள்?

இலங்கை அத்துணை கனகச்சிதமான நீதி நெறிகளைப் பேணும் ஒரு நாடல்ல.

பல வழக்குகளின் தீர்ப்புகள் பற்றிய ஊகங்கள் முன்கூட்டியே அனுமானிக்கக் கூடியவையாக இருந்திருக்கின்றன.

எனவே இத்தகைய ஒரு தீர்ப்பை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது போல் பாசாங்கு செய்வது சிறுபிள்ளைத்தனமானது.

அவ்வாறான ஒரு தீர்ப்பில் தலையிட முடியாவிட்டாலும், வெகு நாட்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒழுங்குப்படி நிகழ்ந்தேறும் பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப தினத்தில் அபசகுனச் செய்தியாக அமையாவண்ணம் இத் தீர்ப்பு அறிவிக்கும் தினத்தை மாற்றியமைத்திருக்க அரசாங்கத்தால் முடியாதென்பதில்லை.

இவ் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே அதன் நீதித்துறை இருக்கிறது, அதற்குப் பொறுப்பான நீதியமைச்சரும் அரசாங்கத்தவரே.

எது எப்படியோ, தீர்ப்பு இவ்வாறு வெளியாகிவிட்டது.

இச் செய்தி வெளியானதும், சமாதானப் பேச்சுவார்த்தை குழம்பிவிடப் போகிறதோ என்ற அச்சம்தான் யாவருக்கும் எழுந்தது.

ஆனாலும் பேச்சுவார்த்தையில் அரசாங்கத் தரப்பில் தலைமை தாங்கிய அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இத் தீர்ப்பு பேச்சுவார்த்தையைப் பாதிக்காதெனத் தெரிவித்திருந்தார்.

புலிகளின் தலைவரை நாம் சிறையிலடைக்கிறோம், நீங்கள் சமாதானம் பேச வாருங்கள் என்று கூறுவது வேடிக்கையானது.

இது குறித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட புலிகள் தரப்புத் தலைவர் அன்ரன் பாலசிங்கத்தினால் உடனடியாகத் தெரிவிக்கப்பட்ட கருத்தும் இது பேச்சுவார்த்தையைப் பாதிக்காதென்பதாகவே கூறப்பட்டது.

எனினும் பின்னர், இத்தகைய விடயங்கள் சமாதான முயற்சிகளைப் பாதிக்குமெனவும், யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் குற்றவியல் நடவடிக்கைகளாகக் கணிக்க முற்படலாகாதென்றும், அவ்வாறாயின் தாமும் இலங்கை அரசாங்கத்தின் போர்க்கால நடவடிக்கைகள் பற்றிய இத்தகைய தீர்ப்புகளை வழங்குகின்ற புறச் சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்குவதாக அமைந்துவிடுமெனவும் தமது ஆட்சேபனையைப் புலிகள் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

அமைச்சர் பீரிஸ் இத் தீர்ப்பு நீதிமன்றத்தைச் சார்ந்தது, அதில் தன் அரசாங்கத்துக்குத் தலையிடும் அதிகாரமில்லையென்ற நிலையை வகிக்க முனைந்தால், அவரின் நிலையின் படியே, புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட இவ் ஆட்சேபனையும் ஒரு செவிடன் காதில் ஊதிய சங்கு என்பதாகவே ஆகிவிடும்.

ஏனெனில், நீதித்துறை சுதந்திரமானதெனில் புலிகளின் இவ் ஆட்சேபனையை அவரால் நீதித் துறையில் செயற்படுத்த முடியாது.

எனினும் அவர்கள் இத் தீர்ப்பின் விவகாரத்தை ஒரு புறம் வைத்துவிட்டு இச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்துடன் பல்வேறு இணக்கமான முடிவுகளை எய்துவதற்கு விழைந்திருந்தார்கள்.

பேச்சுவார்த்தை ஒருவாறு ஒப்பேறிவிட்டது என்பதால் இத் தீர்ப்பின் பாரதூரத் தன்மையைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

இத் தீர்ப்பின் அடிப்படையில் புலிகள் இயக்கத் தலைவர் கடூழியச் சிறைத் தண்டனை பெற்ற குற்றவாளி- அவரைக் கைது செய்யப் புலனாய்வுத் துறையினருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. அவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஒரு வாதத்துக்கு எடுத்துக் கொள்வோம், புலிகள் ஒரு இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்கிறார்களென. அவ்வாறாயின்

> கண்ணிவெடிகளை அகற்றுவதென்பதை இலங்கையில் ஒரு பாரிய மனிதாபிமான நடவடிக்கையாக சர்வதேச சமூகம் கருதுகின்ற வேளையில் புலிகள் கண்ணி வெடிகளை எடுத்துச் சென்றார்களெனக் காண்பிப்பது புலிகள் தரப்பை இக்கட்டுக்குள் ஆழ்த்துவதாக இருந்தது.

புலிகள் தலைவரால் அதற்கு முதலமைச்சராக வர முடியாது.

இன்னொரு வாதத்துக்கு, அடுத்த பேச்சுவார்த்தைகளில் புலிகள் தலைவர் கலந்து கொள்ள முன்வருகிறாரென வைத்துக் கொள்வோம். அவரால் கொழும்பு வந்து விமானமேற முடியாது.

எனவே, இத் தீர்ப்பு சமாதான முயற்சிகளைப் பாதிக்காதென அமைச்சரால் எவ்வாறு அறுதியாய்த் தெரிவிக்க முடியும்? - இது அவருக்கும் தெரிந்த விடயமே.

ஆக, இதை அவர் ஒரு ஒப்புக்குக் கூறி, நிலைமையைச் சமாளிக்க முயன்றார் என்றுதான் கொள்ள வேண்டும்.

நல்ல வேளையாக பாலசிங்கம் அவருக்குக் கைகொடுத்தார்.

ஆனாலும் நிலைமை இன்னும் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது.

இத் தீர்ப்பை இரத்துச் செய்யும் வரை புலிகள் தரப்பின் தலைமீது ஒரு கத்தி தொங்கப் போடப்பட்ட மன உணர்வையே கொடுக்கும்.

அத்தோடு, புலிகள் தலைவருக்கு ஒரு சிறைப் பயமுறுத்தலை வழங்கியே இப் பேச்சுவார்த்தையில் புலிகளை இணங்கச் செய்வதாக வெளித்தோற்றமொன்றைக் கொடுத்து, புலிகள் தரப்புக்குப் பெருத்த அசௌகரியத்தைக் கொடுப்பதாக விளங்கும்.

இதேவேளை, இப் பேச்சுவார்த்தையில் புலிகள் தரப்புக்கு அடுத்த அசௌகரியத்தைக் கொடுத்த விடயம் இப் பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்த வேளையில் திருகோணமலையில் கண்ணி வெடிகள், வெடிமருந்துகள் சகிதம் புலிகளின் படகொன்று பிடிபட்ட விடயமாகும்.

இப் படகில் 14 வயது சிறுவனொருவனும் இருந்ததாகக் கூறுவது, பேச்சுவார்த்தையை சர்வதேச கவனத்துக்கு உட்படுத்திய நிலையில் சிறுவர்களைப் போராட்டத்தில் சேர்க்கலாகாதென்ற ஐ.நா. தீர்மானத்துக்கு முரணான வகையில் புலிகள் நடந்து கொள்கிறார்களெனக் குற்றம் சாட்டுவதாக அமைந்திருந்தது.

கண்ணிவெடிகளை அகற்றுவதென்பதை இலங்கையில் ஒரு பாரிய மனிதாபிமான நடவடிக்கையாக சர்வதேச சமூகம் கருதுகின்ற வேளையில் புலிகள் கண்ணி வெடிகளை எடுத்துச் சென்றார்களெனக் காண்பிப்பது புலிகள் தரப்பை இக்கட்டுக்குள் ஆழ்த்துவதாக இருந்தது.

ஆயினும் இது புலிகளின் தலைமைக்குக்கட்டுப்பட்டு நடைபெற்ற ஒரு விடயமல்ல, அவர்கள் தம்மிஷ்டப்படி நடந்துள்ளார்கள், அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாமெனக் கூறி அன்ரன் பாலசிங்கம் நிலைமையைச் சமாளித்துக் கொண்டார்.

ஆனாலும், இப் படகில் கைதானவர்கள் இது புலிகளின் உத்தரவுப்படி, திருகோணமலையில் அதற்குரிய புலி உறுப்பினர்களிடம் வழங்குவதற்காகவே எடுத்து வரப்பட்டதெனக் கூறியதாகப் பாதுகாப்புப் படைகளால் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் நல்ல வேளையாக இவ் விடயம் பெரிதுபடுத்தப்படவில்லை.

இத்தகைய தடங்கல்கள் ஒருபுறமிருக்க, மறுபுறம் தற்போது தோன்றியுள்ள அரசியல் சூழ்நிலைக்கும் முகம் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது.

குறிப்பாக அரசாங்கம் தனது 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கையைப் புலிகள் தரப்புக்குக் கடந்த பேச்சுவார்த்தையில் வழங்கியிருந்தது.

இதை நம்பியே, அன்ரன் பாலசிங்கம், அப் பேச்சுவார்த்தையின் பின் வழங்கிய பேட்டியில், அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இம் முயற்சி வெற்றியளிக்க வேண்டுமெனக் கூறியிருந்தார்.

அவ்வாறு ஜனாதிபதியின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில்தான் புலிகள் இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கோரியிருந்தனர். - தாம் நிச்சயம் இடைக்கால நிர்வாகத்தைப் பெறுவோமென அன்ரன் பாலசிங்கம் உறுதிபடக் கூறியிருந்தார்.

ஆனால் 19ஆவது திருத்தச் சட்டம் தோல்வியடைந்தது மட்டுமன்றி, கட்சி மாறி வாக்களிக்கும் பேச்சுக்கே இடமில்லாததாக்கி, அரசாங்கத்தால் முக்கியமான விடயங்கள் எதையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொடுக்க முடியாதென்ற ஒரு பலவீனமான நிலைக்குத் தள்ளிவிட்டது.

அரசாங்கம் பலவீனமானதாகிவிட்டது என்பதை உணர்ந்தும் புலிகள் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை இன்னும் உபயோககரமான விடயமாக எடுத்துக்கொண்டுள்ளது. - இது இச் சமாதான முயற்சிக்கு இன்னும் உயிரளித்துக் கொண்டிருக்கிறது.

அதேவேளை, புலிகள் எதிர்பார்த்த விடயங்கள் அரசியலில் தலைகீழாக மாறிவிட்ட நிலையிலும், அவர்கள் அதையிட்டு மனந்தளராமல், புதிய நிலைமைக்கு உரிய வகையில், உடனடியாகவே தம் கோரிக்கைகளையும் மறுசீரமைத்துக் கொள்ளவும் புதிய வழிவகைகளைத் தெரிவு செய்து கொள்ளவும் தயாராக இருந்தார்கள்.

முன்னர் வலியுறுத்திய இடைக்கால நிர்வாகம் என்ற அவர்களின் பிரதானமான கோரிக்கையை தற்போதய சூழ்நிலையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாதென்பதை உணர்ந்து, அதைக் கைவிட்டு, மாற்று வழியாக கூட்டுச் செயலணியை நடைமுறைப்படுத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் உத்திகளைச் சிந்தித்தார்கள்.

அக் கூட்டுச் செயலணி என்ற அமைப்புக்கூட சட்ட வடிவம் பெறுவதிலுள்ள சிரமங்களைப் புரிந்து கொண்டு அதையும் மாற்றியமைத்து, பேச்சுவார்த்தைக்கான ஒரு உபகுழு என்ற வடிவத்தில் செயற்படுத்த இம்முறை இணக்கம் கண்டுள்ளார்கள். இதில் புலிகள் தரப்பில் நான்கு பிரதிநிதிகள், அரசாங்க தரப்பில் 4 பிரதிநிதிகள் எனவும் அரச தரப்பின் நால்வரில் முஸ்லிம்களுக்கு 2 பிரதிநிதித்துவம் வழங்குவதாகவும் உடன்பாடு கண்டுள்ளார்கள்.

மேலும், உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராயும் மற்றொரு உபகுழுவை அமைக்கவும் வழிசெய்து கொண்டார்கள். இதில் புலிகள் தரப்பில் 9 பேரும் அரச தரப்பில் 9 பேருமாக மொத்தம் 18 பேர் அடங்குவர்.

இவற்றுக்கு மேலதிகமாக, அரசியல் தீர்வுக்கான விடயங்களை ஆராயும் அரசியல் குழுவொன்றையும் அமைப்பதற்கும் இணக்கம் கண்டுள்ளார்கள். நான்கு பேர் கொண்ட இக் குழுவில் புலிகள் இருவர், அரசாங்க தரப்பின் இருவருள் ஒன்று முஸ்லிம்களுக்கென இணக்கம் கண்டுள்ளார்கள்.

இக் குழுக்களிலும் முஸ்லிம்கள் அரசாங்க தரப்பின் இடத்திலிருந்தே தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பது வேறு விடயம்.

எவ்வாறாயினும் இத்தகைய முட்டுக்கட்டைகளை எதிர்கொண்ட நிலையிலும் அவற்றை மேவி இச் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல வழிகோலியுள்ளார்கள்.

இதேவேளை, எதிர்வரும் இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் புலிகள் பங்குபற்றவுள்ளார்கள்.

இது தொடர்பாக புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசவும் ஏற்பாடாகியுள்ளது.

இத்தகைய சந்திப்பானது 90களில் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடந்த சந்திப்பின் ஒரு தசாப்த காலத்தின் பின் நிகழும் இருதரப்பு உயர் மட்டச் சந்திப்பென்ற முக்கியத்துவத்தைப் பெறும்.

எவ்வாறாயினும், புலிகள் தலைவருட்பட புலிகள் தரப்பினருக்கு ஏற்பட்ட அவமானகரமான நிலைமைக்கு மத்தியிலும், இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், இந்த இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையை, புதிய அரசியல் நிலைமைக்கேற்ப, பல முக்கிய முடிவுளோடு வெற்றிகரமாக நிறைவேற்றியதானது, அரசாங்கத்தின் கையில் தங்கியிராத, புலிகளால் வழங்கப்பட்ட பிச்சை என்பதாகவே புலப்படுகிறது. ■

நரன்

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள்

# மாளிகாவத்தையில் என்ன நடந்தது?

**எம். பி. எம். பர்ஸான்**

கடந்த வாரம் கொழும்பு மாளிகாவத்தைப் பகுதி போர்க்களமாக மாறியது.

இதுவரை காலமும் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் வாழ்ந்த சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் தமது நேற்றைய தினங்களை மறந்து, ஒருவரை ஒருவர் வெட்டிக் காயப்படுத்தி, சொத்துக்களை அழிக்கும் விதத்தில் போராளிகளாக மாறினார்கள்.

கொழும்பு பேஸ் லைன் வீதி, போதிராஜ மாவத்தை பகுதி சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் ஒற்றுமையாக வாழ்ந்த இடம். கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைகளின் மூலவேர் 1999 ம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கிறது.

பிரதான வீதியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் போதிராஜ மாவத்தையில் முஸ்லிம் சிறுவர்களுக்கு மார்க்கப் பாடம் சொல்லிக் கொடுக்கும் மத்ரசா ஒன்று இயங்கி வந்தது. இந்த மத்ரசாவை தொடர்ந்து அதே கட்டடத்தில் நடத்துவதற்குப் போதிய இடவசதி காணப்படவில்லை. இதனால் அருகிலிருந்த கடை ஒன்றின் ஒரு பகுதியும் இந்த மத்ரசாவுடன் இணைக்கப்பட்டது. இது முறையாக செங்கல் மூலம் கட்டப்பட்ட ஒரு கட்டடம்அல்ல என்றாலும் சிறுவர்கள் அதில் பாடம் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த மத்ரசாவின் முழு நீளம் 20 அடிக்கு மேற்படாமலும் அகலம் 10 அடிக்கும் குறைவாகவுமே இருந்தது. இதற்கருகில் ஒரு பேர்ச்சஸ் தரிசு நிலம் காணப்பட்டது. இது நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான நிலம். இந்த ஒரு பேர்ச்சஸ் நிலப் பரப்பில் போதிராஜ மாவத்தை பிரதேச பௌத்த இளைஞர் அமைப்பு புத்தர் சிலையொன்றை நிர்மாணித்திருந்தது. இந்த இடத்தில் நிரந்தர பௌத்த வழிபாட்டுத் தலம் ஒன்றை அமைக்க போதிராஜ மாவத்தை விகாரை நிர்வாகமும் இளைஞர்களும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனால் சமீப நாள் ஒன்றில் இந்தப் புத்தர் சிலை இங்கிருந்து காணாமற் போனது. இதனை முஸ்லிம் இளைஞர்கள் எடுத்துச் சென்று அருகிலுள்ள ஆற்றில் வீசியிருந்ததாக கூறப்பட்டதை அடுத்து இரு இன இளைஞர்களுக்கும் இடையில் முறுகல் ஆரம்பமானது.

இதற்கிடையில் இந்த புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த ஒரு பேர்ச்சஸ் நிலத்தை அரசாங்கத்திடமிருந்து மத்ரசாவின் பாவனைக்குப் பெற்றுக் கொள்ள அப்பகுதி முஸ்லிம் தலைவர்கள் ஆர்வம் காட்டினர். இத

> இந்தக் கட்டடத்தை அமைப்பது தொடர்பாக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்த ஆவணங்கள் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் இருந்து மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகிறது.

ணடிப்படையில் முறையான சட்ட அங்கீகாரத்தைப் பெற்று இந்த இடத்தை முஸ்லிம்கள் கொள்வனவு செய்தனர்.

இங்கு மத்ரசாவைப் புதிதாக நிர்மாணிக்கும் பணிகளும் இடம் பெற்று வந்தன. இதற்கென நகர சபை அங்கிகாரமும் வழங்கியிருந்தது. ஆனால் இங்கு மத்ரசாவுக்குப் பதிலாக பள்ளிவாசல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாகப் பிரதேச பௌத்த இளைஞர்களுக்கு யாரோ ஒருவரால் தகவல் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் குழப்பம் அடைந்த சிங்கள இளைஞர்கள் இந்தக் கட்டட நிர்மாணத்தை நிறுத்துமாறு மாளிகாவத்தை பொலிஸில் முறைப்பாடு செய்தனர். பொலிஸ் இந்தப் பிரச்சனையை நீதிமன்றத்திடம் கொண்டு சென்றது.

இதனை அடுத்து கட்டட நிர்மாணத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது. இது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம்.

இந்த இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட்ட நாட்களிற் கூட மாளிகாவத்தைப் பகுதியில் ஓரளவு பதற்றமான சூழ்நிலை காணப்பட்ட போதும் அது மோதலாக வெடிக்கவில்லை.

நீதிமன்றம் தொடர்ந்து வழக்கை விசாரணை செய்ததில் இந்தக் கட்டட நிர்மாணம் நகர சபையின் முறையான அனுமதியுடன் நடைபெறுவதாலும், இதில் சட்டவிரோத செயற்பாடுகள் எதுவும் இல்லை என்பதாலும் மத்ரசா அமைப்பதைத் தொடர அனுமதி வழங்கியது.

இந்தக் கட்டடத்தை அமைப்பது தொடர்பாக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்த ஆவணங்கள் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் இருந்து மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகிறது. இப்போது இது குறித்து இரகசியப் பொலிசார் பிறிதொரு விசாரணையை ஆரம்பித்துள்ளார்கள். அந்த ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் இது விடயம் பற்றி வாய்திறக்கவில்லை.

எவ்வாறெனினும் இந்த இடத்தில் பௌத்த இளைஞர்கள் புத்தர் சிலையொன்றை மீண்டும் நிறுவினர். இது கடந்த 30 ம் திகதி அடையாளம் தெரியாத சிலரால் உடைத்தெறியப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஆத்திரமடைந்த சிங்கள இளைஞர்கள் பேஸ் லைன் வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதுடன் நேரம் செல்லச் செல்ல அமைதி வழி முறை வன்முறையாக உருமாறியது. வீதியில் சென்ற வாகனங்கள் தாக்கப்பட்டன. லொறிகள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் என ஏராளமான வாகனங்கள் எரிக்கப்பட்டதுடன் வீடுகளுக்குள் புகுந்து முஸ்லிம்கள் பலர் மோசமாக தாக்கப்பட்டார்கள். மூன்று பிள்ளைகளின் தந்தையான ஒரு முஸ்லிம் நபர் உயிரிழந்தார். 20 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

உயிரிழப்பு, பொருட் சேதம் என்று ஏகப்பட்ட அழிவுகள் நிகழ்ந்த பின்னர் வழமை போலவே அரசியல்வாதிகள் ஒன்று கூடி, சமாதானக் குழுக்களை அமைத்து, இன ஒற்றுமை குறித்துப் பேசி, பாதிக்கப்பட்டவர்களின் ஆத்திரத்தை அடக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். குறைந்தபட்சம் இரண்டு நாட்கள் மத்திய கொழும்பு பிரதேசத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. இன வன்முறைகளைத் தூண்ட எடுக்கப்பட்ட சில முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. இந்த வன்முறையின் போது அதிக அளவிலான பொருட் சேதங்கள் ஏற்படுவதற்குப் பாதுகாப்புத் தரப்பினரின் அசமந்தப் போக்கும் ஒரு பிரதான காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அரசியல் தலைவர்களிடமிருந்து உத்தரவுகள் வரும் வரை பொலிசார் நடப்பதை வேடிக்கை பார்த்தார்கள் என்பது முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வெளிப்படும் பிரதான குற்றச்சாட்டு.

மாளிகாவத்தைப் பிரதேசம் பாதாள உலகச் செயற்பாடுகளுக்கு மிகவும் பிரசித்தமான இடம். குறிப்பாக முஸ்லிம்களால் வழிநடத்தப்படும் கடும்போக்குடைய பாதாள உலகக் கோஷ்டிகள் இந்தப் பகுதிகளில் இயங்குகின்றன என்பது ஒன்றும் இரகசியம் அல்ல.

இந்த மோதல் இடம்பெற்ற போது பாதாள உலக செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பலர் பிரதேசத்தை விட்டு வேறு இடங்களுக்குத் தப்பிச் சென்றதாக பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. காரணம் இந்த இன மோதல் தங்களது கணக்கில் சேருமென்ற பயம்தான்.

எவ்வாறெனினும் இன்று பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுக் கணக்கெடுப்புகள் நடைபெறுகின்றன. இனியும் இவ்வாறானதொரு மோதல் இடம்பெற மாட்டா என்றோ அப்பாவிப் பெதுமக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியும் என்றோ யாரும் கூறுவதாக இல்லை. அப்படிக் கூறினாலும் அதை நம்பும் நிலையில் அந்தப் பகுதி முஸ்லிம்கள் இல்லை. ▫

---

# ரஜினியின் மக்கள் இயக்கம்!

உண்ணாவிரதம் இருந்து ஊரைக் கலக்கியாயிற்று. இப்போது ஒரு மக்கள் இயக்கத்தைத் துவக்கவிருப்பதாகக் கூறுகிறார், அகில இந்திய அளவில் நதிகளையெல்லாம் இணைப்பதற்காகவாம்.

ஆனாலும் தான் அரசியலில் நுழைவது பற்றி இன்னும் தெளிவாகக் கூற மறுக்கிறார்.சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மெதுவாக, மிகக் கவனமாகக் காய்களை நகர்த்துவது போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறார்.


ஆனால், எந்த அளவு அவருடைய அணுகுமுறை அவருக்கு பயன்தரும், இல்லை தமிழ்நாட்டில் தான் எந்த அளவு ஆரோக்கியமான மாற்றங்களுக்கு வழி வகுக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஆனாலும் நடிகரின் அரசியல் பிரவேசம் வெகுதூரத்திலில்லை என்பது மட்டும் தெரிகிறது. காவிரிப் பிரச்சனைக்காக சமீபத்தில் உண்ணாவிரதம் இருந்துவிட்டு, பின்னர் ஆளுநரைச் சந்தித்து, அகில இந்திய அளவில் நதிகளை இணைக்க வேண்டும் என மனுவையும் கொடுத்தார்.

இந் நிலையில்தான் இந்து ஆங்கில நாளிதழில் ரஜினி சிறப்பு பேட்டி ஒன்று அளித்திருக்கிறார். அதில்தான் மீண்டும் இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும் இணைக்க வேண்டும். அதற்காக தனியோர் இயக்கம் துவக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார். அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலைப் பற்றித்தான் நினைக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே நாட்டு நலனில் அக்கறை கொண்டோர் அடுத்த தலைமுறையைப் பற்றி கவலைப்படுகின்றனர் என்ற ஆங்கில பழமொழியினை நினைவு கூரும் வகையினில், தண்ணீர் பிரச்சனை மோசமாகிக் கொண்டு வரும் இவ்வேளையில் அடுத்த தேர்தலையும் தாண்டி சிந்திக்கும் தன்னைப் போன்றவர்கள் நாட்டுக்கு தேவை என்று கூறிக்கொள்பவர், குடியரசுத் தலைவர்,அப்துல்கலாம் தொடங்கி தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட அனைத்து தலைவர்களையும் சந்தித்து, நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு ஆதரவு கோரப்போவதாகவும் கூறுகின்றார்.

முதலில் தென்னக நதிகளை இணைக்க வேண்டும். அதன் பிறகு இமயமலையில் உருவாகும் மற்ற வட இந்திய நதிகளை இணைக்கலாம் என்பது அவரது ஆலோசனை. காக்கை உட்கார பனம் பழம் விழுந்தது போல், இவரது பேட்டி வந்த மறுநாளே புதுடில்லி உயர்நீதிமன்றம். நதிகளை பத்தாண்டுகளில் இணைக்க திட்டம் தீட்ட வேண்டுமென்று மத்திய அரசினைப் பணித்தது.

அது ஒரு மிகப்பெரிய திட்டம், ஐந்து லட்சம் கோடி செலவாகும், திட்டத்தினை நிறைவேற்ற 40



ஆண்டுகளுக்கும் மேலாகும் என்று மத்திய அரசு வழக்கறிஞர் கூறியதை நீதிமன்றம் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளவில்லை.

இந்த ஆண்டு சுதந்திர நாளன்று அப்துல் கலாம் நிகழ்த்திய உரையில் நதிகளை இணைக்க வேண்டுமென்ற ஆலோசனையும் இருந்தது.

அதைப் பிடித்துக் கொண்டே ஒருவர் புதுடில்லியில் பொதுநல வழக்கொன்றைத் தொடர்ந்து விட்டார்.

அந்த மனுமீதான இடைக்காலத் தீர்ப்பு வழங்கும் போதுதான் நீதிமன்றம் மத்திய அரசுக்கு இணைப்புப் பற்றி ஆராய குழு ஒன்றினை நியமியுங்கள் என உத்தரவிட்டார்.

எங்கே இரண்டையும் பொருத்திப் பார்ப்பவர்கள் ரஜினி ஓர் தீரக்கதரிசி என்று நினைத்து விடுவார்களோ என்றஞ் சியோ என்னவோ, முன்னாள் முதல்வர் பன்னீர்ச்செல்வம் அவசர அவசரமாக ரஜினியைத் தாக்கி ஓர் அறிக்கை வெளியிட்டார்.

இவரென்ன ஞானியா, புதிதாக என்ன சொல்லி கிழித்துவிட்டார். தமிழக அரசியல் சார்பாக இணைப்பு குறித்து மத்திய அரசுக்கு எழுதி வந்திருக்கிறது, எம்.ஜி.ஆரும் புரட்சித் தலைவியும் முந்தைய காலகட்டங்களில் நதிகள் இணைப்பு பற்றி குரல் கொடுத்திருக்கின்றனர். புதிய ஞானம் ஏதும் வந்துவிட்டதா

**கானகன்**

என்ன, என்றெல்லாம் விளாசித் தள்ளிவிட்டார் பன்னீர்ச்செல்வம்.

நதிகள் இணைப்பு என்பது மிக ஆபத்தானதொரு முயற்சி. மிகப்பெரிய அளவில் மக்கள் தங்கள் வீடு வாசலை இழக்க வேண்டிவரும், விளைநிலங்கள் மூழ்கும், சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும். எதிர்பாராத விளைவுகள் பல காணப்படக்கூடும் எனச் சில ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றன.

இதைப்பற்றியெல்லாம் ரஜினியோ மற்றவர்களோ சிந்திப்பதாகத் தெரியவில்லை. சர்தார், சரோவர் அணையின் காரணமாக எத்தனை கிராமங்கள் மூழ்கியிருக்கின்றன. எத்தனை ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது போராட்டங்களும் துயர்களும் ஒரு தொடர் கதையாகவே ஆகிவிட்டதே, இவை பற்றி ரஜினிக்கு யார் எடுத்துக் கூறுவது?

ரஜினியே ஒரு குழப்பமான ஆளாகத்தான் தென்படுகிறார். இந்து பேட்டியில் கூட எப்போது அரசியலுக்கு வரப்போகிறாரென்பது பற்றியோ, தமிழகத்தில் பரபரப்பாக பேசப்படும் மதமாற்றத் தடைச் சட்டம் பற்றியோ வேறு எந்தப் பிரச்சனை பற்றியுமோ அவர் வாயையே திறக்கவில்லை.

தவிரவும் நதிநீரை இணைக்க ஒரு இயக்கம் என்றால் அகில இந்திய அளவில் அல்லவா மக்களை திரட்ட வேண்டும்? அப்படி திரட்டுமளவு வேறு மாநிலங்களில் இவருக்கென்ன செல்வாக்கு இருக்கிறது. இது போன்றதொரு பிரச்சனையை முன்வைத்து எப்படி அவர் தலைவராகப் போகிறார்?

என்னவோ பேசப்படவேண்டுமென்பதற்காகவே இப்படியெல்லாம் செய்கிறாரோ என்று கூற தோன்றுகிறது. ●

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்*



**Naveen Ceramic** No:307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



விதுஜா ஏசியன் சொப்

# VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

**விதுஜா ஏசியன் சொப்**



MEDITATION YOGA POWER · INTERNATIONAL TRADITIONAL HOMOEOPATHY MEDICAL RESEARCH & SERVICE

# தெய்வீகசக்தி



துன்பங்கள், தோல்விகள், காதல், வேறு காரியத் தடைகள், வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கண்டு கலங்காதீர்கள். உங்களால் முடியாது என்றால் முடியாது என்பது முடிந்த முடிவே அல்ல. நிச்சயம் முடியும். முனிவர்கள் மஹா ரிஷிகள் அருளிய தெய்வீக, மந்திர, யந்திர, வசியங்கள் வைத்தியங்கள் செய்து நம் முன்னோர்கள் வெற்றி பெற்றார்கள். நம்மவர்களும் இரகசியமாகச் செய்து விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பரம்பரையாகச் செய்து வரும் பழக்கத்தினால் காதல் நிறைவேற, காதலர்கள் ஒன்று சேர, காதல் திருமணம் சம்பந்தப்பட்டவர்களின் பூரண சம்மதங்களுடன் நடைபெற, பிரிந்தவர்கள், வெறுப்பவர்கள்,வேண்டியவர்கள் எங்கிருந்தாலும் வந்து உறவாக, உதவி பெறத் தீய சக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய், மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து சகல காரியங்களிலும் வெற்றி பெற, வேறு நன்மையான காரியங்களுக்கும் நாடி வந்து தெய்வீக மந்திர, யந்திர, வசியங்கள் செய்து சந்தோஷமாக வாழ்கிறார்கள். வரமுடியாதவர்கள், கடல் கடந்த வெளிநாட்டவர்கள் கடுகதி பதிவுத் தபால் மூலமாகவும் அவசர தேவைகளுக்குத் தொலை தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், தொடர்பு கொண்டு தெய்வீக சக்தி வாய்ந்த பரிகாரப் பொருட்களை விஷேட கடுகதித் தபாலில் மூன்று நாட்களுக்குள் பெற்றும் (Cosmic Vibration) தியான யோக தெய்வீக சக்தி அலைகள் மூலமாகவும் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

ஹோமியோபதி- அக்குப்பங்சர், சித்த ஆயுர்வேத, மாந்திரீக மருத்துவ மனோதத்துவ தெய்வீக கொஸ்மிக் யோக சிகிச்சையாளர்

"யோகி டாக்டர்"

**YOGI- DR.T.MYLVAGANAM**

R.H.M.D.- D. Acu- (இலங்கை) P.I.S.M (இந்தியா)
Registered By Ministry of Health. & Ministry of Hindu Religious & Cultural Affairs, Charitable Services HMP 061- HAI 4/ BT/ 176

குருசக்தி நிலையம், இராமகிருஷ்ணபுரம், பிள்ளையார் கோயில் றோட், கல்லடி, மட்டக்களப்பு(PO) (இலங்கை) (கல்லடி மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு முன்பாக)
ரெலிபோன் பக்ஸ்- உள்நாடு 065-24872 காலை 9 இலிருந்து இரவு 9 மணி வரை
ரெலிபோன் பக்ஸ்- வெளிநாடு 0094 65 24872 காலை 9 இலிருந்து இரவு 11 மணி வரை
ஈ மெயில் (E-Mail) Yogidrmyl@ sltnet.lk
நோய், பிரச்சனைகள் தீர்ந்து விருப்பங்கள் நிறைவேறிப் பத்தொழி பெற்று, புதுவாழ்வு மலரட்டும். மேலதிக விபரங்கள் பெறத் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்.

**GURUSACKTHY CENTRE**
**RAMAKRISHNA PURAM, PILLAYAR KOVIL ROAD**
**KALLADY- BATTICALOA (PO) (SRI LANKA).**



## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349


# விளம்ரப் பகுதி


## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

*Eric Rajapakse* Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539. காலி வீதி. வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி: 01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்



## வதிவிட விசா பெற்று வெளிநாடு செல்கிறீர்களா?

**உங்கள் பாரத்தை நாங்கள் சுமக்கத்தயார்!**

உலகின் எப்பாகத்திற்கும் தங்களது வீட்டுப் பொருட்களை குறைந்த செலவில் துரிதமாய் அனுப்புவோம்.

- ☞ அம்மி முதல் ஆட்டுக்கல் வரை
- ☞ வெள்ளிப்பாத்திரம் முதல் குத்துவிளக்கு வரை
- ☞ உணவுப் பொருள் முதல் உடுதுணி வரை
- ☞ தளபாடங்கள் முதல் தரைவிரிப்பு வரை

சகல பொருட்களையும் சிறப்பான முறையில் பொதி செய்து சுங்கத்திணைக்கள நடைமுறைக்கு அமைய காப்புறுதி செய்து பொதிகளாகவோ, கொள்கலன்களாகவோ அனுப்பிவைக்கப்படும்.

பிரயாணத்திற்கு 10 நாட்களுக்கு முன் தொடர்பு கொள்க

**DIRECTLINE INTERNATIONAL (PVT) LTD.**
164-1/2, Maha Vidyala Mawatha, Colombo-13.
Tel: 074-610877 - 8 Fax: 94-1-543204
E-mail: directline@wow.lk

(சுங்கத்திணைக்கள அனுமதி பெற்ற முகவர்)



# SAMARASINGHE OPTICIANS

*For Best Quality Spectacles & Contact lenses*

**Samarasinghe Opticians**
85, Olcott Mawatha, Colombo-11.
TP: 421973, 338732 E-mail: sight@eureka.lk

**Branches: Kandy, Kegalle, Nuwaraeliya, Gampola & Hatton.**



*கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்து விரும்பிய வகையிலான பிறேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்*



விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்

## அப்பலோ ஒப்ரிசியன்

(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

## APPOLO OPTICALS

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena,Colombo-13.
T.P: 074-610459






## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.





### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவம்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162 Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே, தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் மனித குலத்திற்கு விரோதமானது

இயல்பு வாழ்வை ஏற்படுத்துதல், புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளல், கண்ணி வெடிகளை அகற்றல், அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் இருப்புக்கும் ஊறுவிளைவிக்கும் படைமுகாம்களை அகற்றல் இவையே தற்போதைய பேச்சுவார்த்தைகளில் முதன்மைப்படுத்தப்படும் விடயங்கள். ஆனால் பேசப்படாத சில முக்கியமான விடயங்கள் இருக்கின்றன. அவை பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

☆ பயங்கரவாதத் தடைச் சட்டம்.

60 ஆயிரம் உயிர்கள் இருபது வருட யுத்தத்தில் கொல்லப்பட்டதாகக் கூறுகிறோமே, திரும்பத் திரும்பக் கூறுகிறோமே அதில் ஏறத்தாழ 20 ஆயிரம் பேரின் மரணம் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் நேர்ந்திருக்கிறது என்றால் அது மிகையல்ல. பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டதும் இந்தச் சட்டத்தின் கீழேயே.

சித்திரவதைகளைச் செய்வதற்கான வாய்ப்புக்களைத் திறந்து விட்டதன் மூலம் இலங்கையின் பொலிஸ் படைத்துறைகளில் பல சித்திரவதையை விரும்பும் மனநோயாளிகளை உருவாக்கியதும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டமே. இன்று கௌரவமான அதிகாரிகளாக அழைக்கப்படும் பலர் இந்தச் சித்திரவதைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

1979இல் 9 தமிழ் இளைஞர்களை ஒரே இரவில் காணாமல் போகச் செய்ததன் மூலம் தமிழ் சமூகம் பீதியில் உறையவைக்கப்பட்டது. இவர்களில் இருவரான இன்பம், செல்வம் ஆகியோரின் சடலங்கள் யாழ் பண்ணைக் கடலில் மிதந்தன. இதே போன்ற சம்பவங்கள் கிழக்கிற்கும் பரவியது. மட்டக்களப்பு வாவியிலும் பிணங்கள் மிதந்தன.

தமிழச் சமூகத்தைப் பீதியில் உறைய வைத்ததிலும், ஆத்திரமூட்டியதிலும், இளைஞர் யுவதிகளை தலைமறைவு வாழ்க்கைக்கு இட்டுச் சென்றதிலும் இச் சட்டத்திற்கு முக்கிய பங்குண்டு.

இந்தச் சட்டத்தின் கொடுங் கரங்கள்தான் செம்மணிப் படுகொலை வரை நீட்சி உற்றன.

இச் சட்டத்தின் உதவியுடன் தமிழ் இளைஞர் யுவதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் பின்னர் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தினாலும் பிரதிசெய்யப்பட்டன என்பது இன்னொரு கதை.

பிளாஸ்டிக் எஸ்லோன் பிவிசி மணல் நிரப்பப்பட்ட குழாய்களால் தாக்குவது, தலைகீழாகத் தொங்கவிட்டு மிளகாய்ச் சாக்கினுள் தலையை நுழைத்தல், நகக்கண்களுள் ஊசி ஏற்றுதல், ஆணுறுப்புக்களை குறடுகளினால் நசித்தல், பெண் உறுப்பினுள் குழாய்களை, போத்தல்களைச் செருகுதல், கைதிகள் ஒருவருடன் ஒருவர் பேசுவதைத் தடைசெய்தல், இருட்டறைகளில் தனிமைக் கொட்டடிகளில் அடைத்து வைத்தல், வீட்டாரோ உறவினர்களோ பார்வையிடுவதற்கும் அனுமதிப்பதில்லை. தமது பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரிவிப்பதுமில்லை. மரணித்தால் உள்ளேயே எரித்துவிடுவார்கள்.

இல்லாவிடில் எங்கேயாது எறிந்துவிடுவார்கள். கொல்வது ஒன்றும் பிரச்சனையான விடயம் அல்ல. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு விதமான சித்திரவதைகள் இருந்தன. உதாரணமாக மட்டக்களப்பு, கல்லடி இராணுவ முகாமில் 1980களின் நடுப்பகுதியில் 'கிறிக்கட் விக்கட்' தடிகளை கழுத்தின் இரண்டு பக்கமும் பிடித்து முறித்துக் கொன்றார்கள்.

'றெஜிபோம்' உருக்கப்பட்டு உடலில் ஊற்றப்பட்டது.

வெளியே ஏதும் அசம்பாவிதம் நிகழ்ந்தால் உள்ளேயிருப்பவர்கள் கொல்லப்படுவார்கள்.

அல்லது கடுமையாகத் துன்புறுத்தப்படுவார்கள். வெலிக்கடைச் சிறைப் படுகொலை, இதேபோன்று 1984 இறுதிவாக்கில் 'கென்பாம், டொலர் பாம் 'பகுதியில் நிகழ்ந்த சம்பவங்களை அடுதது வவுனியா யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

வகை தொகையின்றிப் படுகொலைகள் நிகழ்வதற்கும், வருடக் கணக்கில் இளைஞர்களைத் தடுத்து வைப்பதற்கும், உயிரற்ற உடலைக் கூட உறவினர்களுக்குக் காட்டாமல் எரிப்பதற்கும் புதைப்பதற்கும் உடந்தையாக இருந்தது இந்தச் சட்டம்.

இச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் -இந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள், இரையானவர்கள் - இச் சட்டத்தை எதிர்த்துப் போராடியவர்கள்- நீதிமன்றங்களில் குரல் கொடுத்தவர்கள் என்று இதனைப் பற்றி ஒரு கொடூரத்தின் சரித்திரமே இருக்கிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பு இன மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட மிகப் பின் தங்கிய வடிவம் கொண்டது இச் சட்டம்.

தற்போது இந்தியாவில் நடைமுறையில் உள்ள 'பொடா' அல்லது பிரிட்டனில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் எல்லாம் இதனுடன் ஒப்பிட முடியாதவை.

இச் சட்டம் பௌத்த சிங்கள இன மேலாண்மைக்குத் தீனிபோடுவதற்கு, அதன் பழிவாங்கும் குரூர எண்ணங்களைத் திருப்திப்படுத்துவதற்கு, அதன் மேலாண்மை ஆணவத்தை நிலை நிறுத்துவதற்கு கொண்டுவரப்பட்டது.

அது பின்னர் தென்னிலங்கைச் சிங்கள இளைஞர், யுவதிகளைக் கொல்வதற்கும் பயன்படுத்தப்பட்டது இன்னொரு சங்கதி.



சமாதானம் -இயல்பு வாழ்க்கை பற்றிப் பேசுபவர்கள் இச் சட்டத்தை நீக்குவது பற்றிப் பேசாதது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படுவதானால் உண்மையில் இச் சட்டம் அகற்றப்படுவதனால்தான் முழுமைபெறும்.

இச் சட்டத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதென்பது சமாதானத்திற்கெதிரான, மக்களின் வாழ்வுரிமைகளுக்கெதிரான காட்டுமிராண்டித் தனங்களை மௌனமாக அங்கீகரிப்பதுவேயாகும்.

இச்சட்டத்தை நீக்குவது பற்றித் தமிழ்த் தரப்பிலிருந்து ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களைத் தவிர-வேறு எவரும் ஏன் குரல் எழுப்பவில்லை? அரசு ஏன் இந்தச் சட்டத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கவே தயங்குகிறது.

கறைபடிந்த வரலாற்றைக் கொண்ட இச் சட்டத்தை வைத்திருப்பது மனிதப் படுகொலைக்கான சாத்தியத்தை நீடித்து வைத்திருப்பது போலாகும்.

தேர்தல் காலத்தில் மக்களின் வாக்குகளைக் கவர்ந்துகொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்கள், உள்ளூராட்சித் தேர்தல்களை தற்போதைக்கு நடத்தக் கூடாது என்பதில் அக்கறையாக இருந்தவர்கள் ஏன் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாகப் பாராமுகமாக இருக்கிறார்கள்?

சமாதான முயற்சிகளில் ஈடுபடும் சட்ட அறிஞர்கள்-புத்திஜீவிகளின் தலையில் இது ஏன் உறைக்கவில்லை?

வரலாற்றுணர்வின்மையா, மனித

## தாகூர்

உரிமைகள் பற்றிய உணர்வுகள் மரத்துப் போனமையா அல்லது அவர்களின் அறிவுக்கு எட்டாத அளவுக்குப் பாமரர்களாக இருக்கிறார்களா?

சமாதானப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் முதலாவதாக இடம் பெற வேண்டியது இந்தச் சட்டம் நீக்கப்படுவது. ஆனால் எந்த நிகழ்ச்சி நிரலிலும் இச் சட்டம் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை.

இச் சட்டத்தின் கீழ் ஒருவரை 18 மாதங்கள் வரை விசாரணை இன்றித் தடுத்து வைக்க முடியும்.

கைதுசெய்யப்படுபவர் அளிக்கும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படும். சித்திரவதை இல்லாமல் இந்த வாக்குமூலம் பெறப்படுவதில்லை .

இந்த வாக்குமூலம் எப்படிப் பெறப்படுகிறது என்று தெரிந்தும் அது நீதிமன்றத்தில் ஒரு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 18 மாதம் என்ன 4, 5 வருடங்களுக்கே விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இறந்தவர்களின் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் கூடக் கிடையாது.

கேவலம் என்னவென்றால் இச் சட்டம் பற்றி இலங்கையின் சட்டத்துறையோ அல்லது நீதித்துறையோ அந்தச் சட்டம் பற்றி இந்த 23 வருடங்களில் கேள்விக்குள்ளாக்கியது கிடையாது.

அவ்வளவு தூரம் அத் துறைகள் செல்லரித்துப் போயுள்ளன.

ஆனால் இச் சட்டத்தின் மூலம் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட சித்திரவதைகள், படுகொலைகள் இன்று ஜனரஞ்சகமாகிவிட்டன. ஆயதமேந்திய தமிழ் இயக்கமும், பாதாள உலகக் கோஷ்டிகளும்- முன்நாள் படையினரே பெரும்பான்மையானோர்- அதனைப் பிரயோகிப்பதைக் காணலாம்.

மொத்தத்தில் ஒரு மனிதாபிமான விரோத காட்டுமிராண்டிக் கலாச்சாரம் உருவாகுவதற்கு இச் சட்டம் பங்களித்திருக்கிறது.

இன்று இலங்கையின் பொலிஸ் துறை மோசமான மனித உரிமை மீறல்களுக்காகவும், சட்ட விரோத நடவடிக்கைகளுக்காகவும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இந்த அத்துமீறல்களுக்கு அவசரகாலச் சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன பெரும் பங்காற்றியிருக்கின்றன.

எனவே இலங்கைச் சமூகம் தனது மரபு சார்ந்த கலாச்சார மனிதப் பண்பு- விழுமியங்களைப் பாதுகாப்பதானால் இடையிட்டு வந்த இந்த மிலேச்சத்தனமான கலாச்சாரத்திலிருந்து விடுபட வேண்டும்.

இதனைச் சமூக மயப்படுத்தியது அரச அதிகாரக் கட்டமைப்பே. எனவே அந்த அதிகாரம் தன்னைத் தக்க வைக்க நாடிய குறுக்கு வழியான இச் சட்டம் நீக்கப்பட வேண்டும். உடனடியாக!

## அதிரடி அய்யாத்துரை



தாய்லாந்தில் இரண்டாம் சுற்று வெற்றியா? தோல்வியா? எண்டு என்னட்டக் கேட்டால், தோல்வியடையாமல் சமாளிச்சதில் வெற்றியெண்டுதான் சொல்ல வேனும். பெரும் பெரும் இடிகள் எல்லாம் விழ விழ, இனியில்லையெண்ட வீட்டுக்குடுப்புக்கும் இறங்கிப்போய் எப்பிடியோ சமாதான முன்னெடுப்பைக் காப்பாற்றினதுக்கு இரண்டு தரப்புக்கும் சபாஷ், அதிலும் கூடுதலா புலிகள் தரப்புக்குத்தான் கைகுடுக்க வேனும். தங்கட தேசியத் தலைவருக்கே 200 வருஷக் கடுங்காவல் தண்டனைய அரசாங்கம் வழங்கியிருக்கேக்கை, அதிலும் சொல்லி வைச்சாப்போல பேச்சுவார்த்தை தினத்தன்றைக்கே தீர்ப்பு வழங்கேக்க, பொறுமை காத்து உக்கார்ந்து டீ குடிச்சுப் பேசியிருக்கினம். இந்த நேரம் பாத்து கண்ணிவெடிகள், ஆயுதங்களோட தங்கட ஆக்கள் பிடிபட்டபோதும், நிதானமா, “அவை கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்தவை, நீங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்” எண்டு சொல்லி, குழப்பாமல் பாத்துக் கொண்டிச்சினம். இதையும்விட, போன முறை இடைக்கால நிர்வாகத்தை எடுத்தே தீருவோமெண்டு சொன்னவை, இப்ப அரசாங்கத்தின்ர கையாலாகாத நிலைமையை மதிச்சு அதைக் கைவிடவும் தயாரெண்டாச்சு. இத்தனை படி இறங்கி வந்து, எப்பிடியோ, அடுத்த கட்டத்துக்கு கதவு திறந்துவிட்டது சந்தோசம்.

தமிழ்ச் சிறைக் கைதிகள் விடுதலைக்கு மொறகொடயாற்ர உத்தரவாதத்தை மட்டும் நம்பியிருக்கிறதா எண்ட கேள்வியிருக்குது. உத்தரவாதம்கூட வெறும் நல்லெண்ண நடவடிக்கையேயொழிய ஒரு ஒடுக்கு முறைச் சட்டத்தை இல்லாதொழிக்கிற நடவடிக்கையில்லை. இந்தமுறை தாய்லாந்தில எத்தனையோ விசயங்களச் சமாளிச்சு, வழிகண்டவை இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும் ஒரு வழிபண்ணியிருந்தால் அது எங்கட சனத்துக்கு ஒரு தீபாவளிப் பரிசாக அமைஞ்சிருக்கும். நடக்கல்லையே!

19ம் திருத்தச் சட்டம் இல்லையெண்டு தீர்ப்பான பிறகு கட்சி தாவிற கதைகளெல்லாம் இப்ப காணேல்லை. எல்லாரும் இப்ப ஒத்தபடியா ஒரு புதுப் பாட்டப் பாட ஆரம்பிச்சிருக்கினம். ஒத்திசைந்து செயற்பட வேனுமெண்டினம். அதுவும்கூட அமெரிக்காகாரன் இங்க வந்து சொன்ன பிறகுதான் அவையும் இந்தப் பாட்ட எடுத்து விடுகினம். ஒத்திசையிறது நல்லதுதான். ஆனால் அது கண்கெட்ட பின்னே சூரிய நமஸ்காரமாய்ப் போய்விடாமல் இருக்க வேனும். இனியாவது கண்திறந்தால் சரி.

அரசாங்கப் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அமைச்சர் பீரிசும், புலிகள் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கமும் தாய்லாந்தில, ரோஸ் கார்டன் ஹொட்டேலில மரமொன்று நட்டு வைத்த அறிகுறி நல்ல அறிகுறிதான். ஆனால் அந்தச் சமாதான மரம் இலங்கையிலயெல்லோ நடவேனும்? சமாதானம் தேவைப்படுறது தாய்லாந்துக்கில்ல, இலங்கைக்குத்தான். என்னவோ, அங்கயாவது நட்டிச்சினமேயெண்டு திருப்திப்படலாமெண்டிறியளா? ம்... பின்னால ஒருக்கால் கண்ணீர்விட்டு வளர்த்தோம், சர்வேசா, கருகத் திருவுளமோ? எண்டு பாடாமலிருக்கத் தக்க விதமாப் பராமரிச்சால் சரிதான். எதை? மரத்தைச் சொல்லேல்ல, சமாதானத்தை!

அடுத்தமுறை பேச்சுவார்த்தை தாய்லாந்தில இல்லையெண்டு அறிவிச்சிருக்கினம். மாலைதீவைக் கேட்டுப்பார்த்ததில அதுவும் மறுத்திட்டுது. இந்தியா இதுக்கு எப்பவோ கதவடைச்சிட்டுது. கடைசியா ஒஸ்லோவில நடத்த திட்டமிடுகினம். எனக்கொரு கேள்வி. இந்த முறை புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இலங்கைக் குடிவரவு, குடியகல்வு நடவடிக்கைக்கமைய கொழும்பு எயார்போட்டாலதான் வந்து போனவர். பேச்சுவார்த்தைக்குப் போய் வந்த, புலிகள் பிரதிநிதிகள் தமிழ்ச் செல்வனும், கருணாவும்கூட கொழும்பாலதான் போய்வந்தவை. இதைவிட புலிகளுக்கு கொழும்பு ஹொஸ்பிட்டல்களில வைத்தியமும் பாத்து அனுப்பினம். இந்தளவு குளோசாயினப் பிறகு பேச்சுவார்த்தைக்கு ஏன் இடம் தேடி நாடுநாடா அலையினம்? பேசாமல் கொழும்பிலயே வைச்சிடலாமே? இதில கௌரவம் என்ன வாழுது, பிரேமதாஸா காலத்தில நடந்த விசயந்தானே? அதுக்குப் போய் ஏன் இத்தனை வீண் செலவு? பிளீஸ் திங்!

பட்ஜெட் துடங்க முன்னமே பாண் விலையேறிட்டுது. பெற்றோல் டீசல் தவளை போல தத்தித் தத்தி ஏறுது. அரிசி விலை கூடுறதுக்கும் நடவடிக்கை எடுக்கிறதாக் காணேல்ல, ஆனால் விலை கூடுமெண்டு முன்னமே அறிவிச்சிருந்ததா வர்த்தக அமைச்சர் சொல்லுறார். ஏதோ, பொதுமக்களப் பாதிக்காது பாதிக்காதெண்டு பட்ஜெட்டுக்கு முந்தியே கட்டியம் சொல்லினம். பாதிக்காதெண்டால் என்ன அர்த்தமோ, பட்ஜெட் முடியப் பார்க்கலாம்.

பிறைவேட்டேஷன் வந்தால் தலையில இருக்கிற கனமெல்லாத்தையும் இறக்கி வைச்சிடுமெண்டு அட்வடைஸ்மென்ட் போடுகினம். தலையையே கழட்டிக்கொண்டு போயிடுமோ எண்டதுதான் இப்ப பயமாக் கிடக்கு. ஏதோ, இதுவரை இருந்த பொதுச் சொத்துக்கள், பொது வளங்கள், எங்கட இடதுசாரிகள் சொல்லுறதுமாதிரி, தொழிலாளர் பலத்தில் போராடிப் பெற்ற, தொழில் பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமைகள் எல்லாத்தையுமே சேத்து அள்ளி எடுத்திடாமல் பாத்துக் கொள்ளுறது யார்? அரசாங்கமா? அதுதான் இந்த விளம்பரத்தையே செய்யுதே..! பாவம் மக்கள்! ■

**இன்டர்நெட்டில் Chat செய்வது நவீன இளைஞர் சமுதாயத்தின் பிரபல்யமான பொழுதுபோக்கு.**

**இந்த Chat மூலம் சுவையான, சுவாரசியமான அனுபவங்களைச் சந்தித்தவர்கள் பலர் நம் மத்தியில் இருப்பார்கள். சிலவேளைகளில் Chat பாட்னர்கள் வாழ்க்கைத் துணையாக முன்னேறிய நிகழ்வுகளும் உண்டு. பலருக்கு இந்த Chat மூலம் காதல் வாய்த்திருக்கிறது. சுவையான காதல் சம்பவங்கள் பல இதில் நிகழ்வதுண்டு. இத்தகையதொரு காதல் கதை இம்முறை நெட்டிலிருந்து பக்கத்தில் பிரசுரமாகிறது. நமது வாசகர்களில் Chat பழக்கமுள்ளவர்கள் தங்களுக்கேற்பட்ட சுவாரசியமான அனுபவங்களை புல்ஸ்காப் தாளில் 3 பக்கங்களிற்கு மேற்படாமல் எழுதி அனுப்பலாம். அல்லது எமது ஈ-மெயில் முகவரிக்கு அனுப்பலாம்.**

# இன்டர்நெட்டில் தேடிய காதலி





**நா**ன் சாட் செய்யத் தொடங்கிய போது இன்டர்நெட் நட்புக்கான பல வெப்சைட்களுக்குப் போவேன். அந்த சைட்களில் இருக்கும் பெண்களில் யார் யார் என் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்ப்பேன் (நான் சேலத்துக்காரன்). அந்தப் பெண்களின் ஈ-மெயில் முகவரியை ஒரு பேப்பரில் எழுதி வைத்துக் கொண்டு ஒவ்வொருவருக்கும் ஈ-மெயில் அனுப்புவேன்.

நான் அனுப்பிய மெயில்களுக்கு சில பெண்கள் பதில் அனுப்பினார்கள். அவர்களில் பலர் ஒன்றிரண்டு மெயில்களுக்குப் பிறகு பதில் அனுப்பவில்லை. எனக்கு போர் அடித்ததால் நானும் விட்டு விட்டேன். ஆனால், ஒருத்தி மட்டும் எனக்கு நண்பி ஆனாள்.

முதலில் என்னைப் பற்றி நானும் தன்னைப் பற்றி அவளும் மெயில் அனுப்பி ஒருவரை ஒருவர் அறுத்துக் கொண்டிருந்தோம். என்னைப் போலவே அவளும் வேண்டாவெறுப்பாக அதையெல்லாம் எழுதுவதாகத் தோன்றியது எனக்கு. எனக்கு அந்த சமயத்தில் வேறு நண்பிகள் இல்லை. எனவே இவளைக் கொஞ்சம் சீண்டிப் பார்த்து ரிஸ்க் எடுக்கலாம் என்று தோன்றியது.

ஒரு ஆணும் பெண்ணும் முத்தமிட்டுக் கொள்வது போன்ற ஒரு புகைப்படம் உள்ள மின்னட்டை ஒன்றை அவளுக்கு அனுப்பினேன். "பேச மட்டும்தான் உதடுகளா?" என்று அதன் கீழே ஆங்கிலத்தில் வார்த்தைகள்! அனுப்பிய பிறகுதான் தப்பு செய்து விட்டோமோ என்று பயமாக இருந்தது. அவள் இனிமேல் நமக்கு மெயில் அனுப்பப் போவதில்லை என்று நினைத்தேன்.

அன்று மாலை எதிர்பார்ப்புடன் மெயில் பார்த்தபோது அவளிடமிருந்து வாழ்த்து அட்டை வந்திருக்கிறது! ஒரு பெண் அலறுவது போல் ஒரு படம். அது அவளுக்கு எங்கே கிடைத்ததோ தெரியவில்லை. படத்திற்குக் கீழே "ஓ, நீ அந்த மாதிரி ஆளா? உன் வம்புக்கு நான் வரவில்லை!" என்று எழுதியிருந்தது! கூடவே அவளுடைய ஐ.சி.க்யூ.எண்.

காய்ந்து போன கேஸ் என்று நினைத்துக் கொண்டேன். அடுத்து மெயிலில் நான் ஐ.சி.க்யூ வை எப்படி இன்ஸ்டால் செய்ய வேண்டும் என்று கேட்டதும் அவள் எனக்கு சொல்லித் தந்தாள். நாங்கள் ஐ.சி.க்யூ.வில் சாட் செய்யத் தொடங்கிய சில நாட்களில் ரொம்ப அதிக நேரம் அதில் செலவழிக்கத் தொடங்கினோம்.

இப்போது நான் என் அடுத்த ரிஸ்க்கை எடுக்க வேண்டிய கட்டம் வந்தது. எனக்கு ஈ-மெயிலில் வந்த ஒரு படுமோசமான ஏ ஜோக்கை அவளுக்கு ஃபார்வாட் செய்தேன். படுமோசம் என்றால் அவ்வளவு படுமோசம்! "என்ன செய்யப் போகிறாய்?" என்று சினிமா பாட்டில் வருவது போல் கேட்டுக் கொண்டேன்.

அதற்கு அவள் பதில் அனுப்பவில்லை. ஆனால், எங்கள் அடுத்த சாட்டிலிருந்த எங்கள் பேச்சு அநியாயத்திற்கு ஆபாசமாக இருந்தது! "இன்றைக்கு உன் டிரெஸ் அழகாக இருக்கிறது. நல்ல டிசைன்" என்பேன் நான். "வழியாதே, நான் ஒன்றுமே போட்டுக் கொள்ளாமல்தான் உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன்" என்பாள் அவள். "நானும் அதைத்தான் சொன்னேன்!" என்று நான் சொல்வேன்! நாங்கள் பேசியதை எல்லாம் எழுத முடியாது!

அதற்குப் பிறகு நாங்கள் சாதாரணமாகப் பேசவே இல்லை. எனக்கு அது போதைப் பழக்கம் போல் ஆனது. அடுத்த ரிஸ்க்காக சைபர் செக்ஸ் என்று சொல்கிறார்களே, அதில் இறங்கலாமா என்று அவளைக் கேட்டேன். ஆனால், அதைக் கேட்பதற்குள் நான் பயந்து செத்தேன்.

எனக்கு அதில் அனுபவம் இல்லை என்றாள் அவள். எனக்கும் அனுபவம் இல்லை என்றேன் நான். சரி, ஒரு 'Experiment' மாதிரி செய்து பார்ப்போம் என்றாள் அவள். எங்களுக்குள் ஒரு விளையாட்டுதான். கொஞ்சம் சீரியஸாகப் போய்க் கொண்டிருக்கிறோமா என்றும் எனக்குத் தோன்றியது. இது எங்கேதான் கொண்டு போய் விடுகிறது என்று பார்ப்போம் என்று முடிவு செய்தேன்.

எங்கள் முதல் சைபர்செக்ஸ் தாமாஷாக ஆரம்பித்தது. பிறகு கிளுகிளுப்பாக மாறியது. ஆனால், பொதுவாக நான் கேள்விப்பட்ட சைபர் செக்ஸ் போலில்லை எங்கள் விளையாட்டு. இரண்டு பெரிய குழந்தைகள் ஒருவரை ஒருவர் சீண்டிக்கொள்வது போல்தான் இருந்தது. கிளுகிளுப்பை விட விளையாட்டும் ரொமான்ஸும் அதிகமாக இருந்தது. இந்த விளையாட்டும் எங்களுக்கு பழக்கமாகிப் போனது.

எத்தனை நாள்தான் இப்படியே இருப்பது? ஒரு தடவை சாட்டில் அவளிடம் ஒரு கேள்வி கேட்டேன். "நாம் நேரில் சந்திப்போமா?" 'யோசிக்கிறேன்' என்றாள் அவள். பிறகு தேதி, இடமெல்லாம் குறித்து விட்டோம். அந்த நாளும் வந்தது. எனக்குப் பிடித்த மஞ்சள் நிறத்தில் அவள் புடவை அணிந்து வந்தாள். அவளுக்குப் பிடித்த சாம்பல் நிறத்தில் புதிதாக சட்டை வாங்கி அணிந்து கொண்டு போனேன்.

அவளைப் பார்த்தபோது எனக்கு அதிர்ச்சி. அவளுடன் சாட் செய்ததில் நான் செய்த கற்பனைக்கு நேர்மாறாக இருந்தாள் அவள். அவளைப் பார்த்த கணத்தில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை என்னால் மறைத்துக் கொள்ள முடியவில்லை. நானும் ஒன்றும் பெரிய அழகன் இல்லை. அவளுடைய ஏமாற்றம் எனக்கு வெளிப்படையாகத் தெரிந்தது.

நாங்கள் சந்தித்த ரெஸ்டாரென்டில் காப்பி சாப்பிட்டுக் கொண்டு ஒன்றுக்கும் உதவாத விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் இருவருக்குமே பேச்சில் நாட்டம் இல்லை. வேறு எதிலும்தான்! எப்போது பேச்சு முறிந்து கிளம்புவோம் என்று இருந்தது எனக்கு.



அவளுக்கும் ஏமாற்றம்தான் என்றாலும் என் ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ள முடியாமல் போனது அவளுக்குப் பிடிக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

டேபிளில் தாளம் போட்டுக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தபோது அவள் "ஓ.கே. நான் கிளம்ப வேண்டும்" என்றாள். நான் உடனே "யெஸ், எனக்கும் நேரமாகிவிட்டது. நைஸ் மீட்டிங் யூ" என்று ஒரு முன்பின் தெரியாத ஒரு நபரிடம் பேசுவது போல் சொல்லிவிட்டுப் பிரிந்தேன். இனி மேல் அவளுடன் பேசக் கூடாது என்று முடிவு செய்தேன்.

ஆனால் வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக இன்டர்நெட்டுடன் இணைத்தேன். ஐ.சி.க்யூ.வில் லாக் இன் செய்தேன். அவள் ஆன்லைனில் இருந்தாள். அவள் பெயரைப் பார்த்ததும் எனக்குக் குற்ற உணர்வு ஏற்பட ஆரம்பித்துவிட்டது. எவ்வளவு நன்றாகப் பழகிய பெண்ணை உருவத்தை வைத்து ஒதுக்குகிறோம் என்று தோன்றியது எனக்கு.

அவளும் தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ளவில்லை என்றாலும் நான் என் மேல் வைத்திருந்த மரியாதை கணிசமாகக் குறைந்தது. எனக்கு உருவம் பெரிதல்ல. மனம்தான் பெரிது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் நானும் சராசரி ஆண் போலத்தான் என்று இந்தச் சம்பவம் எனக்கு நிரூபித்தது.

அவளுடன் மீண்டும் பழகித்தான் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று அவளுக்கு ஒரு 'ஹாய்' அனுப்பினேன். அவளும் 'ஹாய்' என்றாள். அன்றுதான் நாங்கள் ரொம்ப சீரியஸாகப் பேசினோம்.

நாங்கள் அதிகம் பேசவில்லை. ஆனால் அவள் ரசனைகளைப் பற்றி அப்போதுதான் நான் முதல் முதலாகக் கேட்டேன். அவள் வேண்டா வெறுப்பாகத்தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். இருந்தாலும் விட்டுப் பிடிப்போம் என்று முடிவெடுத்தேன். கிளம்புவதற்கு முன் "நாளைக்கு ஆன்லைனில் இருப்பாயா?" என்று கேட்டேன் "நிச்சயமாகத் தெரியாது" என்றாள் அவள்.

அடுத்த நாள் அவளுடன் சாட் செய்தேன். அந்த வாரம் முழுக்க சாட்தான். ஆனால் நாகரீகமான சாட் எங்களுக்கு இடையில் அந்த இறுக்கம் இன்னும் போகவில்லை. எனக்கு அவளை இந்த முறை சந்தித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஒரு நாள் திடுதிப்பென்று "நீ ஃப்ரீயாக இருந்தால் நாம் நாளை காப்பி சாப்பிடுவோமா?" என்றேன்.

"எனக்கு இன்னொரு முறை நேரத்தை வீணாக்க முடியாது" என்றாள் அவள். "ஒரே ஒரு காப்பி மட்டும் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவோம்! ப்ளீஸ்!" என்றேன். அவள் சம்மதித்தாள். இந்த முறை அதே இடத்தில் அதே சட்டையுடன் போனேன். அவள் 10 நிமிடம் தாமதமாக வந்தாள்.

அவளைப் பார்த்ததும் எனக்கு சந்தோஷமாக இருந்தது. கூடவே சிரிப்பும் வந்தது. என் நமட்டுச் சிரிப்பு அவளுக்கும் தொற்றிக் கொண்டது. "ஹாய் ஸ்வீட் ஹார்ட்!" என்றேன். அவள் பதில் சொல்லாமல் சிரித்தாள்.

நாங்கள் அன்று சாப்பிட்டது மூன்று காப்பி. நிஜமான காதலர்கள் மாதிரி சின்னக் குரலில் ரொம்ப நேரம் பேசினோம். எங்களுக்குப் பேசிக் கட்டுப்படியாகாதது போல அவ்வளவு பேசினோம்.

அன்று தொடங்கி நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். பிறகு தினமும் சந்தித்தோம். சாட் செய்தோம். ஃபோனில் பேசினோம். என்னை அவள் மன்னித்து விட்டது போல் தோன்றியது. எனக்கு அவள் மேல் காதல் வந்து விட்டிருந்தது.

அவளிடம் சொன்னால் தப்பில்லை என்று ரகசியத்தைப் போட்டு உடைத்தேன். நேரில் இல்லை. சாட்டில்தான். 'தேங்க்ஸ்' என்பது தவிர வேறு எதுவும் சொல்லவில்லை அவள். அன்று ஒரு சீரியஸ் முத்தத்துடன் விடை பெற்றேன் நான்.

நாங்கள் இப்போதெல்லாம் சாட்டை விட போனில்தான் அதிகம் பேசுகிறோம். அவளும் என்னைக் காதலிக்கிறாளோ என்று எனக்கு வலுவான சந்தேகம் இருக்கிறது. அவளுக்கு என்னை ரொம்பப் பிடிக்கிறது என்று எனக்குத் தெரியும். நாங்கள் சைபர்செக்ஸ் பக்கமெல்லாம் போவதே இல்லை.

இருந்தாலும் அவள் சைபர் செக்ஸுக்காக வேறு நண்பர்களை நாடுவாளோ என்ற பயத்தில் நான் எப்போதாவது கொஞ்சம் ஓவராக ஜொள்ளு விடுவேன். அவ்வளவுதான். எந்தப் பிரச்சனையும் இல்லாமல் எங்கள் உறவு தொடர்ந்து கொண்டிருக்கிறது. நான் எடுக்கப் போகும் அடுத்த ரிஸ்க் என்னவென்று நீங்கள் சுலபமாக ஊகித்து விடலாம்.







## விஷப் பரீட்சை

பாம்புகளுடன் கண்ணாடிப் பெட்டிகளுக்குள் இருந்து சாதனை படைத்தவர்களை நமது நாட்டிலும் பார்த்திருக்கிறோம்.

இதுவும் இத்தகையதொரு விஷப் பரீட்சைதான். படத்தில் காணப்படும் தாய்லாந்து யுவதிக்குப் பெயர் காஞ்சனா கெட்ஹியு. இவர் 3400 விஷத் தேள்களுடன் கண்ணாடிப் பெட்டிஒன்றிற்குள் 32 நாட்கள் தொடர்ச்சியாக இருந்து சாதனை புரிந்திருக்கிறார். இதன் பிரகாரம் கூடுதலான தேள்களுடன் அதிகளவு நேரம் பாதிப்பின்றிக் கழித்தவர் என்று காஞ்சனாவின் பெயர் கின்னஸில் இடம்பெறவிருக்கிறது. இவர் இந்தச் சாதனை முயற்சியில் ஈடுபட்டிருந்த போது இவரை 9 தடவைகள் தேள்கள் கொட்டின. ஆனால், எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தேள்களுடன் கண்ணா டிப்பெட்டிக்குள் இருந்து பழக்கப்பட்டுவிட்ட தால் இத்தகைய விஷ ஜந்துக்களின் தாக்கம் இவரது உடலுக்குப் பழக்கப்பட்டுவிட்டதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

முன்னதாக மெலினா ஹஸன் என்ற பெண் 2700 தேள்களுடன் 30 நாட்களைக் கண்ணாடிப் பெட்டிக்குள் கழித்திருக்கிறார். இதன் போது மெலினாவை 7 தடவைகள் தேள்கள் கொட்டின. பல முறை அவர் மூர்ச்சை யுற்று விழுந்தார். ஆனால், காஞ்சனாவின் சாதனை முயற்சியின் போது அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.



## நேரம் கிடைத்தபோது...

தாராக்களுக்கு குளிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. நாள் முழுவதும் தண்ணீரில் ஓடித் திரிந்து உணவு தேடுவதால் குளிப்பதற்கு நேரம் இல்லாத அளவு பிஸி. லண்டனிலுள்ள பூங்கா ஒன்று தண்ணீர் குழாய் ஒன்றைக் கண்ட தாராக்கள் சில குளிக்கின்றன.





## கடதாசிப் பெண்

பார்த்த பார்வையில் இந்தப் புகைப்படத்தில் ஒரு மணமகள் நிற்பதைத் தவிர வேறெந்த விசேஷமும் இல்லாதது போல் தோன்றலாம். ஆனால், உண்மையில் இந்த மணப்பெண்ணில் அல்ல, அவர் அணிந்திருக்கும் ஆடையில் இருக்கிறது ஸ்பெஷல்.

இவரது உடை முற்றிலும் கடதாசியினால் ஆனது. கடதாசி என்றதும் இலகுவில் கிழித்தெடுக்கக் கூடியது அல்ல. மீளமைப்புச் செய்யப்பட்ட ஒருவகை விசேட தாள்களால் இந்தப் பெண் மணக்கோலமிட்டிருக்கிறாள்.



## ஏற்ற துணை

தேவதாஸ், ஒரு சேர்க்கஸ் குழுவில் வேலை செய்கிறார். அவரது 30 சென்ரி மீற்றர் உயரத்திற்கு ஏற்ப மணமகள் ஒருவரைத் தேடுவதில் தேவதாஸிற்கு நீண்டகாலமாகவே பிரச்சனையிருந்து வந்தது. ஆனால், நம்பிக்கை தளராமல் தனது உயரத்திற்கு ஏற்ப பெண் தேடிய தேவதாஸின் தேடலுக்குப் பலன் கிடைத்தது.

அவரது வாழ்க்கைத் துணையாக பாப்பாத்தி கிடைத்தார். உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றில் தனக்கு மணமகள் தேவை என்று விளம்பரம் கொடுத்தார் தேவதாஸ்.

பாப்பாத்திமிடமிருந்து பதில் வந்தது. "உங்கள் உயர்ந்த இதயத்திற்கும் குள்ளமான உடலிற்கும் ஏற்ற துணையாக நானிருப்பேன்" என்று சொன்னார் பாப்பாத்தி.

இருவரும் மணவாழ்வில் இணைந்தனர். இந்த ஜோடி கடந்த காதலர் தினத்தன்று சென்னையிலுள்ள ஸ்டுடியோ ஒன்றில் எடுத்துக் கொண்ட படம் இது.




## வேட்டைக்காரர்கள்

மனிதனுக்காக இன்னொரு மிருகத்தை வேட்டையாடச் செல்லும் நாய்கள்தான் இவை. ஹவுண்ட் இன நாய்களான இவற்றைக் கொண்டு நரி வேட்டையாடுவது பிரித்தானியாவில் மிக நீண்டகாலமாக இருந்து வரும் மேல் வகுப்பினரின் பொழுதுபோக்கு. இந்த ஹவுண்ட் இன நாய்கள் வேட்டையாடுவதில் மிகவும் திறமையானவை.

இதனால் இவற்றை வேட்டைக்கென்றே பலரும் வளர்க்கிறார்கள். ஆனால், அண்மைக்காலமாக மிருகவதைக்கு எதிரான செயற்பாட்டாளர்களின் குரல் ஓங்கி வருவதனால் நாய்களை வைத்து வேட்டையாடுவதற்குப் பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. சமீபத்தில் மிருகவதைக்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று லண்டனில் நடைபெற்றது.

## டீரீம் லேண்ட் மூவீஸ் தயாரிக்கும் பிரமாண்டமான புதிய படம் 'கேம்பஸ்'

கல்லூரிக் காதல் கதைகள் எத்தனையோ இதுவரைக்கும் வந்த துண்டு. ஆனால் அது முழுக்க ஆக்ஷன் படமாக அமைந்ததில்லை. இப்பொழுது புதுமுகங்கள் நடிக்கும் படங்கள் பெரும்பாலானவை காதல் படமாக உருவாகி வருகிறது. இவை இரண்டும் இல்லாமல் புதுமுகங்கள் நடிக்க, முழுக்க முழுக்க கல்லூரி ஆக்ஷன் படமாக இப் படத்தின் கதை உருவாகியுள்ளது. கல்லூரி வளாகத்தில் நடக்கும் முக்கிய பிரச்சனையை, அரசியல் தலையீடுகள் இருந்தாலும் அதை எப்படி மாணவர்கள் சமாளிக்கிறார்கள் என்பதே இதன் கதை.

இதில் புதுமுகங்களாக ராஜ், நித்தேஷ், திவ்யா, ஷீத்தல் என இரண்டு ஜோடிகள் தமிழில் அறிமுகமாகிறார்கள். இரண்டு தெலுங்குப் படங்களில் நடித்திருக்கும் திவ்யா இப்பொழுது இந்தியில் சுனில்ஷெட்டியுடன் ஜோடியாக நடித்து வருகிறார். மற்றும் தேவன், ராஜன், பி.தேவ், வெ.ஆ. மூர்த்தி, இந்திரன்ஸ், ஷாஜி கொரியன், மதன்பாப் நடிக்கிறார்கள்.



ஷெரின்
படம்: ஜெயா

## அன்பாலயா பிலிம்ஸ் தயாரிக்கும் புதிய படம் 'பரசுராம்'

மிகப் பெரிய தொழிலதிபர் கருணாகரனுக்கு நிறைய தொழிற்சாலைகள், கோடி கோடியாகச் சொத்துக்கள். ஆனால் ஒரே பெண் அஞ்சலி மட்டுமே. அதனால் அவள் என்ன ஆசைப்படுகிறாளோ அதைச் செய்து முடிப்பதுதான் அவர்களது கடமையாக கருணாகரனும், அவனது தம்பி நல்லதம்பியும் நினைத்திருந்தனர்.

அஞ்சலிக்கோ கல்லூரிக்குப் போவதைவிட தான் ஆசைப்பட்ட வாலிபன் பரசுராமைச் சுற்றி வருவதில்தான் விருப்பம் அதிகம். நேர்மையும், துணிச்சலும் மிக்க போலிஸ் அதிகாரி பரசுராமுக்கோ கடமைதான் முதல் மூச்சு. காதலெல்லாம் இரண்டாம் பட்சம்தான். அதனால் அஞ்சலியோ அவன் பின்னாலேயே சுற்றித் திரிந்தாள். அவள் கையில் எப்போதும் காமிரா இருக்கும். பரசுராம் எங்கே போனாலும் அவனுக்குத் தெரியாமல் புகைப்படம் எடுத்துத் தள்ளுவாள். அதை ஸ்டூடியோவில் கொடுத்து பெரிய பெரிய சைசில் போட்டோ போட்டு தனது அறை முழுக்க மாட்டிக் கொள்வாள். இவளால் சாதாரண போட்டோ ஸ்டூடியோ வைத்திருந்தவன் லட்சாதிபதியாகிவிட்டான்.

இப்படியொரு காட்சி கே. பிரபாகரனின் அன்பாலயா பிலிம்ஸ் 'பரசுராம்' படத்துக்காகப் படமானது. பரசுராமாக அர்ஜுன், அஞ்சலியாக கிரண், கருணாகரனாக வெ.ஆ.மூர்த்தி, நல்லதம்பியா வையாபுரி நடித்தனர்.



## ஒவ்வொன்றையும் வித்தியாசமா பண்ணணும்

எனக்குக் கிடைக்கிற கேரக்டர்கள் எல்லாத்துலயுமே நான் முழுசா இன்வால்வ் ஆகி பண்ணுவேன். ஒவ்வொரு கேரக்டரும் ஒரு வித்தியாசத்தச் சொல்லணும். நல்ல பேர் வாங்கணும்கிற குறிக்கோளோட உழைக்கிறேன். இப்ப நீங்க என்னை அம்மன் கேரக்டர்ல பார்த்தீங்கன்னா என்னை ஒரு அம்மனாத்தான் ஃபீல் பண்ணுவீங்க. அதே மாதிரி கிளாமர் கேரக்டர்ல என்னைப் பார்த்தீங்கன்னா அதுல வேற ஒரு மாதிரி ஃபீலிங்கை நான் கொண்டு வருவேன். இப்படிச் சொல்வது வேறு யாருமல்ல ரம்யா கிருஷ்ணன் தான்.

## 'பாய்ஸ்' படம் பற்றி டைரக்டர் ஷங்கர் கூறுகிறார்

நான் எந்தப் படத்தையும் பிரமாண்டமாக எடுக்க வேண்டும் என்று நினைப்பதில்லை. கதை என்ன சொல்கிறதோ அந்த வழியில் செல்பவன் நான். இந்தப் படத்திலும் பிரமாண்டம் உண்டு. ஆனால், இது பிரமாண்டமான யதார்த்தம். படம் ரிலீசான பிறகு அது உங்களுக்கே புரியும் என்கிறார் ஷங்கர்.

## "பட்டாசு வெடிப்பேன்" - சினேகா

தீபாவளியன்று காலையில் எழுந்து ஒரு எண்ணைக் குளியல், அப்புறம் புத்தாடை அணிந்து கோயிலில் சாமி தரிசனம். வீட்டுக்கு வந்ததும் பெற்றோர்களின் காலில் விழுந்து ஆசி. அப்புறம் ஒரே குஷிதான்.

முதன் முதலில் சரவெடியைத்தான் வெடிப்பேன். படபடவென அது வெடிக்கும் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் எட்டிப் பார்ப்பார்கள்.

"அடடே, சினேகா பட்டாச வெடிக்கிறாங்க" என்றபடி தீபாவளி வாழ்த்துச் சொல்வாங்க. நானும் எல்லோருக்கும் தீபாவளி வாழ்த்துச் சொல்லிவிட்டு மறுபடியும் வெடி வெடிக்கத் தொடங்குவேன்.

## "பாட்டாசு வெடிப்பவர்களை அறையத் தோணும்" மீரா ஜாஸ்மின்

சத்தத்தைக் கேட்டாலே மிரளுவேன், யாரும் சத்தமாப் பேசக்கூடாது. அதிர அதிர பாட்டுக் கேட்கக் கூடாதுன்னு என்னோட வீட்லயே ஏக கண்டிஷன் போடுவேன். வெடின்னாலும் பயம். சில பேர் ரெண்டு தெரு நீளத்துக்கு சர வெடிகளைப் பரப்பி வெச்சு வெடிப்பாங்க. ஏன்தான் இவ்வளவு பெரிசா வெடிக்கறாங்களோன்னு கோபம் கோபமா வரும். யார்னு போய் பார்த்து பளார் பளார்னு கன்னத்துல ரெண்டு அறை விடலாம்னு தோணும். அழகா மத்தாப்பு, புஸ்வாணம்னு விட்டா போதாதா? இது மீரா ஜாஸ்மினின் தீபாவளி உபதேசம்.

## தேவி.... ஸ்ரீதேவி

இந்தியத் திரையுலகின் கனவுக் கன்னி ஸ்ரீதேவி நீண்ட இடைவேளைக்குப் பிறகு மீண்டும் தமிழ்த் திரைக்கு வருகிறார்.

சிறிய வயதிலிருந்தே ஸ்ரீதேவியின் பரம ரசிகரான நடிகர் விஜய், தன் படங்களில் ஏதாவது ஒன்றில் ஸ்ரீதேவியை நடிக்க வைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே நினைத்துக் கொண்டிருந்தாராம்.

இதையடுத்து சூர்யா இயக்கத்தில் விஜய் நடிக்கவுள்ள ஒரு படத்தில் ஸ்ரீதேவி நடிக்கப் போகிறார். அநேகமாக இப் படத்தில் விஜய்க்கு அக்காவாக அவர் வருவார் என்று தெரிகிறது. படத்தைத் தயாரிக்கப் போவதே ஸ்ரீதேவிதான் என்கிறார்கள்.

அதற்கு முன்பாகவே தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியின் தம்பி பவன் கல்யாண் நடிக்கும் 'ஜானி' என்ற படத்தில் ஒரு கெஸ்ட் ரோல் மூலம் தென்னக திரையுலகில் ஸ்ரீதேவி 'ரீ-என்ட்ரி' ஆகிறார்.

காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் படம் எடுக்கப்படுகிறதாம். ஸ்ரீதேவிக்கும் நன்றாகவே காமெடி வரும் என்று கூறி அவரையும் நடிக்க வைத்துள்ளார் சிரஞ்சீவி.

ஸ்ரீதேவி மீண்டும் நடிப்பதற்கு அவரது கணவர் போனி கபூர் ஓகே சொல்லி விட்டாராம். தனது படத் தயாரிப்பு நிர்வாகத்தில் ஸ்ரீதேவிக்கு மிக முக்கிய இடம் தந்துள்ளாராம் போனி கபூர். சத்தம் போடாமல் தமிழ் உட்பட பல தென்னிந்தியப் படங்களுக்கு ஸ்ரீதேவி முதலீடு செய்து வருகிறார்.

# சினி விசிட்



சூர்யா-ஜோதிகா
படம்: காக்க காக்க

## மின்னல் மீரா

...இச்சு தா என்று 'ரன்' படத்தில் பாடிய ...ளிடம், உன் கால்ஷீட்டை எங்களுக்கு பிச்சு ... தா என்று பல இயக்குனர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர் ... தாய் மொழிப் பற்றை வெளிப்படுத்துகிறார். அதாவது, மலை... நடிப்பதற்கு செவிசாய்க்கிறார். அவர் நிறைய தமிழ்ப் படங்களில் ...ண்டும் என்று விரும்பிய 'பாலா'பட யூனிட்டைச் சேர்ந்த சிலர், ...ரை மீரா ஜாஸ்மின் கால் ஷீட்டைக் கவனிக்கும் படி கூறியுள்ள... பாலா படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் மீரா ஜாஸ்மின், ...ந்தரின் கவிதாலயா நிறுவனத்துக்கு கால்ஷீட் கொடுத் ... விஜய்யுடன் 'கீதை' படத்தில் நடிக்கவும் சம்மதித்துள் ...ன் மின்னல் வேகப் பிரவேசம் பல நடிகைகளை ...ச் செய்துள்ளது.

## ...னும் நாலு வருஷம்

... இப்படியென்று தன்னு ...னத்தைத் தன் ... கொண்டே ... ரம்யா ... என் ...

...க்கு இன்னும் நாலு வருஷம் கழிச்சுத் ...ான யோகம் இருக்குமுனு ஜோசியர் ... அதனாலதான் என் மேரேஜைப் பற்றி ...ம இருக்கேன் என்ற அவர், தன்னைப் ...சிக எழுதும் பத்திரிகையாளர்களிடம், இனி ... மேரேஜைப் பற்றி எந்த நியூசும் போடாதீங்க ... டெலிபோன் செய்து வேண்டுகோள் விடுக்கி... இன்னும் நாலு வருஷமா?

## ...ந்தியாவின் 'கதாநாயகி'

...ரமான ஒரு குடும்பத் தலைவியாக விந்தியா நடிக்கும் ...நாயகி', பத்திரிகை போட்டோகிராபரும், ஒப்பனை... விசம்நாகராஜன் தயாரிப்பில் உருவாகும் இந்தப் ... பெங்களூர் விபாராய் இன்னொரு கதாநாயகியாக ... பாரதிசே என்ற புதியவர் இசை அமைத்துள்ளார் ...டல்களும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு விட்டது. ஒரு ... அம்மாவாக-பிரேம் மனோஜ் மனைவியா நடிக்கும் ...தலில் படத்தின் கதையைக் கேட்டேன்... பிடித்திருந்தது ... கேரக்டரைக் கேட்டேன்... பிடித்திருந்தது. எதைப் ப... ...க்காமல் உடனடியாக கால்ஷீட் கொடுத்துவிட்டேன் ...ரக்டர் என்றால் சும்மாவா! படத்தின் முக்கிய திருப்ப... ...ன் கேரக்டர்தான். அப்ப நான் சும்மா இல்லையோ? ... கேரக்டர் பலத்தை நிரூபிக்கிறார். கைதட்டிக் கா... ...ால்... எல்லா கேரக்டருமே வெயிட்தான்.




## தமிழ் பேசப்போகும் சிம்ரன்

'கோவில்பட்டி வீரலட்சுமி' படம் மிகவும் வித்தியாசமாக எடுக்கப்பட்டுள்ளதாம். இந்தப் படத்தில் சிம்ரனின் நடிப்பு கலக்கலாக இருக்கிறதாம்.

பெருத்த சர்ச்சைகளுடன் படமாக்கப்பட்டுள்ள கோவில் பட்டி வீரலட்சுமியில் கிராமத்துப் பெண்ணாக நடித்துள் ளார் சிம்ரன். அதுவும் சொந்தக் குரலில் பேசி.

'குருவம்மா' படத்தில் தேவயானி சொந்தக் குரலில் பேசியதை (பேசினாரா?) அறிந்த சிம்ஸ், தானும் வீர லட்சுமி படத்தில் சொந்தக் குரலில்தான் பேசுவேன் என்று அடித்துக் கூறி விட்டாராம்.

வேறு என்ன செய்வது, வினையே என்றுஓ.கே. சொல்லி விட்டாராம் தயாரிப்பாளர்.

இப்போது சிம்ரன் தன் கட்டை பஞ்சாபிக் குரலில், தமிழ் மழை பொழியப் போகிறார்.

## கோயில் கட்டாதீங்க, ப்ளீஸ்

செரீன் பதறிப்போய்விட்டார். தமிழில் நடித்தது துள்ளுவதோ இளமை என்ற ஒரே ஒரு படம்தான். அதற்குள் அவரது புகழ் பட்டிதொட்டி எல்லாம் பரவத் தொடங்கி, அகில உலக செரீன் ரசிகர் மன்றம் தொடங்க விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாம்! எனக்கா இந்த வரவேற்பு? என்று ஆச்சரியப்பட்ட அவருக்கு சில ரசிகர்கள் கோயில் கட்ட முடிவு செய்துள்ளனராம்!

இதை ஜாடைமாடையாகக் கேள்விப்பட்ட செரீன், உடனே அந்த ரசிகர்களை அழைத்து, "இதோ பாருங்க...நானும் உங்களை மாதிரி ஒரு சாதாரண மனுஷிதான். என் படத்தை பார்த்து ரசிச்சா போதும். கோயிலெல்லாம் கட்டாதீங்க. முதல்ல உங்க அப்பா, அம்மாவை மதித்து நடக்கப் பாருங்க!" என்று அறிவுரை வழங்கி அவரவர் ஊருக்கு அனுப்பி வைத்தார். அடேங்கப்பா, எவ்ளோ பெரிய மனசு!

## காதோடு சொல்லுகிறோம்

...நடிகரும் ஸ்லிம் நடிகையும் தாலி கட்டிக் கொள்ளாமல் சேர்ந்து வாழ்கிறார்களாம். இதை இருவரிட...ல் இல்லை என்று மழுப்புகிறார்கள். ஆனால், எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும் இருவரும் சேர்ந்தே ...ள். இவர்களது வாழ்க்கையை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் ...ர்கள் கூறுகிறார்கள். அண்மையில் நாயகன் மகளுக்கு நடந்த பிறந்தநாள் விழாவில் கலந்து ...ஸ்லிம் அவரை கட்டியணைத்து பாராட்டி இருக்கிறார்.

...க்கு நம்பர் ஒன் படத்திற்காக மூன்றெழுத்து கண்ணழகி இளமை துள்ளல் ...ம்பி வந்ததும் பயங்கர மூட் அவுட். அதற்குக் காரணம் அங்கு படக் ... அம்மணியை புரட்டி எடுத்துவிட்டார்களாம். அம்மணி இப்போது வெளி... ...ால் அடித்து விடுவார். அந்தளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்.

... நடிகையும், ஜோ நடிகையும் தோழிகளாகி விட்டனர். 'பயர்' ... சென்று கொண்டிருக்கிறதாம். இருவரது நட்புக்கும் பேடமே ...ஜர்தான் காரணமாம்.

... இரட்டை வேடத்தில் நடித்த 'பயர்' என்றளவுக்கு 'வில்லன்' ... இரு நாயகிகள். இரண்டு பேருமே 'நடிப்பில்' அசத்தியதில் ... போனாராம் நாயகன்.

... நடிகர் 'கேம்' விளையாடுவதில் கில்லாடி. அண்மையில் நடந்த ...ல் டிராவல்ஸ் நடிகையுடன் மேக் அப் அறையில் நடத்திய டிஸ் ...லோருக்கும் தெரிந்துவிட்டது. இதனால் ஆத்திரமடைந்தவர் யூனிட் ...திதாக போடச்சொல்லி தொந்தரவு செய்து வருகிறார்.

... இரண்டு படத்தில் நடித்த இரண்டெழுத்து நடிகை முதல் படத்தில் கிடைத்த மகிழ்ச்சியை ...க்கொள்ள அடுத்த படங்களைக் காணக் காத்திருந்தார். யாரது கடைக்கண் ... விழாததால் தற்போது புகைப்படங்கள் எடுத்து பத்திரிகைகளுக்கு கவர்ச்சி ... போடச் சொல்லி அனுப்புகிறார். இதனால் அவர்மீது பார்வை விழும் ...திர்பார்க்கிறார்.

...ான ஆட்டக்காரியான குண்டு தயாரிக்கும் பொருள் கொண்ட நடிகையின் ...போது தாயைப் போலவே ஆட்டத்தில் இறங்கிவிட்டார். அவருடன் ஆடிய ... விபரீதத்தால் வயிறு கணத்துப்போக இப்போது சுத்தம் சுகம்தரும் என்று ...னை நோக்கிச் சென்று வருகிறார்.

...ான காமெடி நடிகரின் பேத்தி நடித்த இரண்டு படங்களும் 'ப்ளாப்' ... தன்னை ராசி இல்லாத நடிகை என்று கூறுவார்கள் என்று பயந்து போய் ... இதனால் தனது நடிப்பைப் பாராட்டச் சொல்லி ஒவ்வொரு கம்பெனிக்கும் ...போட்டு பேசுகிறார்.

...கு மறுபெயர் கொண்ட நடிகை தனது சம்பளத்தை உயர்த்தி வாங்குவதோடு ... திறப்புவிழா, விளம்பரப் படங்கள் என்று எந்த வாய்ப்பு வந்தாலும் பணத்தை ... கொண்டு படப்பிடிப்புக்கு போகாமல் டிமிக்கி கொடுத்து வருகிறார்.

...ழிக்கு படங்கள் எதுவும் தற்போது இல்லாததால் தனக்கு நல்ல கேரக்டர்கள் தருமாறு ...ஹீரோக்களை விழாக்களில் சந்திக்கும் போது கேட்டு வருகிறார். அதே போல வீட்டுக்கு ... விருந்தும் படைக்கிறார். அவர் இறக்கி வச்ச சரக்கை ருசித்தவர்கள் சரியில்லை என்று ...க்கின்றனர்.



### முகப்பில்

ஷாம்
மீரா
ஜாஸ்மின்
படம்:— பாலீ

## மினி சினி

* சரிகா நிரந்தரமாக மும்பைக்குப் போய்விட்டார். கமலும், சிம்ர னும் வெளிப்படையாக கைகோர்த்து வலம் வர ஆரம்பித்து விட் டார்கள். மகள்கள் ஸ்ருதியும், அக்ஷயாவும் அம்மாவுடன் மும்பைக்குப் போய்விட்டார்கள். சென்னை வந்தால் வீட்டில் தங்குகிறார்கள். ஆனால் அப்பா மட்டும் ஹோட்டலில்தான் தங்குகிறார். கொஞ்ச நாட்களாகவே கமல் தனது வீட்டுப் பக்கம் வருவதில்லை.

* ஏற்கனவே மோதலில் உள்ள பார்த்திபன்- சீதாவும் விரைவில் டைவர்ஸ் செய்யப்போகிறார்கள். தனித்தனியே வசித்துவரும் இருவரும் விரைவில் அதிகார பூர்வமாக கோர்ட்டை நாடவுள்ளார்கள் என்று பேச்சு அடிபடுகிறது. பார்த்திபனுக்கும், பிரபல கர்நாடக இசைப் பாடகி ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட நட்பு வேறு ரூட்டில் போகத் தொடங்கியுள்ளதாம். இதனால் கர்நாடகத்தின் வீட்டில் காவிரிப் பிரச்சனையை விட பெரும் பிரச்சனை எழுந்துள்ளதாம்.

* விரைவில் ராமராஜனுடன் மீண்டும் சேர்ந்து விடுவேன் என்று தனக்கு நெருக்கமானவர்களிட மெல்லாம் சந்தோஷத்துடன் கூறி வருகிறா ராம் நளினி. அட!

* பானுப்பிரியாவிக்கு பெண் குழந்தை பிறந் துள்ளது. கணவருடன் லாஸ் ஏன்ஜெல்ஸில் வசித்து வருகிறார் பானுப்பிரியா.

* நடிகர் அர்ஜுனுக்கு சென்னைக்கு அருகே மிகப் பெரிய காய்கறிப் பண்ணை உள்ளது. இங்கு பெரும்பாலும் கன்னடர்கள்தான் தொழிலாளிகளாகப் பணியாற்றி வந்தனர். இதை சிலர் சுட்டிக் காட்டியதால் ஆட்களை மாற்றி விட்டு லோக்கல் ஆட்களைப் போட்டு விட்டாராம்.

* 'நகர காட்சிகளில் ஒரு காதா' என்ற மலையாளப் படத்தில் நடித்து வருகிறார் சௌந்தர்யா. ஜெயராமுக்கு ஜோடியாக நடிக்கி றார் அவர். சென்னையில் வாழும் மலையாளக் குடும்பத்தைப் பற் றியதாம் இப் படம்.

* 'பகவதி' படத்துக்காக ஹேர் ஸ்டைலை மாற்றிக் கொண்டுள்ளார் ஹீரோ விஜய். டெண்டுல்கரைப் போல் ஸ்டைல் பண்ணிக் கொண்டி ருக்கிறார் மனிதர்.

## முரளிக்கு கல்தா

கஸ்தூரி ராஜா, நடிகர் முரளியை வைத்து 'காதலாகி' என்ற பெய ரில் இயக்கவிருந்த படத்தை மூட்டை கட்டிவிட்டாராம். அத்துடன் படத்தின் தலைப்பைக் 'காதல் கொண்டேன்' என்றும் மாற்றி முரளிக்கு கல்தா கொடுத்துவிட்டதாகத் தகவல். இப்போது தன் மகனையே நாயக னாக வைத்துப் படம் எடுக்கிறார்.

## விலை மாதர்கள்..

வறுமை-அவளிடம்
வாழ்க்கை கேட்டதால்
அவள் வாழ்க்கை
வழிதவறி, தடம்மாறிப் போச்சு...

விடிய விடிய...
பேச்சுவார்த்தை நடத்தி
இறுதியில்...
விளக்கோடு சமாதியாகும்
விட்டில்களின் ஆயுள்...
அவர்களின் வாழ்க்கை!

விரும்பியோ
விரும்பாமலோ
ஒவ்வோர் கணமும்...
கள்ளிச் செடியை
முட்சீப்பால் வருடிய மாதிரி
மனசெங்கிலும்
ஒரே ரணம்...

எலும்புத் துண்டுக்காய்
நாக்கைத் தொங்கப் போடும்
நாய்களல்ல...
இரத்தமும் சதையும் பிண்டமும்
உணர்ச்சிகளும கலந்த
கலவைகள்
அவர்கள்!

காலத்தின் கட்டளையை
மீற முடியாமல்
தவிக்கும்
இவர்கள்...
காலத்தின் கழிவுகளல்ல;
கண்ணீரின் அறுவடைகள்!!

சமூகங்கள்
சாக்கடையென
சபிக்கலாம்...
ஜாதிகள்
ஜடமெனத்
தூற்றலாம்...
கேலிக்குரிய
கேள்விப் பொருளான
இவர்கள்-ஓர் நாள்...
வேள்விகளால்
விடை தருவார்கள்..
மௌனங்களால்
சபிப்பார்கள்...
அதுவரையிலும்....

விடியலை எழுதாத
இரவாய்
இவர்களின் கோபம்
அமாவாசைக்குள்
புதையுண்டுள்ளது...
ஓர் நிலவில்லையா
இவர்கள் இருளகற்ற...???
திரை-
நட்சத்திரங்கள் புரிந்தால் அது-
'கலைச் சேவை!'-அதன்
நகல்கள் இவர்கள்
புரிந்தால் அது...
'விபச்சாரம்!!'
ஏனிந்தப் பாகுபாடு,
ஓரவஞ்சனை...?

எழுத்தாளன்
கதை வியாபாரி;
இவர்கள்
ஒரு வகையில்
சதை வியாபாரி!!
இருவரும் ஒரே
ரகம்தான்
துச்சாதனர்களாக மாறி
இவர்களே (எழுத்தாளன்)
துகிலுரிவதால்...

எஸ்.ஏ.மொஹமட் நிலாம், கரம்பை.

## என் கனவில்

வேர்களாய் நீண்டு
நாக்கிளிப்புழுவாய்
ஊர்ந்து வரும்
உன் கரம்
என் தலை கோதி
மனசுக்குள் சிக்கெடுக்கும்!

இடிபாடுகளுக்கிடையே
இறங்கிவரும்
நதிகளாய்
உன் தசை மடிப்புகளில்
தங்கிப் போகும்
வியர்வைத் துளிகளை
என் விரல்கள்
தடவிப் பார்க்கும்!

தூக்கத்துக்கும்
விழிப்புக்கும் மத்தியில்
மனசு கிடக்க
என் உணர்வுகளின்
மேற்பரப்பை
உன் தாவணியின் கூந்தல்
வருடிப் பார்க்கும்!

உன் தும்மலின்
தூறல் பட்டு
வானத்து வெள்ளிகளாய்
என் முகத்தில்
பருக்கள் முளைக்க
தேகமே
சில்வண்டாய்
சிணுங்கத் தொடங்கும்!

உன் அணைப்புகளுக்கான
என் காத்திருப்பு
குறிஞ்சி மலரின்
மௌனத்தில்
நீண்டு கொண்டே
போகும்!

விட்டு விட்டுப் பேசும்
குழந்தையாய்
கொன்னிக் கொன்னி
வளரும் நிலவாய்
என் கனவுகள்
துளிர் விடும் போது
மேலே சுத்திக் கொண்டிருக்கும்
மின் விசிறியின்
சத்தம் கூட
பூவிலிருந்து
கத்தரிக்கப்படுகின்ற
ஒரு காம்பின் வலியாய்
என் இமைகளுக்குள்
நோவும்!

நெல்லிக்காயின்
துவர்ப்புக்குக் கீழே
ஒட்டி இருக்கும்
ஒரு துளி இனிப்பின்
இரகசியத்தைப் போல
என் கனவுகளில்
குடித்தனம் நடத்தும் நீ
நிஜத்தில்
எப்போது வருவாய்!

நிப்காஸ் நிஸ்மி,
பொத்துவில்.

## தேன் கிண்ணம்

## சிவனொளிபாதமலை!

அடுக்கடுக்கான மலைத்தொடர்
அதன் இணைப்பில் உருவானது
அகிலம் போற்றும் சிவனொளிபாதமலை!

இயற்கையின் படைப்பில்
இதமான சாரலில்
இன்றும் இறுக்கமாக காட்சி தருவது
இந்த சிவனொளிபாதமலை!

பௌத்த சமயத்தவரும், இந்து சமயத்தவரும்
முஸ்லிம் சமயத்தவரும் தங்களுக்கென்ற
பெயரைச் சூட்டி
தம் துயர் போக்கிட வழிபட செல்லும்
மலை சிவனொளிபாதமலை!

சாதி மதம் பார்க்காத இடம்
சண்டை சச்சரவு ஏற்படாத இடம்
பல ஜாதி மக்களையும்
ஒரு ஜாதி மக்களென பண்போடு
வழி நடாத்தும் மலை சிவனொளிபாதமலை!

உச்சி முதல் பாதம் வரை
உன்னதமான பாதையில் அமைந்த மலை
உணர்வுகளை தூண்டும் மலை
ஒளி நிறைந்த மின் விளக்குகளால்
அமைக்கப் பெற்ற மலை சிவனொளிபாதமலை.

கண்டவர் கையெடுக்க
காணாதவர் மனம் பதைபதைக்க
கல் நெஞ்சக்காரரையும்
கருணையோடு வரவேற்கும் மலை
இந்தச் சிவனொளிபாதமலை!

ஆங்காங்கே சிதறி கிடக்கும்
தேயிலைத் தோட்டங்கள்
அதன் நடுவே அங்கு செல்லும் பாதைகள்
அப் பாதைகளின் இருமருங்கும் வியாபார கடைகள்
இவை அனைத்திற்கும் வித்திட்டது
இந்தச் சிவனொளிபாதமலை

கிருஷ்ணன், சிவா,
மஸ்கெலியா.

## இறைவனுக்கு ஓர் விண்ணப்பம்!

இறைவா,
இதுவரை உன்னிடம்
எதுவும் கேட்கவில்லை-என்று
என்னிடம் கோபிக்காதே,
வீட்டில்,
நிறைந்த பொருத்தத்துடன்
சிறந்த மணமகனை
தேடுவதால்,
இப்போது
உன் உதவிதேவை.
என் மனம் விரும்புவது-போல
கணவன்
கிடைக்கவேண்டும்.
மறந்துவிடாதே,!
அக்கா வயதுக்கு வந்த போது
தானும்
வயதுக்கு வரவேண்டும்-என
அம்மாவிடம் அழுத பையனின்
குழந்தைத்தனமும்,
கணக்கு ரீச்சரிடம் உள்ள-பயத்தால்
பாடசாலை செல்ல
மறுக்கும்
சிறுவனின் பிடிவாதமும்,
கண்டிப்பான கணக்கு ரீச்சரிற்கு-துளியேனும்
பயமில்லாது
ராக்கற் செய்துவிட்ட விடலைத்தனமும்,
தங்கையின் சிநேகிதியிடம்
தனியே பேச நேர்ந்த போது
வந்த வெட்கமும்,
அப்பாவின் சட்டையை அணிந்து
ஊர்சுற்றிய அனுபவமும்,
ஐம்பது ரூபாய்-அப்பாவிடம்
வாங்குவதற்காக,
அலுவலாக இருக்கும்-அம்மாவை
கொஞ்சியபடி கெஞ்சும்
குறும்புத்தனமும்,
நிறைந்தவனாக உள்ள ஒருவனை
விரைந்து காட்டு,
சிறுபிள்ளை போல கேட்பதாக-சிரிக்காதே
மனம் திறந்து
நான் பேசும் ஒரே நபர் நீ தான்
மறுபடியும்
பேசவேண்டும்-அதனால்
சொல்லுகிறேன்
தயவுசெய்து
சிரிக்காதே!!!!

இந்திலன்-அமெரிக்கா.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஏ.எம்.றிகான்,
வயது: 20
முகவரி: இல. 247A,
பெண் பாடசாலை வீதி,
சாய்ந்தமருது-09.
பொழுது போக்கு:
சமூகசேவை,
பத்திரிகை வாசித்தல்.



பெயர்: S.Thasarathan
வயது: 20
முகவரி:
67, Avenue Pasteur,
93150 Le Blance Mesnil,
France.
பொழுது போக்கு:
பத்திரிகை. Internet.



பெயர்:
M.M.M. Jiffry
வயது: 24
முகவரி:
P.O.BOX 19323,
D0ha, Qatar.
பொழுது போக்கு:
வழமையானவை

## ஹைக்கூ

பாவம் பிறந்தவுடன்
கம்பி எண்ணுகிறான்
மேசை மின் விசிறி
**
யார் வாசிப்பது
இத்தனை பெரிய குழலை
துளையிடும் மரம் கொத்தி
**
யாருக்குப் போடவோ
உயிர் நடுங்கும் சூட்டுக்கோல்
அந்தி வானம்
**
அவளை சுவைப்பதற்கு துகிலுரித்தேன்
என் கண்கள் கலங்கின
கையில் உரித்த வெங்காயம்

அபுஸர்பான்.

## தேடல்

தொடுவானமாய் நீ தெரிய
தொட்டுவிடுவதற்காய்....
ஏகாந்த வெளிதன்னில்
என்மனம் பயணிக்கும்.

இருளில்கூட
இலக்குத் தவறாது
என் மனப்பயணம்
இடையறாது தொடரும்.
எனினும்...
உதிக்கும் நிலவின்
முதுகைப் போல்
உனது மனமும்
என்றுமே தெரிவதில்லை.

அனுப்பிரியன், யாழ்.

## நினைத்து, நினைத்து சிரிக்க



ரவுண்ட்ஸ்ல வந்துட்டிருந்த டாக்டர் ஒரு கட்டிலிலிருந்த பேஷண்டைக் காணாம திகைச்சுப் போய், "இந்த கட்டிலில் இருந்த பேஷண்ட் எங்கே?"ன்னு நர்ஸைக் கேட்டாரு. உடனே நர்ஸ் கூலா. "டாக்டர்! அந்த பேஷண்டின் டெம்ப்ரேச்சர் மிகவும் இறங்கிவிட்டது. பக்கத்து கட்டிலிருந்த ஒரு பெண்ணுக்குக் கூடுதலாக 107 டிகிரி என்று டெம்பரேச்சர் ஏறிவிட்டது அதனால் இருவரையும் சமப்படுத்துவதற்காக அவனை அந்தப் பெண்ணுடன் சேர்த்து படுக்க வைத்திருக்கிறேன்."னு பதில் சொன்னாங்களாம்.

அது நிமோனியா காய்ச்சலுக்கு மருந்து கண்டுபிடிக்காத நேரம். ஒரு டெய்லர் உடம்பு சரியில்லேன்னு ஒரு டாக்டர்கிட்ட போக, செக் பண்ண டாக்டர் 'இது நிமோனியா'ன்னு கண்டுபிடிச்சு வருத்தத்தோட "அப்பா! நீ ஒரு வாரத்துல போயிடுவே"ன்னு சொல்லிட்டாரு. பத்து நாள் கழிச்சு டாக்டர் அதே டெய்லர் சந்தோஷமா கடை வீதியில சுத்தறதைப் பார்த்து "எப்படிப் பிழைச்சே"ன்னு கேட்டாராம். "நீங்க ஒரு வாரத்துல போயிட்டுவேன்னு சொன்னதால இருக்கிற வரைக்கும் சந்தோஷமா இருப்போம்னு நேரா ஒரு ஹோட்டலுக்குப் போய் முப்பது மசால் தோசை சாப்பிட்டேன். அப்பவே தெம்பு ஆயிட்டேன்"னாராம். அடுத்த நாள் ஒரு பார்பர் டாக்டர்கிட்ட வந்தப்ப, அவருக்கும் நிமோனியான்னு தெரிஞ்சதும் "அப்பா! நீ நேரா ஒரு ஹோட்டலுக்குப் போய் முப்பது மசால்தோசை சாப்பிடு"ன்னாராம். அவர் சாப்பிட்ட மறுநாளே மண்டையைப் போட்டாராம். உடனே அந்த டாக்டர் தன்னோட மருத்துவ போர்டுல, "ஒரு டெய்லருக்கு நிமோனியா வந்தால் 30 மசால் தோசை சாப்பிட்டால் சரியாகும். அதே ஒரு பார்பருக்கு நிமோனியா வந்தால் முப்பது மசால் தோசை சாப்பிட்டாலும் உபயோகமில்லை"ன்னு எழுதி வச்சாராம்.

ஹேமநாத பகவதர் போல் ஒரு புலவர் ராஜ வீதியில் கம்பீரமாக பல்லக்குல போய்க் கொண்டிருந்தார். அவர் நெற்றியில் ஒரு செம்பு தகடு கட்டித் தொங்கிக்கிட்டிருந்தது. எதிரில் ஒல்லியா திருவிளையாடல் 'தருமி' போன்ற ஒரு புலவர் நடந்து வந்திட்டிருந்தார். அவர் பல்லக்கில் இருந்த புலவரைப் பார்த்து, "புலவரே மெத்தப் படித்த நீங்க நெற்றியில் எதற்காக செப்புத்தகட்டை கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அதை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று வினவ, பெருமிதமாக சிரித்தபடி, "நான் ஏராளமாக கற்றுக் கொண்டேன். அந்த கனத்தால் என் தலை வெடித்துவிடாமல் இருக்கத்தான் செம்புத்தகடு" என்றது பல்லக்கு. அதே சமயம், அந்த ஒல்லி புலவர் காதில் ஒரு சின்ன ஓலைச் சுவடி சுருட்டி செருகப்பட்டிருந்தது. "அது என்ன காதில் ஓலைச்சுவடி" என்றார் பல்லக்குப் புலவர். "அது வேற ஒண்ணுமில்லீங்க. ஞான சூனியங்கள் ஏதாவது சொன்னா, என் காது ஜவ்வு கிழியாம இருக்கிறதுக்குத்தான்" என்று ஒரு போடு போட்டார்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

ஈழத்தில் கவிதைக்குள் பேச்சோசைப் பண்பை வளர்த்த முதன்மைக் கவிஞர்களில் ஒருவர் சில்லையூர் செல்வராசன். இதற்கு மேலாக, அங்கதச் சுவை நிரம்பிய பாக்களைத் தந்து பரவசப்படுத்தியவர். தான்தோன்றிக் கவிராயர் என்ற புனை பெயரிலும் கேலியும் கிண்டலுமாகப் பல நூறு கவிதைகள் பொழிந்தவர் இந்தப் பல்கலை வேந்தர்.

***இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக*** சில்லையூர் செல்வராசனின் கிண்டல் கவிதைகள் சிலவும், தமிழக கவிஞன் க.சீ.சிவகுமாரின் கவிதையொன்றும் இடம்பெறுகின்றன.

## சிறப்புக் கவிதை



### காசப்பன் தெருட்டு!

தண்பனிக்கு மெய்கொடுகிக் கண்வளரும் காசப்பா!
விண்பனிக் கஞ்சாதுழைப்பின் வேர்வையினை-உன்பயிர்க்கு
மண்பனிக்கச் சிந்தி நொந்தும் வாழ்வுபெறா ஏழைகளின்
கண்பனிக்குன் பார்நடுங்கும் காண்!

### கைத்தலம் பற்றும் கனா!

கைகுலுக்கிக் கொண்டே களத்துக்குள் மல்யுத்த
மெய்வல்லு னர்இருவர் மேவுவார்- செய்யமண
வேளையிலே தம்பதிகள் மேற்கொள்ளும் 'கைப்பிடி'யில்
ஆழமுள்ள தார்த்தம் அறி!



### 'பொல்'லாங்குழல்!

பாம்பொன்று சீறப்புல் லாங்குழலைப் பேர்பெற்ற
சாம்பசிவம் வித்துவான் கைதூக்கித்-தாம் பயின்ற
வித்தையெல் லாம்கூட்டி மீட்டினார் பாட்டொன்றைச்
செத்ததுடன் பாம்பு திகைத்தது!

### கிட்டாதாயின் வெட்டென மற!

நெட்டைச்சீ மாட்டிஅழ கேசம்மா சென்றொருநாள்
உற்றாள் மிருக உயிர்ச்சாலை-கிட்டிமுக
வெட்டழகு பார்க்க விழைந்துடனே விட்டதோர்
ஒட்டைச் சிவிங்கி உயிர்!

### வானொலி வாழ்த்து!

சொல்வதற்கே ஒன்றுமிலார் சொல்வதனை, கேட்பதற்கு
வல்லவரும் கூட மறுத்துக்கேட் காதிருக்க
நல்லகருவி ஒன்றை நானிலத்தில் விஞ்ஞான
வல்லார்கள் செய்ததற்கு வானொலிஎன் றிட்டார்பேர்!

### காசைப் பற்றிய கடவுள் கருத்து!

கடவுள் பணத்தைக் கருதுவதே தென்று
திடமாய் அறியவழி கேளாய்-மடமாதே!
யாரைப் பணக்கார ராக்கியுள்ளார் என்றாய்ந்து
பார்ஐயம் தீர்ந்து விடும்!

* குண்டுகளைத் தீர்க்கவே துப்பாக்கி வல்லதன்றிச்
சண்டைகளைத் தீர்க்கவன்று காண்!

* கற்றதனா லாய பயனென்கொல், மற்றோர்மேற்
குற்றஞ் சுமத்தா விடின்?

* ஒருவர் மனத்தை ஒருவர் திருடின்
திருமணமே ஆயுட் சிறை!

* அதிர்ஷ்டத்தை நம்புகிறேன்; இன்றேல் என் வைரி
எதிர்ப்பற்றி உய்தான்முன் னேறி?

* சாவதா தேசத்துக் காக? இலை! அதற்காய்
வாழ்வதே வீர வழி!

* அரைச்சத நாணயம் அடிப்பது நின்றதால்
எத்தனை கொடைஞரை இழந்ததெம் தேசமே!


* குடிகாரக் கோபாலன் குடியாமற் சென்றொருநாள்
கடிபட்டான் தன் வீட்டுக் காவல்நாய் வீமனினால்!

### பார்க்கின்ற மலரூடு...

புலர்ச்சியின் கரையில் நான்.
நீர்ப்பரப்பு மையத்தில்
மடலவிழ்கிறது மெல்ல அது.
விரிதல் காணுதல் பேறு.
தொடப் படாத தாலேயே
ஏதாவொனெனக் காணும் தாமரை.
இடையறாப் பயணத்தில்
இலக்கு கொள்ளத் தோது.
மலர்ச்சிக்குச் சற்றே முந்தைய
கூம்பதல் மட்டுமே
காணச் சகியும் எனக்கு.
பரப்பிற் சங்கமிக்கும் என்
பிரியத்தின் விழி நீர் ஓடை.
துணுக்களவேனும்
மட்டமுயரும் என்ற போதும்
மூழ்குதல் சாத்தியமேயில்லையென
தனை நீட்டும் தண்டின் விசித்திரம்.
அன்பின் அடர்த்தி கொண்ட
எதுவும் மிதக்கும்.
பிரளய நீர்க்காட்டிலும்
மீந்து தலையசைத்து
உயிர்ப்பின் சூத்திரத்தை அது
பூமிக்குச் சொல்லிவிடலாம்.
அதன் கதகதப்பின் மர்மங்களை
ஆராய முற்படுமென் மனக்கரங்கள்.
கால் வைக்கிறேன் நீரில்.
முகிழ்க்கும் அலை வளையல்கள்
மலர் கடந்து பயணித்து
தொடுவானின் திசைத் தாவும்
சிலிர்த்து மீண்டு கரை அமர்கிறேன்
பனிமலர்ப் புலத்தில்
உலவுதில் உன்னதம்
தொடுத்தல் அதீதம்.

-க.சீ.சிவகுமார்.

# அருமருந்தாகும் தயிர்



முதன் முதலில் தயிர், துருக்கியில்தான் தயாரிக்கப்பட்டது என்று நம்பப்படுகிறது. நீண்ட காலமாக பல் வேறு நாடுகளில் தயிர் ஒரு முக்கியமான பங்கை ஆற்றியிருக்கிறது. இந்தியா, துருக்கி அமெரிக்கா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் தயிர் உணவுப் பழக்க வழக்கங்களில் முக்கியமான பகுதியாக இருந்து வருகிறது.

தயிரில் முக்கியமான விட்டமின் சத்துகளும், புரதச் சத்துகளும் அடங்கியுள்ளது. கல்சியமும், ரிபோஃபிளேவின் என்ற விட்டமின் 'பி'யும் தயிரிலிருந்தே பெறப்படுகிறது. தயிரில் உள்ள புரோட்டீன், பாலில் உள்ள புரோட்டினை விட சீக்கிரமாகவே ஜீரணமாகிவிடும்,

பாலை உட்கொண்ட ஒரு மணி நேரத்தில் 32 சதவீத பால் மட்டுமே ஜீரணப் பாதையில் செல்கிறது. ஆனால் தயிரோ 91 சதவீதம் அதே நேரத்தில் ஜீரணமாகி விடுகிறது.

பாலைத் தயிராக மாற்றும் பக்டீரியா குடலில் உருவாகும் நோய் கிருமியான பக்டீரியாவின் வளர்ச்சியைத் தடுக்கிறது. மேலும் ஜீரண சக்தியை அதிகரிக்கும் நன்மை செய்யும் பக்டீரியாவை உருவாக்குகிறது.

இயற்கையிலேயே ஒருவர் அழகாக இருக்க தயிரைத் தவிர சிறந்த மருந்து வேறெதுவும் இல்லை.

சூரிய ஒளியில் பாதிக்கப்படும் நரம்புகளையும், தோல் பகுதிகளையும், தயிர் தனது ஆரோக்கியமான கலவைகளால் பாதுகாக்கிறது.

தயிரில் இருக்கும் பக்டீரியா, தோலை மிருதுவாகவும், பளபளப்பாகவும் மெருகு ஏற்ற அருமையான ஒரு மருந்தாகும். தோடம் பழத்துடனோ அல்லது எலுமிச்சைச் சாறுடனோ தயிரைக் கலந்து முகத்தில் தடவினால் முகம், நாளடைவில் பருக்களற்று பள பளப்பாகும்.

தயிர் தோலை ஈரப்பதமாக வைக்க உதவுகிறது. பழச்சாறு அதற்குத் தேவை யான விட்டமின் 'சி'யை அளிக்கிறது.

ஒரு கப் தயிருடன், ஒரு தேக்கரண்டி பழச்சாறைக் கலந்து அதை முகம், கழுத்து ஆகிய பகுதிகளில் நன்றாகத் தடவி விட வேண்டும். பிறகு 15 நிமிடங்கள் கழித்து, மிருதுவான துணியிலோ, காகிதத்தாலோ அதைத் துடைத்து விட்டு, தண்ணீரால் அலம்பிக் கொள்ள வேண்டும்.

தயிருடன் அரிசி மாவைக் கலந்து, முகத்தில் தடவி பிறகு ஒரு 15 அல்லது 20 நிமிடங்கள் கழித்து மிதமான சுடு நீரில் கழுவி விட்டால் முகம் நன்றாகவும் மிருதுவாகவும் ஆகிவிடும்.

தலைமுடியை நன்றாகப் பாதுகாக்கவும் சிறந்த மருந்தாக இருக்கிறது தயிர். மயிர்க்கால்கள் வரை தயிரை நன்றாகத் தடவி, பிறகு குளித்துவிட்டால் தலைமுடி மிருதுவாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

தயிரைத் தலைமுடியில் தடவி, ஒரு அரைமணி நேரம் தேய்க்க வேண்டும். இவ்வாறு செய்தால் பொடுகுகள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் போக்கு போன்றவற்றிற்கும் தயிர் தான் சிறந்த மருந்து. உணவை ஜீரணிக்க தயிர் உதவுவதோடு மட்டுமல்லாமல் வயிற்றின் வாயுத் தொல்லையிலிருந்தும் விடுவிக்கிறது.

குடலில் சதை வளரும் 'அப்பண்டி சைட்ஸ்' மற்றும் வயிற்றுப் போக்கு போன்றவற்றிற்கு காரணமாக இருக்கும் கிருமிகள் தயிர், மோர் இவற்றில் உள்ள லேக்டிக் அமிலத்தால் விரட்டி யடிக்கப் படும்.

ஒரு கை நிறைய தயிரை எடுத்து தலையில் தேய்த்தால் தூக்கம் நன்றாக வரும்.

தயிரை நாம் சரியாக உபயோகித்தால் நாளடைவில் எதிர்ப்புச் சக்தி குறைந்து, உடம்பில் பரவும் ஒரு விஷத்தன்மையால் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதைக் கூட தடுத்துவிட முடியும் என்று ஒரு ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

மஞ்சள் காமாலையால் சிலர் 'கோமா'வில் வீழ்ந்து விடும் ஆபத்து கூட இருக்கிறது. காரணம், அதிகமாக சுரக்கும் அமோனியாதான். இதைக் கூட தயிரின் உபயோகம் சரி செய்து விடும்.

மஞ்சள் காமாலையின் போது தயிரிலோ, மோரிலோ சிறிதளவு தேனைக் கலந்து உட்கொள்வது சிறந்த உணவு முறையாகும்.

## பெண்களுக்கும் சந்தர்ப்பம்



இலங்கைப் பெண்களுக்கும் பஸ் நடத்துனர்களாக வேலைசெய்யும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறத.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களை கொள்வனவு செய்துள்ள பிரிட்டிஷ் நிறுவனம் எதிர்காலத்தில் இங்கு பாவனைக்கு விடவிருக்கும் இரண்டு தட்டு பஸ்களில் பெண்களை நடத்துனர்களாக நியமிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

போக்குவரத்துச் சேவையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் பெண்களுக்கும் இந்தத் துறையில் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு சிறந்த வேதனம் வழங்கப்படும் என்றும் பிரிட்டிஷ் நிறுவனம் தெரிவிக்கின்றது. ■

# பட்டம் பறிபோன உலக அழகுராணிக்கு ரஷ்ய அதிபருடன் தொடர்பு!



தனது உலக அழகுராணி பட்டத்தை வருடத்தின் இடை நடுவில் பறிகொடுத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பிய, ரஷ்யாவில் இருந்து தெரிவான உலக அழகுராணி ஒக்சோனா பெடரோவா குறித்து புதிய தகவல் ஒன்றை நசனல் என்குவாரர் என்ற சஞ்சிகை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது.

அழகுராணி ஒக்சோனாவுக்கும் ரஷ்யா அதிபர் விலாதிமீர் புட்டினுக்குமிடையில் இரகசிய தொடர்பு இருப்பதாக அந்த சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.


ஒக்சோனா கிடைப்பதற்கரிய உலக அழகுராணி பட்டத்தை வேண்டுமென்றே ஆறுமாதகாலத்தில் இழந்தவர். அவரது பட்டம் பறிக்கப்பட்டதாக போட்டி ஏற்பாட்டுக் குழு அறிவித்த போதும் ஒக்சோனாவுக்கு தனது பட்டம் பறிக்கப்படும் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தது. உலக அழகுராணி போட்டி ஏற்பாட்டாளர்களின் பிந்திய நிபந்தனைகள் சகலதையும் அவர் மீறியே வந்திருக்கிறார்.

ஆதலால் அவர் நினைத்திருந்தால் அந்த பட்டத்தை பாதுகாத்திருக்கலாம். பட்டத்தைப் பறித்தவர்கள் அதற்குக் கூறிய காரணம் ஒக்சோனா திருமணம் செய்து கொண்டு கர்ப்பமாக இருக்கிறார் என்பது தான்.



இப்போது சர்ச்சை வேறு வடிவம் எடுத்”
கிறது. இவருக்கும் ரஷ்ய அதிபருக்கும் இலப்
'அந்தமாதிரியான' தொடர்பிருப்பதாக மதி
ஊடகங்கள் எழுதி வருகின்றன. கியது.
இது குறித்து மிகச் சிலருக்குபார்க்க
தெரியும். ஒக்சோனா நிச்சயமாக மட்டும்
காதலி. புட்டினுக்கு மொஸ்கோடாள்.
இரகசியமான தொடர்மாடியிருக்கு” “பர
இருக்கிறது. இங்கு யாரும் அசொல்லுங்க.”
மாலை நேரங்களில் இந்த இ இப்பேர்பட்ட
கொள்கிறார்கள் என்று த மகனாப் பிறந்
காட்ட விரும்பாத மொஸ் வு நல்லா இருந்தி
இந்த சஞ்சிகைக்கு தெ நான் அடிக்கடி
ஒக்சோனாவை உ ாள்வேன். உங்களிடம்
தெரிவு செய்யும்படி ே என்று நினைத்தேன்
புட்டின் அழுத்தம் ட்டேன். இனிமேல் உங்
வெளியாகியுள்ளன அம்மான்னு கூப்பிட
23 வயதான ? தவறாக இருந்தால்
பணியாற்றுகிறா ன மன்னித்துக் கொள்ளவும்”
முன்னதாக சொல்லி முடித்தான்.
பிரிவில் ப ஸும் வந்துவிட்டது.
காலத்துக் மதி திகைத்துப் போனாள். அத்
அறிமுகம தோடு அவளின் மனப் போராட்ட
இரகசிய மும் ஓய்ந்து விட்டிருந் தது. அன்று
வித்திய ஒரு புது மனிதராய்ப் பிறந்து
இப்பே வந்ததாய் உணர்கிறாள் மதி. அது
என்ல் தாயென்ற புனிதப் பிறப்பு என்ப
னக் தில் அவளுக்கு இரட்டிப்பு
மகிழ்ச்சி.

## செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி



நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Aw
பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
உண்மை– நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16- 11-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்? அனுராதபுரம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்


திருமதி ஜீவநேசன்,
72, மார்க்கட் சைட், அநுராதபுரம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



நேர முழுவதிலுமப் பாவி தன்னையே – உள்ளம்
நினைத்து மறுக்குதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால் – பின்பு
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம்!

**சுப்பிரமணிய பாரதியார்–**



## பாப்பா முரசு சிறுகதை

## போலித் தவசி

எந்த வேலையிலுமே முயற்சியில்லாத ஒரு பூனை இருந்தது. அதனால் அதை புத்திகெட்ட பூனை என்பது வழக்கம். பிழைக்க அது ஓர் உபாயத்தைக் கடைப்பிடித்தது. அதாவது, கங்கைக் கரைக்குச் சென்று கைகளை உயரத் தூக்கிக் கொண்டு நின்றது. மற்றப் பிராணிகள் எல்லாம் அதனிடம் வந்து,

"நீ என்ன செய்கிறாய்?" என்றன.

"நான் மனதைத் தூய்மை செய்து கொண்டு தவத்தைச் செய்கிறேன்" என்று பூனை சொல்லியது. நாட்கள் சென்றன. பறவைகள் பூனையைச் சுற்றி அருகில் பறந்தும் அது ஒன்றும் செய்யாததால் அதைப் புகழ்ந்தன. தன்னால் கொல்லப்படும் பறவைகளும், தன்னருகில் பயமின்றி வந்ததால் தனது தவம் பலித்து விட்டதாகப் பூனை எண்ணியது. இன்னும் சில நாட்கள் செல்ல, பறவைகள் பயம் இல்லாமல் பூனையிடம் செல்வதைப் பார்த்து எலிகளும் அதனிடம் நெருங்கி வந்து விளையாடின.

"தருமஞ் செய்வதே தவசியான என் குணம். அரிய பெரிய சாதனை படைப்பதே என் நோக்கம்" என்றது பூனை. அதைக் கேட்டு பிற உயிர்கள் நம்பின.

அத்தனை எலிகளும், "நாமெல்லாரும் நிறையத் தோழர்களுள்ளவர். இந்தப் பூனையாரே நமக்குத் 'தாய்மாமா' போலாவார். இவரே நம் மினத்து முதியவரையும் இளையவரையும் காக்கட்டும்" என்று முடிவு செய்தன. பிறகு பூனையிடமும் சென்று தெரிவித்து வேண்டின.

"பூனைப் பெரியாரே. தாங்களே எங்களனைவரையும் பாதுகாத்தருள வேண்டும். நாங்கள் சுதந்திரமாகத் திரிய நினைக்கிறோம். எங்களுக்கெல்லாம் நல்ல தோழராகவும், தலைவராகவும் இருந்து தாங்களே காப்பாற்றி அருள வேண்டும்" என்றன.

உடனே பூனை, "நான் தவமும் செய்ய வேண்டும். உங்களையும் காப்பாற்ற வேண்டும். இரண்டும் ஒருசேரச் செய்வது சிரமமாகும். நீங்களோ கெஞ்சுகிறீர்கள். அடைக்கலம் கேட்பவரை ஆதரித்தே ஆக வேண்டும் என்பதே தருமமாகும். நான் கடுமையாகத் தவம் புரிந்து இளைத்து விட்டேன். என்னைத் தினமும் நதிக்கரைக்குக் கொண்டு விட்டு நீங்களே அழைத்துப் போக வேண்டும். அப்படிச் செய்வதானால் எலிக் குழந்தைகளே உங்களுக்கு நான் பாதுகாவலாக இருக்கிறேன்" என்றது. எலிகள் ஒப்புக் கொண்டன.

அவ்வளவு எலிகளும் பூனையின் கட்டுப்பாட்டில் வந்தது முதல் பூனை கொழுத்துப் பருக்கத் தொடங்கியது. எலிகளோ எண்ணிக்கையில் குறைந்து கொண்டிருந்தன. எலிகளை நன்கு பட்சணம் செய்த பூனை நல்ல நிறமும் அடைந்தது. வீரமும் பெற்றது.

எலிகள் ஒன்று கூடிப் பேசின. "நம் பூனை மாமா நன்கு நாளும் கொழுத்து வருகிறார்" நாமோ நாளும் எண்ணிக்கையில் குறைந்து வருகிறோம்"என்றன.

டிண்டிகன் எனும் புத்திசாலி எலி, "நீங்கள் கூட்டமாக செல்லும் போது பூனை மாமாவுடன் நான் பின்னால் கவனித்துக் கொண்டே வருகிறேன்" என்றது. "அதுவும் நல்லதே!" என்று தீர்மானம் ஆயிற்று. பின்னால் பூனையோடு வந்த டிண்டிகனை பூனை தின்று ஏப்பம் விட்டு விட்டது. டிண்டிகனையும் காணாது கோலிகன் என்ற எலி, பூனையைக் கவனித்து யோசித்துவிட்டுச் சொன்னது.

"பூனை மாமாவின் தவம் போலியாகும். கபட வேதாரியே அவன். உண்மைத் தவசியில்லை. காய், கிழங்கு, கனியே தின்று வாழ வேண்டிய தவசி பூனையின் மலத்தில் மயிர் எப்படி இருக்கும்? இவன் பருக்க, நாமோ குறைகிறோம்".


பிறகு கோலிகளின் யோசனைப் படி, எலிகள் பூனையிடம் போகாமல் ஓடிவிட்டன. அதனால் இரை கிடைக்காத பூனை முயற்சியற்றதாகையால் மீண்டும் வேறு வழியின்று கங்கைக் கரையில் இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக் கொண்டு நிற்கத் தொடங்கியது.

ஆனால் அதைத் தவம் செய்வதாக இம்முறை எவ்வுயிரும் நம்பத் தயாராக இல்லை.

அன்பு இல்லாமல் எவர் எது செய்யினும் அது போலியாகவே இருக்கும். விரைவில் வெளிப்பட்டும் விடும்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.11.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **470**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 467

**பரிசுக்குரியவர்:**

**எஸ். ஏ. றஸானாஸ்,**
முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், கல்பிட்டி வீதி, குறிஞ்சிப்பிட்டி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **எம். பிரகாஷ் ஜஷலிகிறிஸ்டினா,** ஒடிங்டன் எஸ்டேட், லிந்துல. | **க. ஷியாம் கணேஷ்,** ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. |
| **ஸபீஷா ஹூசைன்,** ஜோன் கொத்தலாவல மகா வித்., குருநாகல் | **உ. விஜ்யூ,** கேம்பிரிஜ் சர்வதேச பாடசாலை, கொழும்பு-15. |
| **செல்வன் செ. மயூரன்,** மிலேகிரிய அவனியூ, கொழும்பு-14. | **ம. பிரஷாந்தினி,** உவாமலை, திருகோணமலை. |
| **நுஜீஹா றாஹில்,** ஸ்பீல் வீதி, புத்தளம். | **த. லாவண்யா,** யா/சன்மார்க்க மகா வித்., யாழ்ப்பாணம். |
| **ஜயதீப் விஜயகுமாரன்,** கொ/புளுமென்டால் த.வி.கொழும்பு-14. | **எஸ். வருன் குமார்,** தலப்பத்தன கெட்டபுலா தமிழ் வித்தியாலயம். |

## விடுகதைகளும் விடைகளும்

1. வெடி வெடித்து மத்தாப்பு கொளுத்தி வருகிறான் வெள்ளையப்பன் அவன் யார்?
2. அடுக்கடுக்காய் இருப்பான் அரைக்காத மாவையும் அரைப்பான் அவன் யார்?
3. பொங்கி வைத்த சோறு மொத்தமும் திங்கத்தான் ஆளில்லை அது என்ன?
4. ஆடி வரும் பாடி வரும் தாவி வரும் தரைக்கு வரும் அது என்ன?
5. குச்சு குச்சு ராக்கம்மா குழம்புக்கு ருசியம்மா அவள் யார்?
6. நேற்று பந்து இன்று பஞ்சு அது என்ன?
7. ஓங்கி வளர்ந்தவனை தேடிச் சென்றால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
8. கையை வெட்டுவார் காலை வெட்டுவார் ஆனாலும் இவரை யாரும் கண்டு கொள்ளமாட்டார்கள் அவர் யார்?
9. ஊருக்கு ஊர் அடிபட்டாலும் உரியவரிடம் போய்ச் சேருகிறான் சின்ன ராசு அவன் யார்?
10. ஒற்றைக் கண்ணன் ஓடி ஓடி வேலியடைப்பான் அவன் யார்?

**விடைகள்.**

1. இடி-மின்னல்-மழை
2. பற்கள் 3. சுண்ணாம்பு
4. கடல் அலை 5. முருங்கைக்காய்
6. பருத்திக்காய்
7. தென்னை மரம் 8. டெய்லர்
9. தபால் 10. ஊசி.



அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் நைனாஜர் கிரேட்டர் என்னுமிடத்தில் 1 கிலோ மீட்டர் நீளத்திற்கும் 150 மீற்றர் உயரத்திற்குமான அளவில் ஒரு மிகப் பெரிய எரி பாறைக்கல் பூமியில் புதைந்து கிடக்கிறது. பல லட்சம் வருடங்களுக்கு முன் பூமியில் மோதி விழுந்ததாகக் கருதப்படும் இந்தக் கல் 10 லட்சம் டன் எடை கொண்டதாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.




**1972**- ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10-ஆம் திகதி பூமிக்கு ஒரு பெரிய ஆபத்து தோன்றியது. 4000 டன் எடை கொண்ட ஒரு எரிகல் வினாடிக்கு 10 கிலோ மீட்டர் என்ற வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஆனால், பூமியில் மோத வேண்டிய இந்த எரிகல் பூமியின் மேற்பரப்புக்கு 50 கி.மீற்றர் தூரம் முன்னதாக திசை மாறிப் போய்விட்டது. இதனால் பூமி தப்பியது. எனினும் பூமியில் தினமும் நூற்றுக்கணக்கான சிறு எரிகற்கள் வந்து விழுந்த வண்ணம்தான் இருக்கின்றன. இப்படி விழும் கற்களால் பூமியின் எடை தினமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. எவ்வளவு எடை தெரியுமா? தினமும் 1000 டன்கள் என்ற அளவில்.



அமெரிக்காவில் வோமியோங், கொலாராடோ, உடாஹ், கிடாஹோ ஆகிய நகரங்களில் பெண்களுக்கு வாக்குரிமை 10-ஆம் நூற்றாண்டில் இறுதிக்குள்ளாகவே வழங்கப்பட்டு விட்டது. எனினும் பெண்களுக்கு வாக்குரிமை அமெரிக்கா முழுவதும் வழங்கப்பட்டது 1920- ஆம் ஆண்டுதான்.


## இந்த வாரப் புதிர்



படத்தில் எத்தனை முக்கோணங்கள் காணப்படும்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:




? இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் **194.** (முக்கோணத்தின் பக்கங்கள் வழியே உள்ள இலக்கங்களின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை மத்தியில் இடப்பட்டுள்ளது.

# விதி



மது சுவரைப் பார்த்தாள். இப்போது அந்தப் பல்லி ஓடித் திரிந்து ஓய்ந்து போயிருந்தது. மெது மெதுவாய் சுவர்க் கடிகாரத்தின் பின் தன் தலையைச் செலுத்தி பின்பு எஞ்சியிருந்த தன் உடலை மறைத்துக் கொண்டது.

மதுவின் கண்களுக்கு இப்போது கடிகாரம் தெரிந்தது.

இரவு 11.15.

இன்னும் 45 நிமிடங்களே இருந்தன.

அறையில் அவளுக்கருகில் யாருமில்லை. அப்பா வெளியூர் சென்றிருந்தார். அம்மா மாத்திரம் வீட்டிலிருந்தாள். முன்னறையில் அவளின் குறட்டை ஒலி இலேசாய்க் காதில் கேட்டது.

மது ஒரு முறை அந்தக் கறுப்பு ட்ரவலிங் பேக்கைப் பார்த்துக் கொண்டாள். தேவையான ஆடைகளை அது நிரப்பியிருந்தது. கூடவே ஒரு சோடி செருப்பு, நாட்குறிப்பு, குடும்ப அல்பம் இன்னும் ஏதேதோ... மறுபடியும் கட்டிலில் சாய்ந்து கண்களை மூடினாள். நேற்று நடந்தது அவள் கண்களுள் ஒரு முறை நாடகமாடியது.

"அம்மா... எனக்கு ஸ்ரீயைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணி வைக்க நெனச்சே... அப்புறம் நான் உயிரோடு இருக்கமாட்டேன்..."

"மது... ரொம்பப் பேசாத... தோளுக்கு மேல வளர்ந்திட்டேன்னு தைரியமோ...? நான் உயிரோடு இருக்கும் வரை அவனை நீ எப்படி கல்யாணம் பண்ணிக்கப் போறாய் என்று பாக்கிறேன்... அப்பா கிட்ட சொன்னேன்னு வை... உன்னைக் கொன்னே போட்டிருவார்... நம்ம ஜாதி பையனாப் பாத்து கூட்டி வா. உன்னை நானே சேத்து வைக்கிறேன். அதுக்காக எவனையோ என்னை மருமகன்னு சொல்ல வைக்க முயற்சி பண்ணாதே..."

"அம்மா நீ என்ன வேணுன்னாலும் சொல். எனக்கு உன் அட்வைஸ் தேவையில்ல... அப்பாவோட கன்டிஷனும் தேவையில்லை. எனக்கு எல்லாமே ஸ்ரீதான் முடிவா சொல்றேன் எங்க ரெண்டு பேரையும் யாராலயும் பிரிக்க முடியாது... ஆமா.."

அவள் பொறுமை இழந்தாள், அதே நாள் மது ஸ்ரீயைச் சந்தித்தாள். "மது... நீ சொல்றதப் பார்த்தா உங்க வீட்டில சம்மதம் கிடைக்காது. நாம நெனச்சபடி எங்கயாலும் போய்விடலாம்...

மது என்னயே நம்பி நீ இருக்கே... என்னால உன்ன காப்பாத்த நிச்சயமா முடியும்... இதுக்கு மேலயும் இந்த ரெண்டு வீட்டு சம்மதமும் கிடைக்குறது கஷ்டம். நீ என்ன சொல்றே மது...?"

ஸ்ரீ மதுவைப் பார்த்தான். அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்திருந்தது.

"ஸ்ரீ... எனக்கு நீ இல்லாமல் வாழ்றதில அர்த்தமே இல்ல.. எட்டு வருசமா காதலிச்சிருக்கோம்... நான் உங்களத் தவிர வேறு யாரயும் கனவில கூட நினச்சதில்ல... நாளைக்கு ராத்திரி நான் உங்களுக்காக காத்திருக்கிறன். சரியாக 12.00 மணிக்கு நான் உங்கள எதிர்பார்ப்பேன் மறந்திடாதீங்க... சரியாக 12.00 மணி..."

மதுவின் சிந்தனை கலைந்தது. மணியைப் பார்த்தாள். அது 12.10 ஐக் காட்டியது. இந் நேரம் ஸ்ரீ வந்து கொண்டிருப்பார். அவள் மனம் சொல்லியது. அதே நேரம் உள் மனதில் ஒரு சின்ன நெருடல் சிறு கீற்றாய் வந்து போனது.

"சிக்... சிக்...சிக்..." இப்போது அந்தப் பல்லி விக்கிச் சொல்லியது. அதற்கு நேர் எதிரே இருபது செ.மீ இடைவெளியில் ஒரு கரிய வண்டு அதன் பார்வைக்குப் பட்டது. மெது மெதுவாக அதன்பால் ஊர்ந்து கொண்டிருந்தது பல்லி. மதுவுக்கு இப்போது அந்த வண்டின் மேல் பரிதாப உணர்வு ஏற்பட்டது. இது தப்பிக்குமா... இல்லை இரையாகுமா?

கட்டிலிலிருந்து இறங்கி குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். "ஸ்ரீ வருவாரா..? இல்லை... சே... சே அப்படி வராமலிருக்க மாட்டார் எப்படியும் வருவார்." மீண்டும் கட்டிலில் அமர்ந்து சாய்ந்தாள். நேரம் சென்று கொண்டேயிருந்தது. அவள் இமைகள் கண்களை மெதுவாக மூடிக் கொண்டது.

காலை ஆறு மணி கடிகாரம் பாடியது.

மது திடுக்கிட்டாள். அவளுக்கு உடம்பு முழுக்கப் பரபரப்பு.

"என்னது...? நான்... அப்போ..... நேற்று ஸ்ரீ வரவில்லையா... கடவுளே அவருக்கு என்ன நடந்தது. ஏன் வரவில்லை... சே; நான் வேறு தூங்கிவிட்டேனே..." அவள் கேள்விக் குறிகள் நீண்டன.

எழும்பி வெளியே வந்தாள். தூரத்தில் மதன் வருவது தெரிந்தது. ஸ்ரீயின் உயிர்த் தோழன் அவன். ஏதோ நிகழக் கூடாதது நிகழ்ந்து விட்ட துயரம் அவன் முகத்தில் தெரிந்தது.

"மது உங்ககிட்ட ஒரு விசயம்... எப்படிச் சொல்றதுன்னே..." மதனுக்குத் தொண்டை அடைத்தது.

"என்ன மதன் பிளீஸ் சொல்லுங்க... எனக்கு என்னமோ பயமா இருக்கு... ஸ்ரீ எங்கே...?"

"மது.. ஸ்ரீ நம்மளயெல்லாம் விட்டுப் போய்ட்டான் மது..." மதன் உள்ளங்கையால் முகத்தைப் புதைத்தான்.

"ஸ்ரீக்கு நேற்று ராத்திரி பன்னிரண்டு மணி போல வயித்துல வலி வந்திருக்கு... உடனே ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆக்கியிருக்காங்க... அப்பாண்டிக்ஸ் முத்திப் போயிருக்கு... கடைசியில காப்பாத்த முடியாம போயிட்டு. உங்க கூட வர எல்லாத்தையும் ரெடி பண்ணியிருந்தான்... கடைசியில இப்படி...."

மது அப்படியே ஆடிப்போனாள். அவளுக்குத் தலை சுற்றியது. தள்ளாடிக் கொண்டே தன்னறைக்குள் வந்தவள் கட்டிலில் விழுந்தாள். அவள் அழுகையில் ஒலியில்லை. ஆனால் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. அவளுக்கு எதுவுமே சிந்தனைக்கு வரவில்லை. முகம் சிவந்து போயிருந்தது.

தனக்குள் ஏதோ நடப்பதை மட்டும் தெளிவாக உணர்ந்தாள். 'சட்' மதுவின் மடியில் வந்து விழுந்தது, நேற்றிரவு சுவரிலிருந்த அதே கரிய வண்டு. நேற்றிரவு பல்லியின் பார்வையிலிருந்து, அல்லது பிடியிலிருந்து அது தப்பியிருந்தது. ஆனால் அதன் உடலில் நேற்றிருந்த இறகுகளைக் காணவில்லை. இனிமேலும் பறந்து திரிய முடியாதவாறு அது கிழிந்திருந்தது. மதுவின் பார்வை தற்போது அந்த வண்டிலி ருந்தது.

இறகிழந்த வண்டு தன் இறகை இழந்ததற்கு அழுகிறதா? இல்லை, பல்லியின் பிடியிலிருந்து தப்பிய தற்காகச் சிரிக்கிறதா?

ஏதோ... அந்த வண்டுக்கும், மதுவுக்கும் இடைவெளிகள் அதிகமாயில்லை. இதுதான் விதி என்பதா...?

அவள் சுயமாய் முடிவெடுக்கும் நிலையினைக் கடந்து கொண்டிருந்தாள். ■

அஸ்வத்தும அக்ஷியா அக்ரம்.

# பனிமூட்டங்கள்

உள்ளே நுழைந்த மதியை ஏற இறங்கப் பார்த்தான் ரவி. மற்றவர்களைப் போல் இல்லாது மிகவும் எளிமையாக இருந்தாள். "வணக்கம் சார்" "வணக்கம் மேடம். உங்கள இந்த வேலையில அப்பாயிண்ட் பண்ணியதற்கு இரண்டு காரணம் இருக்கு. நம்பவன், உங்களோட ஏஜ். நம்பர் டூ, உங்களோட எக்ஸ்பீரியன்ஸ். எனிவே கங்ராஜிலேஷன் மேடம். மற்ற விடயங்களை என்னோட பீ.ஏ. தனா சொல்லுவாங்க" என்று அங்கிருந்து அகன்றான் ரவி.

மதி அந்த அலுவலகத்தில் வேலையில் சேர்ந்து ஒரு வாரம் ஆயிற்று. எல்லோருக்குமே அவளை வெகுவாய்ப் பிடித்துப் போனது. கணவனை இழந்த கைம்பெண்ணான மதிக்கு வயது நாற்பது அவளுக்குள் ஏகப்பட்ட சோகங்கள் குடிகொண்டுள்ளது உண்மை.

அன்று முன்னிரவு நேரம். தனது அறையில் அமர்ந்து ஆபிஸ் பைல்களை பார்த்துக் கொண்டிருந்தார் மதி. அப்போது "மேடம்" என்று குரல் கேட்டுத் திரும்பினார். அங்கே நின்று கொண்டிருந்தது கம்பனி மேனேஜர் ரவி. இருபத்தைந்து வயசுக்குள்தான் இருக்கும். சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல அழகாக இருந்தான்.

"ஹலோ சேர் நீங்களா? உள்ள வாங்க உட்காருங்க" "தேங்யூ மேடம். நீங்க வயசுல பெரியவங்க என்னை சார்னு கூப்பிடணுமா..? பெயரைச் சொல்லியே கூப்பிடலாமே." என்றான் "நோ. வயசில சின்னவரானாலும் பெரிய பதவியில இருக்கிறிங்க இல்லையா...? சரி அத விடுவம். இன்னைக்கு உங்க வீட்டுல என்ன சமையல். நான் இங்க சாப்பிடலாமா...? இது என்ன கேள்வி நிச்சயமாச் சாப்பிடலாம்" என்றாள் மதி.ரவியும் இருந்து சாப்பிட்டுவிட்டுதான் சென்றான். ஆனால், அவன் வந்து போன வாசம் அந்த அறைக்குள் நெடுநேரமாகச் சுழன்று கொண்டிருந்தது. அதன் பின் மதியின் கவனம் ஆபிஸ் பைல்களில் பதிய மறுத்தது.

அதன் பின் ரவி மதியைத் தேடி அடிக்கடி வந்து போவது வழமை. அவளின் பேச்சில் ஒரு இங்கிதம். நடவடிக்கையில் ஒரு மரியாதை. வேலையில் ஓர் ஒழுங்கு. இவை எல்லாமே சேர்ந்து மதி அம்மையாருக்கு ரவி மீது ஒரு ஈர்ப்பை உண்டு பண்ணியது.

ஒரு வாரம் பத்து நாட்களுக்குள் மதி ரொம்பவே மாறிப் போய்விட்டாள். இத்தனைக்கும் ரவியிடம் அவ்வளவாகப் பேசியதும் கிடையாது. அப்படியே பேசிய போதும் கூட தன் முகத்தில் இறுக்கத் திரையை மாட்டிக் கொள்ள மறந்தது கிடையாது.

இருந்தும் மதியின் மனம் சலனப்படத் தொடங்கிவிட்டது. எந்த வேலை செய்தாலும், யாரோடு பேசினாலும், எங்கே சென்றாலும் ரவி அவளின் மனதில் இனிய ராகமாய் ஒலித்துக் கொண்டிருந்தான். அவளால் அதைத் தடுக்க முடியவில்லை. மனதிற்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும், மனிதனின் தோளில் அமர்ந்து கொண்டு செவியைக் கடிக்கத் தொடங்கிவிடும் என்பார்கள். மதியின் நிலையும் அதுவே.



கணவனுக்குத் துரோகம் செய்து விடக் கூடாது என்பதில் அவள் அதுவரை காட்டிவந்த உறுதி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகின்றதோ என்ற பயம் அவளைப் பாடாய்ப் படுத்தியது. அன்று இரவு நெடுநேர மன உளைச்சலுக்குப் பிறகு மதி ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

காலையில் ஆபிஸ் போனதும் இனிமேல் ரவியை வீட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டியதுதான். மறுநாள் பயணப்பட்டுக் கொண்டு வெளியே வந்தாள் மதி. அப்போது வாசலில் ரவியின் கார் வந்து நின்றது. தயக்கத்துடன் ரவியைப் பார்த்தாள் மதி. "வாங்க மேடம் நானும் ஆபீஸ்தான் போறேன்" என்றான் ரவி. எவ்வித மறுப்பும் காட்டாமல் காரில் அமர்ந்து கொண்டாள் மதி. அப்போது "மேடம் உங்ககிட்ட ரொம்ப நாளா ஒரு விடயம் சொல்லணும் சொல்லணும் என்று நினைக்கிறேன். சொல்ல முடியவில்லை. இந்த ஆபீஸுக்கு எத்தனையோ பேர் வந்திருக்காங்க. ஆனா உங்களைப் போல நேர்மையான அதிகாரியை நான் பார்த்ததே இல்லை. உங்களப் போன்ற உயர்ந்த உள்ளங்களோடு உறவு வைத்திருப்பதை நினைக்கயில் எவ்வளவு சந்தோசமாகவுள்ளது தெரியுமா...?"

"கொஞ்ச நாளா எனக்கொரு ஆசை. அத இனியும் என்னால் சொல்லாமல் இருக்க முடியாது" என்றான் ரவி. என்ன சொல்லப் போறானோ என்ற தவிப்பில் மதியின் இதயத் துடிப்பு வேகமாகியது. அவனை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் காதுகளை மட்டும் கூர்மையாக்கிக் கொண்டாள்.

"எனக்கு பயமா இருக்கு" "பரவாயில்லை சும்மா சொல்லுங்க." "வேறு ஒன்றுமில்லை இப்பேர்பட்ட உங்களுக்கு நான் மகனாப் பிறந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும். இதை நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன். உங்களிடம் சொல்லணும் என்று நினைத்தேன் சொல்லி விட்டேன். இனிமேல் உங்கள நான் அம்மான்னு கூப்பிடலாமா...? தவறாக இருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளவும்" என்று சொல்லி முடித்தான். ஆபிஸும் வந்துவிட்டது.

மதி திகைத்துப் போனாள். அத்தோடு அவளின் மனப் போராட்டமும் ஓய்ந்து விட்டிருந் தது. அன்று ஒரு புது மனிதராய்ப் பிறந்து வந்ததாய் உணர்கிறாள் மதி. அது தாயென்ற புனிதப் பிறப்பு என்பதில் அவளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

எஸ்.மனோஹரன்–ஸ்ரீபாத கல்விக் கலாசாலை.

## அங்கம் 07




எழுதுவது **ராஜேஷ்குமார்**

"ஹேவ் சாக்லெட்ஸ் ஸார்."

விவேக் கேட்டான்.

"ஃபிளைட் எத்தனை மணிக்கு மும்பை போய்ச் சேரும்?"

"நைன் தர்ட்டி."

"தாங்க்யூ."

"வெல்கம் அகெய்ன்" - சொல்லிக் கொண்டே ரெடிமேட் புன்னகையோடு பின் பக்க இருக்கைகளுக்குப் போனாள் விமானப் பணிப் பெண்.

"இந்த ஏர்ஹோஸ்டஸ் வேலைக்குன்னே பிரம்மா ஸ்பெஷலா கொஞ்சம் பெண்களை மானுபாக்சர் பண்ணுவாரோ என்னமோ? ஒவ்வொரு பொண்ணும் அம்சம்ன்னா அம்சம். அப்படியொரு அம்சம்" சொன்ன விவேக்கை முறைத்தாள் ரூபலா.

"உங்க சிருங்கார வேலைகளை காட்ட ஆரம்பிச்சிட்டீங்களா?"

"சரி... சரி... நான் பேசலை" உதட்டின் மேல் விரலை வைத்துக் கொண்டான் விவேக் விமானம் புறப்பட்டுப் போக, கடைசி நிமிஷ கட்டளைக்காக காத்திருக்க ஆரம்பித்தது. பயணிகள் எல்லா இருக்கைகளிலும் நிரம்பியிருக்க, கதவு சாத்தப்பட்டு உள்ளே, திரையில் சிவப்பு எழுத்துக்களில் தயவு செய்து புகை பிடிக்காதீர்கள். பெல்ட்டுகளை அணிந்து கொள்ளுங்கள். என்று சொன்ன வாசகங்கள் ஒளிர்ந்தன.

விவேக்கும் ரூபலாவும் பெல்ட்டுகளை அணிந்து கொண்டார்கள். விமானத்தின் எஞ்சின்கள் ரொய்ங்ங் கென்று உறும- ப்ரொப்பல்லர் ராட்சஸ வேகத்தில் சுழன்றது. இரண்டு மூன்று நிமிஷங்



களில் மெல்ல ஊர்ந்தது விமானம்.

ரன்வேயில் நிதான வேகத்தில் ஓடி- பின்பு கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் பிடித்து உச்ச பட்சமாய் அலறிக் கொண்டு, வானத்தில் தாவியது.

ஒரு சாய்வான கோணத்தில் காற்றை உரசியது. உயர்ந்து, தேவையான உயரத்தை எட்டிப் பிடித்ததும், 'அறிவிப்புத் திரை'யில் பெல்ட்டுகளை தளர்த்திக் கொள்ளலாம். புகைப் பிடிப்பவர்கள் பிடிக்கலாம்' வாசகங்கள் பச்சை நிறத்தில் ஒளிர்ந்தன. எல்லாரும் தளர்ந்தார்கள்.

விவேக் தன்னுடைய பெல்ட்டை தளர்த்திக் கொள்ள முயன்ற விநாடி, அவனுக்கு பின்பக்கமிருந்து 'வீல்' என்று ஒரு பெண்ணின் அலறல் எழுந்தது. சிலேட்டில் ஆணியை வைத்து இழுத்த மாதிரியான அந்த அலறலில்- விவேக் உட்பட, எல்லோரும் திரும்பினார்கள்.

ஒட்டு மொத்தமாய் திடுக்கிட்டார்கள்.

தடித்தடியான மூன்று இளைஞர்களுக்கு மத்தியில், அந்த விமானப் பணிப்பெண் எசகுபிசகாய் சிக்கியிருந்தாள். அவளுடைய மதர்ந்த மார்புகளுக்கு நடுவில் பிஸ்டலின் வாய் ஒன்று கட்டாயமாய் திணிக்கப்பட்டிருந்தது. ஒருவன் அவளுடைய இரண்டு கைகளையும் எக்ஸ் குறி மாதிரி பின்னுக்கு மடக்கியிருந்தான்.

இன்னொருவன் கையில் பிஸ்டலோடு

கொஞ்சம் முன்னால் நகர்ந்து வந்து, உரத்த குரலில் சொன்னான்.

"மேன்மை தாங்கிய பயணிகளுக்கோர் நற்செய்தி. இந்த விமானம் இந்த நிமிஷத்திலிருந்து எங்களால் கடத்தப் படுகிறது! அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்."

அந்த மூன்று பேரும் திடகாத்திரமாய் தெரிந்தார்கள். வெள்ளை நிற பைஜாமா மாதிரியான ட்ரஸ்ஸுக்குள் நுழைந்திருந்தார்கள். கைகளில் கனமான பிஸ்டல்கள். முகங்களில் உருக்கி ஊற்றிய எஃகு மாதிரியான இறுக்கம்.

பேச ஆரம்பித்தவன் தொடர்ந்து பேசினான்; "நாங்கள் மொத்தம் மூன்று பேர் உள்ளே இருக்கிறோம். என் பெயர் கவிக்குமார். நீங்கள் கவி என்ற கூப்பிடலாம். இவன் பெயர் ஜெயராஜ். ட்ரூ கிறிஸ்டியன். இதுவரைக்கும் பதினேழு கொலை பண்ணி, எங்க லிஸ்டில் முதலாவது இடத்தில் இருப்பவன். உங்களில் ஒரு ஆறு பேர் இவனுடைய தோட்டாக்களுக்கு பலியாகலாம். ஏர்ஹோஸ்டஸோட நெஞ்சில் பிஸ்டலை வெச்சிருக்கிற இன்னொரு நபர் பேர் சைலேந்தர். இவனும் பொல்லாதவன். உங்கள்ல யாரையாவது சுட்டுடுவான். இவனோட பிஸ்டல்ல இருக்கிற ஆறு தோட்டாக்களுக்கும் உங்கள்ல யாராவது ஆறு பேர் நெஞ்சை காட்ட வேண்டியிருக்கும்."

விமானத்தில் இருந்த இருநூற்று முப்பது பயணிகளும் ஸ்தம்பித்துப் போய் அவர்களைப் பார்க்க கவி, ஜெயராஜை ஏறிட்டான்.

"ஜெயராஜ்..."

"சொல்லு..."

"நீ காக்பிட்டுக்கு போய் பைலட்டைக் கவனி. ஃப்ளைட்டை பெங்களூருக்கு திருப்பச் சொல்லு. அவன் மாட்டேன்னு சொன்னா பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற கோ-பைலட்டை தயவு தாட்சண்யம் பார்க்காமே சுட்டுத் தள்ளு."

ஜெயராஜ் பிஸ்டலோடு, காக்பிட்டை நோக்கி நகர்ந்து போக, கவி ஒரு சின்ன எக்களிப்பு சிரிப்போடு பயணிகளைப் பார்த்தான்.

"எந்த விழாவுக்கும் ஒரு தலைவர் உண்டு. ஸோ...

இந்த கடத்தல் விழாவுக்கு தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க, ஒரு பொருத்தமான நபரை நாம் இப்போது தேர்ந்தெடுக்கப் போகிறோம். உங்களில் ஒருவர்தான் அந்த தலைவர். இந்த ஃப்ளைட்டில் மொத்தம் இருநூற்று சொச்சப் பேரில் யாருக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கப் போகிறதோ பார்க்கலாம்..."

சொன்னவன்-

இருக்கைகளுக்கு மத்தியில் மெல்ல நடந்தான். பீதி தட்டிப் போயிருந்த ஒவ்வொருவரின் முகத்தையும் பார்த்துக் கொண்டே போய், காலர் இல்லாத கோட் அணிந்திருந்த அந்த பெரியவரிடம் போய் நின்றான். கையில் வைத்திருந்த பிஸ்டலால் -அவருடைய மோவாயை நிமிர்த்தினான்.

"உம்பேரென்ன?"

"ந.. ந... நவகோடி..."

"இங்கே இருக்கிற இருநூத்தி சொச்ச பாஸஞ்சர்ஸ்ல நீதான் கொஞ்சம் வயதான ஆள் மாதிரி தெரியறே... வா... வந்து... இந்த விமானக் கடத்தல் விழாவுக்கு தலைமை தாங்கி நடத்திக் குடு..."

அந்தப் பெரியவர் தயங்கிக் கொண்டே உட்கார்ந்திருக்க, கவி குனிந்து உறுமினான். "சொன்னது. காதுல விழலை...? எந்திரிச்சு வாய்யா..."

அவர் வியர்ந்து விறுவிறுத்துக் கொண்டே எழுந்தார். கவி அவருடைய தோள் பட்டையை இடது கையால் பற்றிக் கொண்டு-விமான மையத்துக்கு இழுத்து வந்தான். தனக்கு பக்கத்தில் நிறுத்தி-பயணிகளைப் பார்த்து புன்னகைத்தான்.

"பாசம் மிக்க பயணிகளே! நாங்கள் நடத்தப் போகிற கடத்தல் விழாவுக்கு மிஸ்டர் நவகோடிதான் தலைமை தாங்கப் போகிறார். அவர் எப்படி தலைமை தாங்கி இந்த விழாவை நடத்திக் கொடுக்கப் போகிறார் என்பது உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். ஒரு புதியகட்டிடம் என்றால்-ரிப்பனை வெட்டி திறப்பார்கள். ஆனால் இந்த விமானக் கடத்தலை இவர் எப்படி ஆரம்பித்து வைக்கப் போகிறார்? அதைத்தான் நீங்கள் இப்போது பார்க்கப் போகிறீர்கள்" சொல்லிக் கொண்டே கவி ரிவால்வரை உயர்த்தி, நவகோடியின் நெஞ்சுக்கு குறி வைத்தான்.

"நோ" பெரியவர் வீறிட்டு கத்த- கவி அதை பொருட்படுத்தாமல் பயணிகளைப் பார்த்துச் சொன்னான். "நமது தலைவர் அவர்கள் இப்போது தன் புனித ரத்தத்தை சிந்தி இந்த கடத்தல் விழாவை ஆரம்பித்து வைப்பார்."

ட்ரிக்கரைச் சுண்டினான்.

சைலன்சர் பொருத்தப்பட்ட பிஸ்டல் நிசப்பதமாய் ஒரு தோட்டாவை வாந்தி எடுக்க அதை சரியாய் மார்புக்கு வாங்கிக் கொண்ட நவகோடி சட்டென்று ரத்தம் காட்டி, பக்கவாட்டில் சரிந்தார்.

கவி பிஸ்டலை உயர்த்தி சத்தம் போட்டான். "எல்லாரும் கையைத் தட்டுங்க... தலைவர் கடத்தல் விழாவை ஆரம்பிச்சு வெச்சுட்டார்."

விமானத்தில் நிசப்தம்.

"நான் சொன்னது காதுல விழலை...? எல்லாரும் கையைத் தட்டுங்க. கையைத் தட்டாமே யாராவது உட்கார்ந்திட்டிருந்தா... அவங்க நெஞ்சுல என்னோட ரெண்டாவது தோட்டா பாயும்... ம்... தட்டுங்க..."

பெண்கள் பயந்து போய் கைகளைத் தட்ட ஆண்களும் இருண்டு போன முகங்களோடு, கைகளைத் தட்டினார்கள்.

"ம்... போதாது... இன்னம் பலமா..."

கைதட்டல் ஓசை இப்போது அதிகரித்தது.

கவி பிஸ்டலை ஏந்திக் கொண்டு, கை தட்டாமல் யாராவது உட்கார்ந்திருக்கிறார்களா என்று உன்னிப்பாய் பார்த்துக் கொண்டே, இருக்கைகளுக்கு மத்தியில் மெல்ல நடந்து வந்தான்.

மீனம்பாக்கம் ஏர்போர்ட்டின் கண்ட்ரோல் டவர் பரபரத்தது. கண்ட்ரோல் ஆபீஸர் ஷிவா மைக்ரோ ரிஸீவரில் ஃபிளைட் நம்பர் 509-ன் பைலட் அசோக் திவாரியின் அபயக்குரலை முதன் முதலாய் வாங்கினார்.

"விமானம் கடத்தப்படுகிறது."

"யா... யாரால்?" கண்ட்ரோல் ஆபீஸர் ஷிவா பதட்டமானார்.

"தெரியவில்லை."

"மொத்தம் எத்தனை பேர்?"

"அதுவும் தெரியவில்லை."

"ஃபிளைட் எந்த ஊருக்குக் கடத்தப் படுகிறது?"

"பெங்களூர்" பைலட் அசோக் திவாரி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவரிடமிருந்து மைக்ரோ போனைப் பறித்து, யாரோ குறுககிட்டுப் பேசினார்கள்.

"கண்ட்ரோல் டவர்?"

"எஸ்..."

"விமானத்தைக் கடத்துகிற மூன்று பேரில் ஒருவன் நான்."

"யார்... நீங்கள்?"

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## போதைக்கு அடிமையாதல்-01

தேவகோட்டை அகதிகள் முகாமிலுள்ள தலைவர் நடேசன் தொலைபேசியில் முன் அனுமதி கேட்டதற்கிணங்க அன்று காலை 9:00 மணிக்கே போதைக்கு அடிமையான அசோக் என்பவரை அழைத்து வந்திருந்தார். இருவரையும் ஆற்றுப்படுத்தல் மையத்திலுள்ள இருக்கையில் அமரும்படி கேட்டுக் கொண்டேன். சிறிது நேரத்தில் தலைவர் நடேசன் வேறு வேலை இருப்பதாகக் கூறி விடைபெற்றார். அசோக்கை எனது மேசையின் முன்னிருந்த இருக்கையில் அமரும்படி கேட்டுக்கொண்டேன்.

"சொல்லுங்கள் அசோக்! உங்களது சொந்த இடம் எது? எப்போது இந்தியா வந்தீர்கள்? என்ன தொழில் செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"நான் மன்னார் மாவட்டத்தில் எழுத்தூர் என்னும் கிராமத்தை சேர்ந்தவன். 1990ம் ஆண்டு இந்தியாவுக்கு அகதியாக வந்து தேவகோட்டை முகாமில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். நானும் மனைவியும் கூலி வேலைக்கு போகிறோம்" என்று அசோக் சொன்னார்.

"அசோக்! பிள்ளைகள் படிக்கிறார்களா?"

"ஆம்! மூத்த பெடியன் 10ம் வகுப்பு படிக்கிறான். மற்றது பொம்பிளைப் பிள்ளை. அவள் 8ம் வகுப்பு படிக்கிறாள்" என்றார்.

அசோக்! "நீங்களும் மனைவியும் கூலி வேலை செய்வதாக கூறினீர்களே! என்ன வேலை?"

"அவள் சிற்றாள் வேலைக்குப் போகிறாள். நான் பெயின்டிங் வேலைக்குப் போகிறேன்" என்றார்.

"அசோக்! உங்களுக்கு நாள் சம்பளம் எவ்வளவு? உங்கள் மனைவிக்கு நாள் சம்பளம் எவ்வளவு?" என்று கேட்டேன்.

"எனக்கு 75 ரூபாவும் மனைவிக்கு 50 ரூபாவும் கிடைக்கிறது" என்றார் அசோக்.

அசோக் என்னிடம் நெருங்கி கதைக்கும் போது அவர் வாயிலிருந்து வந்த மணத்திலிருந்து அசோக் நேற்று இரவும் குடித்திருக்க வேண்டுமென்று கருதினேன். காலையில் அசோக் நன்றாக குளித்து விட்டுத்தான் வந்திருக்கிறார். இரவு அதிகமாக குடித்தது அவர் கண்கள் சிவந்திருந்ததிலிருந்து தெரிந்தது. ஒவ்வொரு குடிவகையிலும் ஒவ்வொரு விதமான வாசனை இருக்கும் ஆனால் இரவில் குடித்தவர்களுடைய வாய் காலைவரை படுமோசமான மணமாக இருக்கும். குடிப்பழக்கம் அற்றவர்களும், பெண்களும் வெறுப்பான இம்மணத்தை சகிக்க மாட்டார்கள்.

"சரி அசோக்! காலை உணவு சாப்பிட்டீர்களா?"

"இல்லை. தேனீர் மட்டும்தான் குடித்தேன்" என்றார்.

"இரவு சாப்பிட்டீர்களா?" என்று கேட்டேன். சற்று யோசித்தபின் தலையசைத்தார். முதலில் காலைச் சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்தேன்.

"அசோக்! எமது சாப்பாட்டறையில் சென்று சாப்பிட்டு வாருங்கள்" என்று அனுப்பி வைத்தேன்.

காலை உணவை முடித்து விட்டு என் முன் வந்து அமர்ந்தார் அசோக்.

"சாப்பாடு எப்படி அசோக்?" என்றேன்.

"நன்றாக இருந்தது என்றார்." அவர் வாயிலிருந்து சிகரட் மணம் வந்ததை உணர்ந்தேன்.

"அசோக்! உங்களை தலைவர் அழைத்து வந்தாரா? அல்லது நீங்கள் தான் விரும்பி வந்தீர்களா?"

"மூன்று நாட்களாக தலைவர் நடேசன் உங்களைப் பற்றியும், உங்கள் ஆற்றுப்படுத்தல் மையத்தின் சேவை பற்றியும் கூறினார். நான் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட உங்களால் உதவ முடியும் என்ற நம்பிக்கையில் நானாக விரும்பித்தான் இங்கு வந்தேன்."

"சரி அசோக்! உங்கள் நிலையை அறிந்து கவலைப்படுகிறேன். இருப்பினும் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட நீங்களே விரும்பி இங்கு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அசோக்! நீங்கள் எவ்வளவு காலமாக குடிப் பழக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ளீர்கள்."

"மன்னாரில் இருக்கும்போது ஞாயிற்றுக்கிழமைகளில் பியர் மட்டும் தான் குடிப்பேன். 90ம் ஆண்டு அகதியாக வந்த பின்புதான் அதிகமாக குடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது."

"ஏன் அசோக்! இங்கேயும் பியர் இருக்கிறதுதானே? இங்கே வந்து பியர் மட்டும் குடித்திருக்கலாம் தானே?"

"நான் செய்யும் பெயின்டிங் வேலை கஸ்டமானது. என்னுடன் வேலைக்கு வருபவர்களும் குடிப்பவர்கள்தான். அவர்களோடு சேர்ந்து நானும் குடித்தேன்" என்றார்.

"சரி அசோக்! என்ன வகையை நீங்கள் விரும்பி குடிப்பீர்கள்?"

"குடிவகையில் தரம் பார்த்து குடிப்பதில்லை. பணம் அதிகமாக இருந்தால் வீஸ்கி, அல்லது பிராந்தி. பணம் குறைவாக இருந்தால் கசிப்பு, சாராயம், சைடர் போன்ற மலிந்த குடி வகைகளை குடிப்பேன்."

"சைடர் என்றால் என்ன அசோக்?"

"இது நமது அகதிகள் முகாமிலேயே தயாரிக்கப்படுகிறது. அழுகிய பழங்கள், ஈஸ்ற், சீனி, வேம்புப் பட்டை உட்பட வேறு சிலவற்றையும் போட்டு தயார் செய்கிறார்கள். மிக மலிவாக கிடைக்கும். கசிப்பு சாராயம் கூட நமது அகதிகள் முகாம்களில் தயாரித்து விற்கிறார்கள்."

## எஸ்.பி.லெம்பட் வங்காலை

"அசோக்! நாம் சொந்த நாட்டை விட்டு அகதியாக இன்னுமொரு நாட்டிற்கு வந்து இந்த நாட்டின் சட்டத்திற்கு விரோதமாக இப் படியான காரியங்களை செய்யலாமா? அதுவும் அரசு பொறுப்பிலுள்ள முகாமிற்குள்ளேயே சட்ட விரோதமான காரியங்கள் செய்வது பாரதூரமான குற்றமல்லவா?" என்றேன்.

"உண்மைதான். பல தடவை இந்திய பொலிஸாரும் அதிகாரிகளும் கண்டித்தாலும் சட்ட நடவடிக்கை எடுத்தாலும் முகாம்களில் இப்படியான சட்ட விரோதமான செயல்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது" என்று அசோக் சொன்னார்.

"சரி அசோக்! உங்கள் தேவகோட்டை முகாமில் எத்தனை பேர் கசிப்பு, சாராயம், சைடர் தயாரிக்கிறார்கள்."

"மூன்று பேர் தயாரிக்கிறார்கள். என் பக்கத்து வீட்டு செல்வம் என்பவரிடம் சரக்கு இருக்கிறது. இங்கே இந்திய குடிமக்களும் இரவில் வந்து குடிக்கிறார்கள். நரிக்குறவர் கூட இங்கே வந்து குடிக்கிறார்கள்."

தொடர்ந்து வரும்...

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 24

**தொகுப்பு என்.கே.எஸ். திருச்செல்வம்**



ஆர்.எஸ். மனோகர்

எம்ஜியாரின் படங்களில் அவருடன் மோதும் பயங்கர வில்லன் மனோகரை தமிழ் இரசிகர்கள் எளிதில் மறந்திருக்க முடியாது. 1951 இல் திரையுலகில் நுழைந்த மனோகர் நடித்த முதல் படம் 'ராஜம்பாள்'. அதுவும் கதாநாயகனாக. அதன்பின் 'தாய்உள்ளம்' படத்திலும் நடித்தார். இப் படத்தில் மனோகரின் சிறப்பான நடிப்பைப் பார்த்த பக்ஷிராஜா அதிபர் எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு தனது 'காஞ்சனா' படத்தில் நடிக்க வைத்தார். இப் படத்தில் டாக்டர் சபேசனாக கே. ஆர, ராமசாமி, லலிதா, பத்மினி, ராகினி, குமாரி, எம்.என்.நம்பியார் ஆகியோருடன் நடித்த மனோகர் சிறந்த நாடக நடிகருமாவார்.

பல நடிகர்கள் நாடக மேடையிலிருந்தே திரையுலகிற்கு வந்தனர். ஆனால், இவர் திரையுலகிலிருந்து நாடக மேடைக்குச் சென்றார். அதுமட்டுமல்லாமல் வில்லனாக இருந்து கதாநாயகனாக மாறியவர்கள்தான் அதிகம். இவரோ கதாநாயகனாக நடிக்கத் தொடங்கி பயங்கரவில்லனாக மாறினார். மனோகரின் திரை வாழ்க்கையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய படம் 'வண்ணக்கிளி'. 1959 இல் வெளியான இப் படத்தில் போக்கிரி 'பூச்சி'யாக நடித்து 'அடிக்கிறகைதான் அணைக்கும்' என்று பாடும் அந்த மனோகர் ஒரு தனித்துவமான நடிகர். 200 படங்களுக்கு மேல் நடித்த இவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது 'இலங்கேஸ்வரன்' நாடகம். இன்பநாள், துரோணாச்சாரியார், திருநாவுக்கரசர், இந்திரஜித் போன்ற நாடகங்கள் இவரால் பிரமாண்டமான அரங்கம் அமைத்துப் போடப்பட்டவை. மேடை நாடகத்தில் யானையை மேடையேற்றி மக்களை பிரமிக்கவைத்த பெருமைக்குரிய ஆர்.எஸ். மனோகர் இலங்கையிலும் 'இலங்கேஸ்வரன்' நாடகத்தை மேடையேற்றியுள்ளார். ஆர்.எஸ்.மனோகர், தமிழக அரசின் கலைமாமணி விருதையும், நாடகக் காவலர் விருது, சங்கீத நாடக அகாடமி விருது போன்ற விருதுகளைப் பெற்றவர்.

அவர் தனது நாடகங்களை 7000 தடவைக்கு மேல் மேடையேற்றி சாதனை படைத்த ஒரு படாடோபமற்ற நடிகராகப் பாராட்டப்பட்டவராவர்.

## என்.எஸ். கிருஸ்ணன்–டி.ஏ.மதுரம்



டி.ஏ.மதுரத்துடன் கலைவாணர்.

1908ஆம் ஆண்டு பிறந்து 4ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு ஒரு சோடாக்கடையில் வேலைபார்த்து வந்தார் என்.எஸ்.கிருஸ்ணன். சோடாக் கடைக்குப் பக்கத்தில் இருந்த நாடகக் கொட்டகைக்கு சோடாவிற்கச் சென்றவர் அங்கேயே நாடக நடிகரானார். 1936 இல் 'சதிலீலாவதி' படத்தின் மூலம் திரையில் அறிமுகமானார்.

அதே ஆண்டு 'வசந்த சேனா' என்ற படத்தின் மூலம் அறிமுகமானவர் டி.ஏ.மதுரம். இப் படத்தில் இணைந்து நடித்த டி.ஏ. மதுரத்தை என்.எஸ். கிருஷ்ணன் இரண்டாம் தாரமாக மணம் முடித்தார்.

அன்று முதல் நகைச்சுவை ஜோடியாகப் பல படங்களில் நடித்து வந்த இவ்விருவரின் நகைச்சுவை, ரசிகர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. 1938 இல் வெளியான 'தக்ஷயக்ஞம்', 1939இல் 'திருநீலகண்டர்', 'மாயா' மச்சீந்திரா', ரம்பை யின் காதல், ஜோதி, 1940 இல் உத்தம புத்திரன், 'சகுந்தலை', 'பூலோகரம்பை', 1941 இல் அசோக்குமார், 'ஆர்யமாலா' மற்றும் 'மனோன்மணி', 'குபேரகுசேலா' 'சிவகவி', 'மங்கம்மா சபதம்', 'ஜகதலப் பிரதாபன்', 'பூம்பாவை', 'ஸ்ரீவள்ளி', 'கன் னிகா', 'சந்திரலேகா', 'கிருஷ்ணபக்தி, 'மங்கையர்க்கரசி', 'மணமகள்', மதுரைவீரன்', 'சக்கரவர்த்தித் திருமகள்', 'அம்பிகாவதி' போன்ற பல பிரபல படங்கள் இந்த நகைச்சுவை ஜோடிக்குப் புகழ் தந்த படங்களாகும்.

நகைச்சுவை மூலம் தனது சீர்திருத்தக் கருத்துக்களைப் 'பொடி' வைத்துக் கூறி வெற்றி பெற்ற கலைவாணர், சொந்தப் படங்களை எடுத்து இறுதிக்காலத்தில் கடனாளியாக நேரிட்டது. என்றாலும், மக்களிடையே அவருக்குக் கிடைத்த புகழ் என்றும் மாறாதது; நிலைத்திருக்கும்.

# காற்றுவாக்கில்...

### சபாஷ் ரூபவாஹினி!

ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசை, காலை 8 மணிமுதல் இரவு 9 மணி வரை தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தொடங்கியுள்ளது. எந்தத் தொலைக்காட்சியைப் பார்ப்பது என்று தெரிவு செய்து பார்ப்பதற்கு இப்பொழுது தனியார் தொலைக்காட்சி ஒன்றும் அரச தொலைக்காட்சி ஒன்றும் இரசிகர்களுக்குக் கிடைத்துள்ளன. சுவர்ண வாஹினி, சுயாதீனத் தொலைக்காட்சி, ரி.என்.எல் தொலைக்காட்சி நிலையங்கள் இதில் சேர்ப்பில்லை. அத்தி பூத்தாற் போல், அங்கொன்றும் இங்கொன்றுமாக, அதுவும் திரைப்படங்களையே ஒளிபரப்பி தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் இடமளிப்பதாகக் கூறி தமக்குள் திருப்தி கொள்கின்றன. இவற்றுள் சுயாதீனத் தொலைக்காட்சி சமீப காலம் வரை நிலையத் தயாரிப்புகளாக உள்ளூர் வாடை வீசும் சில நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வந்தது. ஏனோ தெரியவில்லை- புதிய தலைமை பொறுப்பேற்றவுடன் அவற்றை எல்லாம் நிறுத்திவிட்டு, சனிக்கிழமைகளில் திரைப்படத்தை மட்டுமே ஒளிபரப்பத் தொடங்கியது. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் 'ஐ' அலைவரிசை முழுமூச்சுடன் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தொடங்கியது பாராட்டப்பட வேண்டிய விடயம்தான். முன்னர் எல்லாம் தலைமைத்துவத்தில் இருந்தவர்கள் 'இன விகிதாசாரம்' என்று ஒரு 'மூடுமந்திர' கொள்கையை வகுத்துக் கொண்டு ஒரு சில தமிழ் நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளிபரப்பினார்கள். ஆனால், புதிய தலைமை குறிப்பாக ரூபவாஹினித் தலைவர் துணிவுடன் ரூபவாஹினியில் நிலவி வந்த இறுக்கமான அந்த ஒதுக்கல் நிலைமையை ஊடறுத்து, தமிழ் நிகழ்ச்சிகளுக்கு தனி ஓர் அலைவரிசையை ஒதுக்கியுள்ளார் என்றால் அது முக்கியமான ஒரு சிந்தனை மாற்றமாகவே கொள்ள வேண்டும். பாராட்டுக்கள். மேலும், இதனால் அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இப்பொழுது உற்சாகமேற்பட வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கடுமையாக உழைப்பார்கள் என்று எதிர்பார்ப்போமாக! முன்னர் தமிழ் நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு அனுசரணையாளர்கள் கிடைக்கவில்லை. எனவேதான், தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப முடியவில்லை என்று கூறி வந்தவர்களுக்கு கடந்த சில நாட்களாக பெருமளவு அனுசரணை வழங்கப்படுவதை உள்வாங்கிக் கொள்ளமுடியாதிருக்கலாம். முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்று சும்மாவா சொன்னார்கள்? முயற்சி மேற்கொள்ள வேண்டும் அயராது பாடுபடவேண்டும் என்ற முனைப்பு இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம். முயற்சி எதுவும் மேற்கொள்ளாமல் தட்டிக்கழித்து வந்தவர்களுக்கு இது சமர்ப்பணம்!

### "ரின்–மா" விளம்பரம்

வருமானம் தேட வேண்டும் என்ற ஆர்வத்தில் 'சோப் விளம்பரம்' ஒரு செய்தியாக மாறிய கதைபற்றி சென்ற வாரம் இப் பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதை வாசித்த அன்பர் ஒருவர் ரூபவாஹினியில் செய்தி வாசிப்பவர்களுக்கு முன்னால் நெஸ்ரோமோல்ட் கோப்பைகள் வைக்கப்பட்டிருப்பது மட்டும் சரியா என்று 'காற்றாடி' யிடம் கேட்டுள்ளார். உண்மையில், இதுவும் வரவேற்கப்பட முடியாத ஒன்றுதான். செய்தி வாசிப்பவர்கள் இருவர்- அவ்விருவர் முன்னாலும் தனித்தனியாக கோப்பை வைக்கப்படுகின்றன. செய்தி அறிக்கை கேட்கும் நேயர்களின் கவனத்தை எந்த வகையிலும் திசை திருப்புவது அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவே கருதப்படும். இதை, கூட்டுத்தாபனத் தலைவர்தான் கவனிக்க வேண்டும். வருமானத்தை அதிகரிக்க வேண்டியதுதான். அதுவே சந்தைப்படுத்துவோரின் ஒரே நோக்கம். ஆனால், ரூபவாஹினித் தலைவரின் தேசிய பொறுப்பு அதைவிடப் பாரியது அல்லவா?

**காற்றாடி**

### 'பழைய' குரல்கள் எங்கே?

இலங்கை வானொலியின் 'தென்றல்' பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். இம் மாதம் முதலாந்திகதி தொடக்கம் இரவு 11.15 வரை ஒலிபரப்பை நீடித்திருக்கிறார்கள். காலையில் புதிய குரல்கள் கேட்கின்றன. புதியவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது முக்கியம். அவர்களின் ஆற்றுகை எந்த அளவில் இருக்கிறது என்பது போகப் போகத்தான் தெரியவரும். ஆயினும், சில 'பழைய' குரல்களை விளம்பர நிகழ்ச்சிகளில் மட்டுமே கேட்க முடிந்தது. அவ்வாறாயின், அவர்களைக் காலையில் அறிவிப்புச் செய்ய அனுமதிப்பதில் என்ன சங்கடம்? இலங்கையில் வானொலிக்கு வயது 75 -க்கு மேல் என்பதாலா இப்படி? அதற்கு 'இளமைத்தோற்றம்' கொடுத்து மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியம்தான். ஆனால்,சிறந்த அறிவிப்பாளர்களை ஒதுக்குவதன் மூலம், 'இளமைத் தோற்றத்'தினால் ஏற்படும் என எதிர்பார்க்கும் மாற்றங்கள் வந்துவிடவா போகிறன? ரூபவாஹினித் தலைவரே இலங்கை வானொலிக்கும் தலைவராக இருப்பதனால், அவருக்கு இது மற்றொரு சமர்ப்பணம்.

### புனித ரமழான் தொழுகை நேர அட்டவணை (ஹிஜ்ரி–1423 – நவம்பர்–டிசம்பர்)

| திகதி | சஹர் முடிவு | சுபஹ் | லுஹர் | அஸர் | மஃரிப் (நோ.து.நே) | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 01-07 | 04.56 | 05.11 | 12.26 | 03.47 | 06.21 | 07.33 |
| 08-15 | 04.56 | 05.11 | 12.26 | 03.48 | 06.20 | 07.32 |
| 16-21 | 04.57 | 05.12 | 12.27 | 03.49 | 06.20 | 07.33 |
| 22-24 | 04.58 | 05.13 | 12.28 | 03.50 | 06.21 | 07.34 |
| 25-27 | 05.00 | 05.15 | 12.29 | 03.51 | 06.21 | 07.35 |
| 28-30 | 05.00 | 05.15 | 12.30 | 03.52 | 06.22 | 07.36 |
| 01-03 | 05.02 | 05.17 | 12.31 | 03.53 | 06.23 | 07.37 |
| 04-06 | 05.03 | 05.18 | 12.32 | 03.54 | 06.24 | 07.38 |

அனுசரணை: முஸ்லிம் மஜ்லிஸ் இலங்கை துறைமுக அதிகாரசபை-கொழும்பு.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (அல்லாஹ் கூறுகின்றான்) ஆதமின் மகனுடைய செயல் ஒவ்வொன்றும் அவனுக்குரியது; நோன்பைத் தவிர! ஏனெனில், அது எனக்குரியது. அதற்கு (நான் விரும்பும் அளவிற்கு) நானே பிரதிபலன் அளிக்கின்றேன்.


## இதோ இலங்கையில் முதன் முறையாக....

**Bachelor of Information Technology (BIT) - Degree**

**1-1/2 வருடங்களில் (18 மாதங்களில்)**

- வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்குப் பாடநெறி இறுதியில் பிரபல வர்த்தக நிறுவனங்களில் தொழில்சார் பயிற்சிநெறிகளும் வழங்கப்படவுள்ளன-(Industrial Training)
- BIT Degree சான்றிதழ்கள் அமெரிக்காவில் புகழ்பெற்ற Trinity Univercity (USA) இனால் வழங்கப்படும்.
- குறிப்பிட்டளவு அனுமதிகள் மாத்திரமே கைவசம் உண்டு. எனவே உங்கள் அனுமதிகளுக்காக விரையுங்கள்!
- பாடநெறிக் கட்டணம் முழுவதும் மாதாந்த தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
- இது இலங்கையிலேயே மிகக் குறைந்த கட்டணத்தைக் கொண்ட BIT Degree ஆகும்.
- ஏனைய கணனி கற்கை நெறிகள்: MS Office, Graphic Design, Web Design, DTP, Corel Draw, Pagemaker, Kids Courses, MCP Classes, Accounting Packages, VB, JAVA, C ++, Flash, Dream Weaver, Auto CAD, ASP & PhotoShop.
- எமது சான்றிதழ்கள் அகில இலங்கை கணனி சம்மேளனத்தினாலும் (Actos) UK பல்கலைக் கழகங்களினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

HCCP எனும் 1 வருட கால சிறப்புப் பாடநெறியும் கற்பிக்கப்படுகின்றது.

**Hightech International Computer College**

No 296- 1/2, Galle Road, Wellawatta, Colombo-06.

(வெள்ளவத்தை Nations Trust வங்கிக்கு அருகாமையில்-Sea Side)

T.P: 075- 557725, 075- 519993.

**Spoken English with Grammer**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

Saturday & Sunday 4.00-6.00 P.M / Monday & Thursday 9.00- 11.00 A.M

# ஸ்போர்ட்ஸ்

## டெஸ்ட் தொடரில் இந்தியாவுக்கு வெற்றி

இந்திய மேற்கிந்திய தீவு அணிகளுக்கிடையில் கல்கத்தாவில் நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 2க்கு பூச்சியம் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

3வது டெஸ்டின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை இந்திய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட் இழப்பிற்கு 471 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஆட்டம் முடிவதற்கு சில ஓவர்கள் மாத்திரமே மீதம் இருந்த நிலையில் மேற்கிந் தியத் தீவுகள் அணி வெற்றி பெறுவதற்கு 333 ஓட்டங்கள் பெற வேண்டி இருந்தது.

குறுகிய நேரத்திற்குள் இந்த இலக்கை அடைய முடியாது என்பதால் மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பாடகளம் இறங்கவில்லை. இப் போட்டியின் போது இந்திய அணியின் சார்பில் சச்சின் டெண்டுல்கார், லக்ஷ்மன் ஆகியோர் சிறப்பாக ஆடினர்.

ஒருநாள் போட்டிகளில் டெண்டுல்கார் விளையாடமாட்டார்.

கல்கத்தாவில் நடைபெற்ற 3 வது டெஸ்டின் 2 வது இனிங்ஸில் ஆடிய போது டெண்டுல்காருக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது.

இதனால் 3 வார காலம் ஓய்விலிருக்குமாறு டெண்டுல்கார் மருத்துவர்களால் பணிக்கப்பட்டிருக்கிறார்.

டெண்டுல்காருக்கு ஏற்பட்டுள்ள காயம் சாதாரணமானதுதான் என்ற போதிலும் அது மேலும் அதிகரிக்காமல் இருக்கும் பொருட்டு டெண்டுல்கார் ஓய்விலிருக்குமாறு கேட்கப்பட்டிருப்பதாக இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

## சிந்தியா பதில்கள்

**★ நஷ்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்கினால் இலாபமடையலாம் என்று சொல்லப் படுவதில் உண்மையுண்டா?**

பாத்திமா ஹஸ்னா, வாழைச்சேனை.

*உண்டு. இலாபம் அரசுக்கும் அந்த நிறுவன முதலாளிகளுக்கும்.*

**★ சிந்தியாவுக்கு சமீபத்தில் உண்டான ஆச்சரியம்?**

ஜெ. திவ்வியராஜன், கிருலப்பனை.

*இதற்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன். The bridge of Dragon என்ற பழைய ஆங்கிலப் படம். ஒரு சண்டைக் காட்சியின் இடை நடுவே 'முதல்வனே' தமிழ்ப் பாடலின் ஆரம்ப இசை!*

**★ மத்திய வங்கி குண்டுத் தாக்குதலில் மனிதத் தன்மையேயில்லாமல் உயிரிழப்பு, சொத்தழிப்பை நடத்தியதற்காக புலிகளின் தலைவருக்கு 200 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்திருக்கிறதே நீதிமன்றம்?**

க. கமால்தீன், ஏறாவூர்-3.

*இதற்குப் பதிலாக வடக்கு கிழக்கில் அரசாங்கம் மேற்கொண்ட இன அழிப்பு, சொத்தழிப்புகளுக்கெதிராக அவ்வப்போது ஆட்சியிலிருந்த ஸ்ரீ.ல.சு.க தலைமை மீதும், ஐ.தே.க. தலைமை மீதும் வழக்குத் தாக்கல் செய்து, தமிழர் நீதிமன்றில் தண்டனை நிறைவேற்றி விட முடியும். ஆனால், முரண சோகம் என்னவென்றால், இந்த மனிதத் தன்மையேயில்லாத குற்றவாளிகளிடமிருந்துதான் தீர்வை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலையில் நாட்டு மக்கள் இருப்பது!*

**★ சோம்பல் வறுமைக்குரியது. உழைப்பு உயர்வுக்குரியது. உங்கள் தலையின் உள் புதைந்திருக்கும் மூளை எதற்குரியது?**

எம்.எம்.எம் ஹில்மி, அளுத்கம.

இந்த மாதிரியான கேள்விகளுக்கும் பதில் சொல்வதற்குரியது.

**★ சிந்தியா, காதலித்து அதிகமாக கவலை அடைவது ஆண்கள்தானே?**

எஸ். விஜயன், குவைத்.

*அதிகமாக வெளிக்காட்டிக் கொள்ளக்கூடிய சுதந்திரத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆண்கள் தான்.*

**★ உலகத்தின் அமைதி ஈராக்கிய அதிபரால் கெடுவதாகக் கூறும் 'புஷ்' பற்றி?**

ஆரிப் சராவுடீன், மட்டுநகர்.

*வலியவன் சொல்வதே வேதம்!*

**★ சிந்தியாவை வியக்க வைத்தவர்கள் யார்?**

ஐ.எஸ். பிரியா, கித்துள்.

*கடப்படியில் ஆட்டைக் கட்டி வைத்துக் கொண்டு கந்தசஷ்டி விரதத்தை ஆரம்பிக்கிறவர்கள்!*

**★ தீபாவளிக்கு தொலைக்காட்சியில் சாம்ராட் அசோகா பார்த்தீர்களா?**

எஸ். ஸ்ரீபன், காலி.

*பார்த்தேன். வன்முறைக்கு எதிரான வலிமையான படம். பலராலும் புரிந்து கொள்ளப்படாமல் தோல்வியடைந்துவிட்டது வருத்தத்துக் குரியது.*

**★ 'இவன்' படத்தில் சிந்தியாவுக்குப் பிடித்த கட்டம் எது?**

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

*"எங்கிருந்தோ பறந்து வந்து பாய்ந்து பாய்ந்து சண்டைபோட்டு உங்களை ஒருவன் காப்பாத்துவான் என்று பார்த்துக் கொண்டிராமல் போய் உங்க ரேஷன் அரிசியை அடிச்சுக் கேட்டு வாங்குங்கப்பா!" என்று 'கௌபோய்' கெட்டப்பில் பார்த்திபன் வந்து சொல்லும் கட்டம்.*



**★ இலக்கியம் எதற்கு? அது இல்லா விட்டால் உலகம் இயங்காதா?**


எஸ். வசந்தமலர், பிட்டமாறுவை.

*இயங்குமே! அது மனிதனே இல்லாமல் இன்னும் சிறப்பாக இயங்கக் கூடும்.*

**★ தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் உள்ளவர்களிடமும் வெற்றி வந்து சேராமல் போய்விடுகிறதே?**

பெ. கோகிலன், ஹட்டன்.

*அது வந்து சேர்வதற்குள் விடாமுயற்சி தன் நம்பிக்கையை இழந்து விடுவதுதான் காரணம்.*



**★ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலைவரிசையை இரவு 11.15 வரை நீடித்துவிட்டார்களே....?**

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.

*அப்படியா!*

**★ அரச தொலைக்காட்சியின் 'ஐ' அலை வரிசையில் 13 மணித்தியாலங்களுக்குத் தமிழ் நிகழ்ச்சிகள்?!**

வை. நிஸ்வானா நஸ்ரீன், ஹொரவப்பொத்தானை.

*வரவேற்க வேண்டியதுதான். கீரைக் கடைக்கும் எதிர்ககடை இருந்தால்தான் நல்ல கீரை கிடைக்கும். ஆனால், ஏற்கனவே தமிழ் மக்கள் அனைவரையும் தன் முன்னால் இருத்தி விட்டிருக்கும் தனியார் சின்னத்திரையிலிருந்து அவர்களைத் தம்பால் கவர்வதற்கு அரச தொலைக்காட்சியினர் நிறைய முயற்சி செய்ய வேண்டும். கன்னாபின்னாவென்று நிகழ்ச்சிகளைத் தருவதும் நிறுத்துவதுமாக இல்லாது இரசிகர்கள் ஏமாறாமல் காத்திருந்து பார்க்கும் விதத்தில் திட்டமிட்டு ஒழுங்கான வரிசைக் கிரமத்தில் நிகழ்ச்சிகளைத் தரவேண்டும். இதற்கு தயாரிப்பாளர்களிடத்தில் ஒற்றுமையும், உழைப்பும் செம்மையில் கவனமும் வேண்டும். முக்கியமாக, தமிழ் நிகழ்ச்சிகளுக்கான இந்த நேர ஒதுக்கீடு தொடர்ந்தும் இருக்க வேண்டும். அதற்கான நம்பிக்கையை ஏற்படுத்துவது, தமிழ் நிகழ்ச்சி அதிகாரிகளின் பாரிய பொறுப்பு. பெருஞ் செலவில் தயாரிக்கப்படும் தென்னிந்திய நிகழ்ச்சிகளுக்குப் போட்டியாக நம் நிகழ்ச்சிகளை ஒப்பிட முடியாது. எனவே முதலில் இரசிகர்களைக் கவர்ந்திழுப்பதற்கு தென்னிந்திய நிகழ்ச்சிகளைத் தரவேண்டியிருப்பதில் கூச்சம், சங்கடமேதும் இருக்குமாயின் போட்டியில் ஜெயிக்க வழியில்லை. இரசிகர்களை அதிகம் பார்க்க வைத்தால்தான் விளம்பரங்கள் தேடிவரும். விளம்பரங்களினால் வருவாய் கிடைத்தால்தான் 'ஐ' அலைவரிசை தமிழ் அலைவரிசையாகத் தொடரும் என்பதும் இன்றைய யதார்த்தம். இதை உணராவிட்டால் 'தமிழ் அலைவரிசை' விளையாட்டு அலைவரிசையாய் மாறிவிடும் என்பதே விதி.*

# இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

## அலையாக ஓடும் உணர்வுகள்

"ஆஹா! எத்தனை அழகு கொட்டிக் கிடக்கிறது!" வியப்போடு சொல்லியபடி ஆழ்ந்து சுவாசித்து நெஞ்சை நிரப்பினான் வரகுணன்.

அவன் கண்கள் அலைந்த இடங்களைப் பார்த்தவாறு இருந்தாள் காவேரி.

"இதோ வெண்ணிலா தரையில் சிந்தியிருக்கும் வெள்ளி நாணயங்களைப் பார்!"

"ம்" என்றாள் காவேரி. புல் முளைத்திராத நிலத்தில் சிதறியிருந்த வெளிச்சத் துணுக்குகள் மீது பார்வையை ஓட்டினாள்.

"அதோ பார், வைக்கோல் குவியலைக் கூட குளுமை நிரம்பிய வெளிச்சக் குமிழாக்கி விட்டிருக்கிறது நிலவு...." என்று மேலும் அதிசயப்பட்டான்.

அவள் அசுவாரசியமாகத் தூரத்தே பார்த்தாள்.

"இந்த நிலவு, இந்தக் குளுமை, அதோ ரகசியம் காத்தபடி அசையாதிருக்கும் மரங்கள், பளிங்குத் தரை, இந்தச் சூழ்நிலை....எல்லாமே எனக்குப் பிடித்திருக்கின்றன. என்னை என்னமோ செய்கின்றன. காவேரி...."

"ஹ்ஹூம்....என்னைத்தான் பிடிக்கவில்லையாக்கும்...."

வரகுணன் அவள் கண்களுக்குள் ஊடுருவினான்.

"பிடிக்கவில்லையா?" ஆச்சரியத்தோடு வினவிய வரகுணன், சற்றுக் கழித்துத் தொடர்ந்தான். "இது போலவே உன்னையும் பிடித்திருக்கிறது என்று சொன்னால் அது சரியாய்ச் சொன்னதாகுமா? என் நினைப்பிலிருப்பதைச் சொல்ல எத்தனை பலவீனமான வார்த்தை அது!"

"க்கும். ஆரம்பித்து விட்டீர்களா?"

"என்ன ஆரம்பித்து விட்டேன்?"

"ஆண் பிள்ளைகளின் வேலையை...."

"அதென்ன?" ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தான்.

"இப்படிப் புகழ்வது. பிறகு..."

"பிறகு?"

"சரி... சரி... அது கிடக்கட்டும்"

"எது?"

"எதுவாயிருந்தாலென்ன?" அவனை வெட்டி, வேறெங்கோ பார்ப்பது போல் பாசாங்கு செய்தாள். அவள் தோள்களைப் பற்றி இழுத்துத் தன்னோடு மோதும்படியாகச் சேர்த்தணைத்தான். பிறகு, "இதுவா?" என்று ரகசியக் குரலில் கேட்டான்.

அவள் உடல் முழுக்க ஒரு முறை சொடுக்கிவிட்டது போல சிலிர்ப்போடியது. முனகலுடன் அவன்மீது இழைந்தாள்.

வரகுணன் தன் மார்புமீது அவளுடைய உடலை உணர்ந்தான். நெகிழ்வும் இளஞ்சூடுமான அந்த உடல் அவனுள் வெறியேற்றியது.

குனிந்து வாசனையுடன் அடர்ந்திருந்த அவள் கரிய கூந்தலைப் பார்த்தான். முகத்துக்கு மிக நெருக்கமாக இருந்ததால் அவளிடமிருந்து ஒரு விநோதமான வாசனையை உணர்ந்தான். இச்சையைத் தூண்டிவிடும் வாசனை.

அவள் அவன் தலையைத் தன்னிடம் இழுத்து, அதன் மேல் குனிந்து, அவன் கழுத்தைக் கடித்து முத்தமிட்டுத் தலைமயிரையும் கடித்தாள்.

அவன் உணர்ச்சிகளின் உச்சிக்கு ஏறினான்.

தன்னுடைய ஐந்து விரல்களையும் அவளுடைய கூந்தலினூடாய் நுழைத்த, மயிரிழைகளினுள் துழாவத் தொடங்கினான். படிப்படியாக அவன் விரல்களின் இயக்கத்தில் முரட்டுத்தனம் அதிகரித்தது. அவளுடைய கூந்தலின் மயிரிழைகள் அவன் விரல்களினுள் சிறுசிறு மின்பொறிகளைச் செலுத்தின. அவள் கூந்தலிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த வாசம் அவனைத் திணற வைத்தது.



"காவேரி" என்று இன்பமாக அழைத்தான்.

உடலில் இன்ப உணர்ச்சிகள் பெரு வேகத்தில் சுழன்று சுழன்று ஓடியதால் பேச்செழாத காவேரி "ம்" என்று முனகினாள்.

"என் உயிரே" என்று தழுதழுத்தான்.

சற்றுக் கழித்து அவள் மார்பிலிருந்து முகத்தை நிமிர்த்தியபடி, "உயிரல்ல.... நீ என் ரத்தம்" என்றான் அவள் கண்களோடு தன் கண்களைக் கலந்து.

"ரத்தமா?"

"ஆமாம், என் ரத்தம் நீ. வெட்கப்பட்டு ஒளிந்து ஓடுவாய். வெளிப்பட நேர்ந்தால் சிவந்து விடுவாய். என் ரத்தம்தான் நீ!"

இப்போது காவேரி மேலும் சிவந்தாள்.

"கவிதைக்குக் குறைச்சலில்லை!"

"வேறெதுக்குக் குறைச்சல்?"

"ஆ... சரியான கேள்வி மன்னன்" அவள் தன் குரலைத் தழைத்துக் கொண்டு பேசினாள். அக்குரல் அவன்மீது ஒரு புதிய வலுவோடு அதிகாரத்தைத் திணிப்பது போலிருந்தது. வரகுணனை மிரள வைத்தது அவள் குரல் மட்டுமல்ல, கணக்கிலாக் காமக் கணைகளை வீசியபடி இருந்த அவளது மனோகர உடலும்தான்.

என் நோயும், மருந்தும் நீதான்" என்றபடி அவள் மார்பின் நடுவே மீண்டும் முகத்தைப் புதைத்தான்.

"என் செல்லமே...ராசாவே" என்று முணுமுணுத்தபடி அவன் மூச்சுத் திணறுமளவுக்கு அணைத்தாள் காவேரி.

உணர்ச்சிகள் அலையலையாக ஓடிக் கொண்டிருந்தன இருவர் உடலிலும்.

காவேரியின் ஆவேச அணைப்பில் திணறிய வரகுணன், 'விலங்கு மெல்லியல்' என்ற கம்பனின் வர்ணனைப் பொருத்தத்தை நினைத்து வியந்தான்.

காவேரி மெல்ல மெல்ல அவனை சொர்க்கத்தை நோக்கி இழுத்துச் சென்றாள், சற்றுப் பலவந்தமாகவும் கூட.

ஆனால், அந்த பலவந்தம் வரகுணனுக்கு இன்பமளிப்பதாகவே இருந்தது.

வெட்கம் மறந்து, தயக்கங்களை உதறிவிட்டு இயங்கும் அவளைப் பார்க்கையில், வரும்போது அவள் பயந்து பயந்து வந்த கோலம் வரகுணனுக்கு மனதில் தோன்றியது. என் காமத் தீயை அணைப்பதற்கு இப்போது என்னை அணைப்பவள், இந்தக் கூடலுக்கு முந்திய நேரங்களில் எத்தனை வன்மையாக தன் வெட்கத்தை விட்டு வெளியே வர மறுத்தாள் என்பதை நினைத்துப் பார்த்தான்.

நடந்து வரும் போதே பல ஒய்யாரங்களை உதிரவிட்டபடி வந்தாள். அந்தப் அசைவுகளில் காமன் கணைகள் நாற்புறமும் சிதற, தான் நோயில் வீழ்ந்து துடித்ததையும் இப்போது அவள் துடிப்பதையும் நினைத்தான்.

கைகளை வீசி அவள் நடந்து வந்த போது ஒலியெழுப்பிய அந்த அழகிய வளையல்கள் இப்போதும் ஒலியெழுப்பின. நோயில் வீழ்த்திய அந்த ஓசைக்கும், நோயைக் குணப்படுத்தியபடி இப்போது ஒலிப்பதற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தான். காற்றில் நடுங்குகின்ற சிறு தளிர் போல நடுநடுங்கியபடி வந்தவள், அவனது காதல் நோயை நீக்கி சுகப்படுத்தும்படியாக இப்போது தழுவிக் கொண்டிருப்பதை எண்ணினான். மகிழ்ந்தான்.

**கோல் அமை விழுத்தொடி**
**விளங்க வீசிக்**
**கால் உறு தளிரின்**
**நடுங்கி ஆனாது,**
**நோய் அசா வீட**
**முயங்கினாள்.....**

**(அகம்: 162: 14–16)**

# மன்னாதி மன்னன்

129

சித்திருத்தி மலை உச்சியிலிருந்த காளி அம்மன் கோவில் சந்நிதானத்தின் முன் நின்ற மாமன்னர் விக்கிரமாதித்தன் உடைவாளை உருவித் தன் தலையைச் சீவ முற்பட்ட போது காளிகாம்பாள் மன்னன் முன் பிரசன்னமாகித் தடுத்தாள். "மகனே, எதற்காக என்னை அழைத்தாய்?" என்று வினவினாள்.

மன்னர், "தாயே, நான் சிறிதளவு நேரம்தான் உன்னைப் பிரார்த்தித்தேன். உடனே பிரசன்னமாகிவிட்டாய். ஆனால் வேதநாயகன் என்ற அந்தணன் நூறாண்டுகள் தவமிருந்தும் அவனுடைய கோரிக்கையை நீ நிறைவேற்றவில்லையே! ஏன் இந்தப் பாரபட்சம்" என்று கேட்டார்.

காளிகாம்பாள் புன்னகை பூத்தவளாக, "மன்னா, நீ என்னைப் பிரார்த்திக்கும் போது திரிகரண சுத்தியுடன், பூரணமாக ஒரே மனதுடன் வேண்டினாய். ஆனால் வேதநாயகன் தனது சிந்தையை அடக்காமல் பலவாறான சிந்தனைகளுடன் என்னைப் பிரார்த்திக்கிறான். திரிகரணங்களையும் ஒரு நிலைப்படுத்தாமல் இறைவனைப் பிரார்த்திப்பதில் எந்தப் பயனும் கிட்டாது, இதனாலேயே அந்த அந்தணனுடைய வேண்டுதலை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது," என்று தெரிவித்தாள். இதனைக் கேட்ட மன்னன் அம்பாளிடம் "தாயே! மனமிரங்கி வேதநாயகனுக்குக் காட்சி தந்தருள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்கி அம்பாள் வேதநாயகன் முன் தோன்றி அவன் கோரிய வரங்களைக் கொடுத்தருளி மறைந்தாள்.

அரியணை மீது ஏறி அமர ஆசை கொண்டு படிகளைக் கடந்து வந்த போஜ மன்னரிடம் இக் கதையைக் கூறி முடித்த சகலகலாவல்லிப் பதுமை, "மன்னரே! இத்தகைய நற்பண்பு உம்மிடம் இருக்குமானால் நீர் இவ்வரியணை மீது ஏறி அமரலாம்" என்று கூறியது.

கதை கேட்டு முடிக்கும் போது கதிரவன் குடதிசையில் சாயும் சமயமாகி விட்டமையினால் தனது அரண்மனை நோக்கிச் சென்றார் போஜமன்னர்.

அடுத்த நாள், அரியணையில் ஏறுவதற்காக முயற்சி எடுத்து வரும் போஜ மன்னருக்கு இருபத்தேழாம் நாளாகும், அதிகாலையிலேயே அரியணை மண்டபத்தை அடைந்து முறைப்படியான பூசைகளை முடித்துக் கொண்டு படிகளை ஏறிக் கடந்து இருபத்தேழாம் படியில் மன்னர் காலடி எடுத்து வைத்தார். அப்படிக்குக் காவலாக இருந்த மாணிக்கவல்லிப் பதுமை மன்னரை இடைமறித்து, விக்கிரமாதித்த மாமன்னரின் அரிய குணாம்சங்களை விவரிக்கும் கதை ஒன்றைக் கூறத் தொடங்கியது.

மாமன்னர் விக்கிரமாதித்தன் உஜ்ஜயினி மாகாளி பட்டணத்தில் ஆட்சி புரிந்த வேளையில் ஒருநாள் செண்பக புரியிலிருந்து தனதத்தன் என்ற வைர வியாபாரி மன்னரிடம் வந்து வணங்கி நின்றான். தான் கொண்டு வந்திருந்த வைரங்களை மன்னர் முன்னிலையில் பரப்பி வைத்து, "மாமன்னரே, இத்தனை வைரங்களையும் தங்களுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தேன், ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான்.

அவ் வைரங்களை ஏற்றுக் கொண்ட மன்னர் இவற்றைவிட விலை மதிக்க முடியாத வைரங்களும் இருக்க வேண்டுமே!" என்று கேட்டதும் தனதத்தன்,

## தனதத்தனும் பத்து வைரங்களும்

"ஆமாம் மன்னர் மன்னவரே! என்னிடம் மிகவும் சிறந்த பத்து வைரங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றையும் ஒருவரது வலது கைப் பெருவிரலில் வைத்துச் சுண்டினால் அது எத்தனை தூரம் மேலே செல்கிறதோ, அதே அளவு பொன் தருபவர்களுக்கே அவற்றை விற்க முடிவு செய்துள்ளேன்," என்று கூறினான்.

அத்தனை வைரங்களையும் தன்னிடம் கொண்டுவந்து சேர்க்குமாறும், அடுத்த எட்டு நாட்களுக்குள் அவற்றைச் சபைக்குக் கொண்டுவந்து சேர்த்தால், அவற்றைத் தாமே வாங்கிவிடுவதாகவும் மன்னர் வாக்களித்தார்.

வைரங்களை எடுத்து வருவதற்குச் செல்லும் போது அரண்மனைக் காவலர்கள் ஐவரையும் அழைத்துக் கொண்டு போகுமாறு வணிகரிடம் மன்னர் சொன்னார். மன்னர் சொன்னபடி தனதத்தன் காவலர்களையும் அழைத்துக் கொண்டு தன்னுடைய ஊருக்குச் சென்றான்.

## இராஜகுமாரன்

வணிகன் வைரங்களை எடுத்துக் கொண்டு உஜ்ஜயினி திரும்பும் வழியில் காட்டாறு கரைபுரண்டு ஓடியது. தங்களை அக்கரைக்குக் கொண்டு செல்லுமாறு ஓடக்காரரிடம் வணிகன் எவ்வளவோ கேட்டும், பெருவெள்ளம் ஓடிக் கொண்டிருக்கும் போது தன்னால் ஓடத்தைச் செலுத்த முடியாது என்று கூறினான்.

மன்னன் கொடுத்திருந்த எட்டு நாட்கெடு முடிவதற்கு முன்னே சென்று மன்னர் விக்கிரமாதித்தரிடம் வைரங்களைக் கையளித்து விட வேண்டும் என்று பதற்றமடைந்த வணிகன் ஏராளமான பணம் தருவதாக ஓடக்காரனிடம் சொன்ன போதும் அவன் உடன்பட மறுத்துவிட்டான். தான் மாமன்னர் விக்கிரமாதித்தனிடம் அவசரமாகச் செல்வதாகவும் அதற்கு உதவி புரியாவிட்டால் மாமன்னரின் தண்டனையைத் தான் மட்டுமல்லாமல் ஓடக்காரனும் அனுபவிக்க வேண்டிவரும் என்று வணிகன் கூறியதும் ஓடக்காரன் ஓடத்தைச் செலுத்த முன் வந்தான்.

கரையிறங்கிய வணிகனும் காவலர்களும் காட்டு வழியே சென்று கொண்டிருக்கும் போது பத்திற்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் வழி மறித்துத் தனதத்தனிடமிருந்த வைரங்களைத் தங்களிடம் தந்துவிடுமாறு மிரட்டினர். அந்தக் கொள்ளையர்களை விரட்டியடிக்க வணிகனுடன் வந்த காவலர்களாலும் முடியவில்லை. இறுதியில் வணிகன் தன்னிடமிருந்த வைரங்களில் ஐந்தை மட்டும் எடுத்து கொள்ளையர்களிடம் கொடுத்துவிட்டு மீதி ஐந்து வைரங்களுடன் மன்னரிடம் போய் நடந்தவற்றை விபரித்தான். மன்னன் வணிகன் தந்த ஐந்து வைரங்களையும் பெற்றுக் கொண்டு, அவன் கேட்ட பெறுமதிக்கேற்றவாறு ஏராளமான பொன்னை வழங்கினார்.

தனதத்தனுடன் சென்றிருந்த வீரர்களைப் பணியிலிருந்து நீக்கிவிட்டதுடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வணிகனிடமிருந்து கொள்முதல் செய்த வைரங்களைக் கொடுத்து அனுப்பினார்.

இக் கதையைக் கூறி முடித்த மாணிக்கவல்லிப் பதுமை, "இத்தகைய அருளாளனான பேரரசர் விக்கிரமாதித்தனுடைய அரியணையில் ஏறி அமர்வதற்கு உம்மிடம் தகுதியிருக்குமானால் நீர் மேலே சென்று அரியணையில் அமரலாம்," என்று கூறி முடித்தது.

மாலைப் பொழுது நெருங்கிவிட்டமையினால் போஜ மன்னர் படிகளை விட்டு இறங்கி அரண்மனை சென்று ஓய்வெடுத்தார்.

அடுத்தநாட் காலையில் போஜ மன்னர் தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, "இன்று எவ்வாறானாலும் முழுப் படிகளையும் தாண்டி அரியணையில் ஏறி அமர்வது," என்று தனது அமைச்சர்களிடம் கூறிக் கொண்டு அரியணை மண்டபத்திற்கு வந்து இருபத்தேழு படிகளையும் வேகமாகக் கடந்தார். ஆனால் இருபத்தெட்டாம் படியில் காலடி எடுத்து வைத்ததும் அங்கு நின்றிருந்த காமவல்லிப் பதுமை கடுங் கோபத்துடன் போஜ மன்னரைத் தடுத்து நிறுத்தியது. "என்னுடைய சகோதரிகளான பதுமைகள் இது நாள் வரை கூறிய கதைகளைக் கேட்ட பின்னரும் நீர் தயக்கமில்லாமல் அரியணையில் ஏறத் தலைப்பட்டுவீட்டீர். இந்த அரியணையில் அமர்ந்து அணுவளவும் நீதி வழுவாமல் ஆட்சி புரிந்த மன்னர் விக்கிரமாதித்த பூபதியின் சிறப்பை விளக்கும் மற்றுமொரு கதையை இன்று உமக்கு நான் சொல்லுகிறேன். கேட்டுவிட்டு ஒரு நல்ல முடிவக்கு வாரும்", என்று கூறி கதையைச் சொல்லத் தொடங்கியது.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

இலங்கைப் பிரச்சினையில இதுவரைக்கும் யாருக்கு என்ன யோகம் அடிச்சுதோ இல்லையோ இங்க மழைக்கு முளைச்ச காளான் மாதிரிப் பெருகிப்போய் இருக்கிறவை அரசியல் ஆய்வாளர்கள்தானுங்கோ. பேனா பிடிச்சு நாலுவரி எழுதமுந்தி, முந்தநாள் வந்தவையெல்லாம் பெரிய அரசியல் ஆய்வாளரெண்டு நேம் போட் கொழுவீடுகினமுங்கோ. அவையின்ர காட்டிலதான் இப்ப மழை.

இப்ப, வேலைசெய்யிறது ஒரு பத்திரிகையில, வருவாய் பல பக்கத்தால. பீ.பீ.சீ., ஐ.பீ.சி, ரீ.பீ.சி, கீ.பீ.சீ., இணையம், கிணையம் அந்தநெற், இந்தநெற் இதவிட என்.ஜி.ஓ, கின்ஜியோவிலயும் தொடுசலெண்டால் வருவாயச் சொல்லி வேலையில்லை!

செய்தி தேடுறதுதான் பெரும் போட்டியாப் போட்டுதுங்கோ. ஒரு செய்தியைத் தேடிப் பிடிச்சால் ரொட்டியாத் தட்டி ஒரு நிறுவனத்துக்குக் குடுத்திட்டு, அதையே கொஞ்சம் பிட்டாய்க் கொத்தி இன்னொண்டுக்கும், இடியப்பமாய்ப் பிழிஞ்சு மற்றொண்டுக்கும் குடுத்தால் யாபாரம் ஓகோதான்.

செய்தியைச் செய்தியாக் குடுக்கிற தெண்ட கதை எண்டைக்கோ, முடிஞ்சு போச்சுதுங்கோ. இப்ப, செய்தியை விட, செய்தியாளற்ர அபிப்பிராயம்தான் மூக்கை நீட்டிக்கொண்டு முன்னுக்கு நிக்குதுங்கோ. செய்தி பற்றி வாசகர்கள் என்ன முடிவெடுக்க வேணுமெண்டதையும் இப்பெல்லாம் செய்தியாளர்களே தீர்மானிச்சிடுறாங்க. தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள் எண்டு சொல்லிக்கொண்டு, என்ன தெரிவிக்கப்படவேணும், எப்பிடித் தெரிவிக்கப்படவேணும், எப்ப தெரிவிக்கப்படவேணும், எதை முக்கியப்படுத்த வேணும், எண்டதை மட்டுமில்ல எதைத் தெரிவிக்கக் கூடாது, எதை இருட்டடிப்புச் செய்யவேணும், எதைத் தட்டிக் கழிக்க வேணுமெண்டதையும் அவையே தீர்மானிச்சிட்டால், நாங்கள் தீர்மானிக்க இதில என்ன மிச்சமிருக்கு?

அது போகட்டும் வீடுங்கோ. இப்ப அரசியல் ஆய்வாளரெண்டால் யாபாரம் கொடிகட்டிப் பறக்குது. நீங்களும் ஒரு அரசியல் ஆய்வாளரானால் என்ன என்கிறன் நான்.

அது ரொம்ப சுலபமுங்கோ. நான் சொல்லித்தாறன் சூட்சுமத்தை.

உதாரணத்துக்கு நீங்கள் ஒரு பேட்டி நிகழ்ச்சி நடத்திறீங்களெண்டு வைச்சுக் கொள்ளுங்கோ. என்ன நிகழ்ச்சியா? என்னவாவது இடி, மின்னல், மழை, வெள்ளம் எண்டு பெயரைப் போட்டு நடந்துங்கோ. பெயர் முக்கியமில்லை. நிறுவனத்தின்ர பெயரும் தரமும் எப்பிடிக் கெட்டுப்போனாலும் போகட்டும். நீங்கள் பெரியாளாகிறதுதான் முக்கியம்.

முதலில, நடுநிலை, கிடுநிலை, பத்திரிகை தர்மம் எல்லாத்தையும் மனசிலயிருந்து தூக்கி அப்பிடியே ஒரு குப்பைக் கூடைக்குள்ள போடுங்கோ. மனசே ஒரு குப்பைக் கூடை தான் எண்டிறியளா? அப்ப அதுகள் தாங்களாவே வெளியால பாஞ்சு ஓடியிடும், பிரச்சினையில்லை.

இப்ப என்ன பண்ணுறீங்களெண்டால், நாலு பேரைக் கூட்டிக்கொண்டுவந்து வைச்சு "சமாதானம் இன்னும் ஏன் வரயில்லை?" எண்டு கொஞ்சம் கடுப்பாக் கேளுங்கோ. ஒவ்வொருவரும் ஏதேதோ காரணங்களெல்லாம் சொல்லுவாங்க. நீங்க என்ன செய்ய வேணுமெண்டால், அவைக்கு மேல நாலு பிழை பிடிச்சு, நீங்களெல்லாம் உருப்படியா ஒண்டும் செய்யேல்லையெண்டமாதிரி கதைய முடிச்சு அனுப்புங்கோ. இந்த அரசியலிலயோ, போராட்டத்திலயோ, நீங்க ஒரு துரும்பளவு தன்னும் சம்பந்தப்படாமலே, மற்றவங்கள் எதுவுமே செய்யேல்லையெண்டு குற்றம் சாட்டுற ஒரு நீதிபதி ஸ்தானத்துக்கு நீங்க போயிடுவீங்க. எப்பிடி ஐடியா?

கேள்வி கேக்கிறதுக்கு ஒரு ரெக்னிக் இருக்கு. அதாவது தன்ர முடிவையும் அதிலயே பிணைச்சு கேள்வி கேக்கிறது. எங்கட பீ.பீ.சீ. அக்கா ஒருவ இதில வலு புலி. "நீங்கள் ஏன் சமாதானத்துக்கு முட்டுக்கட்டையா இருக்கிறீங்கள்?" எண்டு அவ கீச்சிடக் கத்திற மாதிரி ஒரு கேள்வி கேப்பா பாருங்கோ, கேக்கப்பட்டவர் திணறிப் போவார். இந்தக் கேள்வியில, நீங்கள் சமாதானத்துக்கு முட்டுக்கட்டையா இருக்கிறீங்கள் எண்ட ஒரு குற்றச்சாட்டை தானே சுயமா முடிவு செய்து ஒரு அறிவிப்பாச் செய்துகொண்டு, ஏன் எண்ட ஒரு சொல்லச் செருகி அதக் கேள்விபோல ஆக்கி விடுவா. இதல ஒரு அறிவிப்பும் கேள்வியும் சேர்ந்திருக்கிற தன்மையப் பிரிச்சுக் காட்டி, உந்த முடிவு பீ.பீ.சி. நிறுவனம் எடுத்த முடிவோவெண்டு யாராவது திருப்பிக் கேட்டிருந்தால் அவ வில்லங்கத்தில மாட்டுப் பட்டிருப்பா எண்டது வேற விசயம். ஆனால் எங்களில அப்பிடி யொரு கெட்டிக்காரரும் இல்லையெண்டதால பயப்பிடாமல் இந்த ரெக்னிக்க நீங்களும் ஃபலோ பண்ணலாம்.

எனக்கு இதெப்பிடிப் பிடிபட்டதெண்டு கேப்பியள். படிக்கிற காலத்தில ரியூசன் மாஸ்டர் என்னப்பாத்து, "எடே முட்டாள், நீ பீஸ் கட்டிட்டியா" எண்டு கேப்பார். ஓமெண்டால் நான் முட்டாள். இல்லையெண்டால் பீஸ் கட்டாததுக்கு அடி விழும். ரெண்டு வளத்தாலயும் மாட்டிற கேள்வியிது. அதத்தான் அக்கா இப்ப எடுத்து வீடுறா.

ஆனால் எல்லாரையுமே இப்பிடி ஒற்றை விரல் காட்டி மிரட்டிக் கொண்டு போனால் யாராவது விரலைக் கடிச்சுப்போட்டப் போறாங்கள், கவனம். "பெரிய" இடங்களச் சந்திக்கக்க காலுக்குக் கீழ நிண்டு குழையவும் தெரியவேணும். குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால குட்டு வாங்கினதப் பெருமையாத் தான் நினைக்க வேணும். அங்க போய் கேள்வி கேக்கிறதுக்கும் கொஞ்சம் பக்குவம் வேணும். நான், போடுறமாதிரிப் போடுறன், நீங்கள் அடிக்கிற மாதிரி அடியுங்கோவெண்ட கணக்கா, சிக்ஸர் அடிக்கத் தக்க மாதிரி, சிலோபோல் போட்டுக் குடுக்க வேணும். நெளிஞ்சோ, குழைஞ்சோ, வளைஞ்சோ நாலு சொல்லைக் கையேந்தி வாங்கிட்டீங்களெண்டால், பிறகென்ன, நீங்களும் பெரிய மனிசர் தான். எந்தக் கேள்வியுமில்லாமல் அரசியல் ஆய்வாளரெண்டு பட்டம் குத்திக் கொள்ளலாம். கெரியோன்! பெஸ்ட் ஒப் லக்!

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்தவாரம் உங்கள் பலன்

10.11.2002 தொடங்கி 16.11.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

துலாம் – சூரியன், வெள்ளி, புதன், விருட்சிகம் – கேது, இடபம் – இராகு, மிதுனம் – சனி, கர்க்கடகம் – வியாழன், கன்னி–செவ்வாய்.

16.11.2002 இல் விருட்சிக சூரியன், புதன், சந்திரன், மகம், இடபம், மீனம், இராசிகளில் சஞ்சரிப்பார்.

**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக் குறை நீங்கும். வெளியிடப் பிரயாணங்களில் அவதானம் தேவை. அன்னியர் உதவியுண்டு. உத்தியோகத்தில் சிலர் திடீர் மாற்றங்களைப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

**இடபம்**

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) குடும்பத்தில் மறைமுக எதிர்ப்புகள் தோன்றும். தொழிற்சாலையில் பணவிரயம் ஏற்படும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்கள் கல்வியில் குழப்பமடைவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல: 7.

**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முதற்கால்) தொழில் கஷ்டம் உண்டு, பணவரவு திருப்பதி தராது. பெரியோர் பகையுண்டு. உத்தியோகத்தர்கள் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்குக் கூடிய உற்சாகம் அளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் நிலை சிரமம் உண்டு. பணவரவு வார இறுதியில் சிறப்படையும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) மன அமைதி குன்றும், குடும்பத்தில் செலவினம் அதிகரிக்கும் பிறரால் கஷ்டங்கள் சேரும். உத்தியோகத்தர்கள் சில பிரச்சனைகளை எதிர்கொள்வர். மாணவர்கள் கல்வியில் மந்தம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

**கன்னி**

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் முன்னேற்றம் உண்டு. பணவரவு தாமதமாகும். வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்க்கவும் உத்தியோக நிலையில் மனக்குறைகளுக்கு இடம் தரும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 2.

**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை. பிள்ளைகளால் கவலை, பொருள் வரவு தாமதம், கடன் தொல்லையுண்டு உத்தியோகத்தர்கள் திட்டமிட்டுக் கருமங்களைச் செய்யவும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 4.

**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) வீண் விரயம், தொழில் பிரச்சனை, மறைமுக எதிர்ப்பு, அன்னியர் உறவு. உத்தியோகத்தர்கள் மனக் கலக்கம் அடைவர். மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை உருவாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் அக்கறையுடன் செயற்படுவது நல்லது.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.

**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவருவாய் உண்டு. பெரியோர் உதவியும், காரியானுகூலமும் ஏற்படும். உத்தியோகத்தர்கள் எதையும் கவனமுடன் செய்யவும். மாணவர்களுக்குக் கல்வியில் சிறு தடை ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 7.

**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) அன்னியர் நட்பால் தொல்லையுண்டு. பெரியோர் பகை கொள்வர். வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் ஏற்பட்டிருந்த தடைகள் சிலருக்கு விலகும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 5.

**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) மனக் குறை நீங்கும், தொழில் முயற்சி பலிதம் பெரியோர் தக்க தருணத்தில் உதவுவர். உத்தியோகத்தர்கள் இடமாற்றத்துக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் மந்த நிலை, குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை, பணக்கஷ்டத்திற்கு இடமுண்டு. உத்தியோக ரீதியாக மேலதிகாரிகளின் தொல்லையுண்டு. மாணவர்கள், கல்வியில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)



ஜுவல்ஸ்
ஸ்ரீ கல்யாணி
SRI KALYANY JEWELLS
புன்னாலை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
335657



# ஆளுயரக் கூந்தல்

27 வயதான இந்த ஜேர்மன் யுவதியின் கூந்தல் அவரது உயரத்திற்கே வளர்ந்திருக்கிறது. பிறந்தது முதல் இவர் தனது கூந்தலை வெட்டியதில்லை. வளரட்டும் வளரட்டும் என்று விட்டு இன்று ஆளுயரத்திற்கு வளர்ந்து கிடக்கிறது.

துருக்கியில் பிறந்த மெலிக்கி உன்சால் என்ற இந்த யுவதி தற்போது ஜேர்மனியில் சட்டம் பயின்று வருகிறார்.

சட்டக் கல்லூரிக்கு இத்தனை பெரிய கூந்தலுடன் சென்று வருவது சிரமமாகத் தோன்றினாலும் அதை வெட்டும் எண்ணம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இவரது குடும்பத்தில் பலருக்கும் இவ்வாறு நீளமான கூந்தல் இருக்கிறது. பரம்பரை அலகு தொடர்பான காரணிகளின் அடிப்படையிலேயே இவருக்கு இவ்வாறு நீளமான கூந்தல் கிடைக்கப்பட்டிருக்கிறது.

(படஉதவி- அப்துல் றசூல், நிந்தவூர்)



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் பின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331






# பாலூட்டும் தந்தை

ஒரு தந்தை தனது குழந்தைக்குப் பாலூட்டுகிறார். இந்த அதிசயம் இலங்கையின் மத்திய மலைநாட்டின் வலப்பனை என்ற இடத்தில் நடந்து வருகிறது.

பி.விஜயரட்ணவின் மனைவி சிறியாவி குசுமலதா தனது இரண்டாவது குழந்தைப் பிரசவத்தின் போது உயிரிழந்து விட்டார். அதன் பின்னர் இரண்டு பிள்ளைகளையும் பாலூட்டி வளர்ப்பதில் விஜயரட்ணவுக்குப் பலத்த பிரச்சனை ஏற்பட்டது. ஒன்றரை வயதான முதற் குழந்தை புட்டிப் பால் குடிக்க மறுத்து பசியால் அழத் தொடங்கியது. பலமுறை முயற்சி செய்தும் எந்தவொரு உணவையும் அக் குழந்தைக்குக் கொடுக்க முடியாமல் போனது. அப்போது அக் குழந்தையை ஆசுவாசப்படுத்த தனது மார்புடன் தூக்கி அணைத்துக் கொண்டார் விஜயரட்ண. அவரது சிறிய மார்புக் காம்புகளிலிருந்து அக் குழந்தை பாலை உறிஞ்சிக் குடித்தது. இந்த அதிசயம் தற்போதும் நிகழ்ந்து வருகின்றது. குழந்தை வயிறு நிரம்ப பால் குடித்துப் பசியாறுகிறது. இவ்வாறு ஆண் ஒருவரால் குழந்தைக்குப் பாலூட்ட முடியுமா? என்ற கேள்விக்கு விஞ்ஞானரீதியில் பதிலளிக்கும் குருநாகல் ஆதார வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர்.கமால் ஜெயசிங்க, "புறோலக்ரின் Prolactinஎன்ற ஹோமோன் உடலில் அதிகளவு சுரக்கும் போது ஆண் ஒருவராலும் பாலூட்ட முடியும்" என்று கூறுகிறார்.

பெண்களுக்குப் பால் சுரக்கக் காரணமாக இருக்கும் ஈஸ்ரஜன் ஹோமோன் சாதாரணமாக ஆண்களின் உடலிலும் காணப்பட்டாலும் அது செயற்படுவதில்லை. மூளையின் பிற்றுயிட்டரி பகுதியில் உருவாகும் புறோலக்டினோவா காரணமாக புறோலக்ரின் என்ற ஹோமோன் சுரந்து ஆண்களின் மார்பகங்களும் வளர்ச்சியுற்றுப் பால் சுரக்க முடியுமெனக் கூறப்படுகின்றது.

இத்தகைய ஏதேனுமொரு அசாதாரண உடல் இரசாயன மாற்றமொன்றின் காரணமாக விஜயரட்ணவின் உடலில் பால் சுரக்க முடியுமென மருத்துவர்கள் கூறுகின்றனர். எவ்வாறெனினும் தான் செல்லும் இடமெல்லாம் இந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு செல்கிறார் விஜயரட்ண.



# கொக்கோயின்

பெண்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தடைசெய்தும், இன்னும் உள்ள பல்வேறு வழிகளிலும் இஸ்லாமிய சட்டத்தை அமுல் செய்வதாகக் கூறி கடுமையான விதி முறைகளுக்குள் மக்கள் வாழவைக்கப்படும் நாடு ஆப் கானிஸ்தான். இப்போதுள்ள வடக்கு கூட்டணியினரின் ஆட்சி ஓரளவு பரவாயில்லை. முன்னர் தலிபான் நிருவாகத்தில் தனி மனித உரிமைகள் மார்க்கத்தின் பேரால் மிக மோசமாக மீறப்பட்டன. ஆனால், உலகத்திற்கு 75 சதவீதமான போதைப் பொருளை வழங்கும் நாடு ஆப்கானிஸ்தான்தான். இத்தனைக்கும் இஸ்லாத்தில் போதைப் பொருளுக்குக் கடுமையான தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் தலிபான் ஆட்சி வீழ்ச்சி கண்டதோடு வடக்கு ஆப்கானிஸ்தானின் பல பகுதிகளிலும் அதிக அளவில் கொக்கோயின் பயிரிடப்பட்டிருக்கிறது. நல்ல விளைச்சலும் கிடைத்திருக்கிறது. முன்னைய ஆண்டுகளை விட 17 சதவீதம் கொக்கோயின் உற்பத்தி ஆப்கானில் அதிகரித்திருக்கிறது. தலிபான்களால் தடைசெய்யப்பட்டிருந்த போதைப்பொருள் உற்பத்தி அங்கு ஆட்சி மாறியதும் மிக வேகமாக வளர்ந்துவிட்டது. கந்தகாருக்குக் கிழக்காகவுள்ள ஓரிடத்தில் கொக்கோவின் செடிகளுக்கு மத்தியில் நடந்து செல்கிறார் ஒரு விவசாயி.

# ஈராக்கின் கோல் கீப்பர்

ஈராக் என்றதும் சதாம் ஹுஸைனை மட்டும்தான் பலருக்கும் தெரியும். ஈராக் நாட்டில் பொருளாதாரத் தடையினால் ஏற்பட்ட நெருக்கடிகள், அமெரிக்காவின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அங்கு விளையாட்டுப் போட்டிகளும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் தாராளமாக நடைபெற்று வருகின்றன. ஈராக் பெண்களின் உதைபந்தாட்ட அணி சமீபத்தில் அயல்நாடுகள் பலவற்றுக்கும் சென்று உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு கொண்டது.

ஈராக் பெண்கள் உதைபந்தாட்ட அணியின் கோல்காப்பாளர், போட்டியொன்றின் போது பந்தைத் தடுக்க எடுக்கும் முயற்சிதான் இது.



# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



விக்டர்-சியாளி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விஷான் தனது முதலாவது பிறந்தநாளை 10.11.2002 அன்று Rue De Vevery 1630 Bulle, சுவிஸில் கொண்டாடுகிறார். இவரை லக்ஷ்மன் தொட்டப்பா- நிஷாந்தி தொட்டம்மா, மேரிமாகிறேட் அப்பம்மா, பாலேந்திரன் அப்பச்சி, ரஞ்சனி அம்மம்மா, மாமாமார் மாணிக்கநாதன், நிஷாந்தன், பிரான், டிலுஷன், கபிலேஷ்,

**விஷான் மிதுஷெலன் 07.11.2002**

மதுஷன், அக்காமார் மிதுஷா, ரக்சனா, அபி, ஷியாம், அம்மம்மாமார், பெரியம்மாமார், மாமாமார், (திருமலை) எல்லோரும் மாதாவின் ஆசியுடன் வளமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் நவ. 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.